
கல்கி
KALKI
5.6.1966
35 காசு

நாகரீகமாக விளங்குவோருக்கான நல்லாடைகள்



இதமும் குளுமையும் வாய்ந்த பருத்தி ஆடைகள் என்றும் ராஜேஷ் பருத்தியை மிஞ்சுவதற்கு ஏதுவுமேயில்லை. எடுப்பாக மனங்கவரும் பல்வேறு கோல திறுசுகள்-வியப்பூட்டும்-சித்திர வடிவச் சிறப்புள்ள பிரிண்டுகள். மென்மையும், எழிலும், நீடித்துழைக்கும் தன்மையும் பிரதிபலிப்பவை.

பற்புருத்தி வாங்குங்கள் ராஜேஷ் துணிகள்

ராஜேஷ் டெக்ஸ்டைல் மில்ஸ் லிட்., பம்பாய்-13

ரோஹித் க்ரூப் என்டர்ப்ரைஸ்

ராஜேஷ் டெக்ஸ்டைல்ஸ்

இப்பொழுது நடைபெறுகிறது !



ஜூன் 3-ந் தேதி முதல்

சென்னை கிருஷ்ணவேணி, மகாராஜாவிலும்

பவ
கார்த் - 23
ன் - 5

கல்கி



நினைவுத் திரையில்...

திருச்சி ஜெயிலில் பெரிய வசதிக்குறைவு என்று சொல்லக் கூடியதாயிருந்தது தண்ணீர்ப் பஞ்சம் தான். ஆனால் இந்தத் தண்ணீர்ப் பஞ்சம் காரணமாக ராஜாஜியிடம் ஒரு அரிய பாடத்தைக் கற்றுக் கொள்ள முடிந்தது. ஒரே ஒரு பக்கெட் தண்ணீரைக் கொண்டு எப்படிச் சுத்தமாக ஸ்நானம் செய்து, துணி தோய்த்து முடிக்கலாமென்பதை ராஜாஜி தம் உதாரண மூலத்தில் கற்றுக் கொடுத்தார்.

— மூன்றுமாதக் கடுங்காவல்
கல்கி, 16-3-42

பொருளடக்கம்

தொழில் துறையினருக்கு	—	7
என்ன சேதி?	—	8
ராஜாஜியின் கருத்துக்கள்	—	8அ
நானெனும் அகந்தை....	—	10
பல்கலைப் பக்கம்	—	14
குமரிப் பெண் (சினிமா)	—	17
தீயும் திருட்டும்	—	18
சிவனருட் செல்வர்	—	23
அவள் பெண்	—	30
யாத்திரை	—	38
மலேசியா மாநாடு	—	49
சேவைக்கு ஒரு சகோதரி	—	57
நாடகமே பிரசாரம்!	—	62
வெற்றித் திருநகர்	—	66
அவனுக்காக அல்ல	—	74
வட்ட மேஜை	—	80

'கல்கி'யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


சோஷலிஸக் கட்சிகள் என்னோடு வருக!
வசியகீதம் பலிக்கவில்லை!
பிரஜா சோஷலிஸ்ட் கட்சி
PSD
SSP
சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சி
ஜோசியத்தில் எனக்கு நம்பிக்கையில்லை.
கருத்துவேற்றுமையுள்ளவர்கள்
காங்கிரஸைவிட்டு
வெளியேறட்டும்---
நான் பதவியைவிட்டு
இறங்க எப்போதும்
தயார்---
பிரசார மந்திரங்களால்
பயன் கிட்டாது!
நேரு புராணம்
PK

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

மலர் 25 ● இதழ் 45



தொழில் துறையினருக்கு

ராஜாஜி

சில கட்டுப்பாடுகள் இருக்க வேண்டியது அவசியம் என்பதை ஒப்புக்கொள்ளுகிறோம். சர்க்கார் என்று ஒன்று மக்களை ஆளவேண்டியது அவசியம் என்பதையும் ஒப்புக்கொள்கிறோம்.

இதனால் எல்லாவற்றுக்குமே கட்டுப்பாடுகள் இருக்க வேண்டுமென்றோ, ஜனநாயகத்தின் இடத்தில் அடிமை ராஜ்யத்தை ஏற்படுத்த வேண்டுமென்றோ ஆகாது.

தேசம் சுபிட்சமடைவதால்தான் ஏழைகளுக்குக் கஷ்ட நிவாரணம் கிடைக்கும், வியாபாரமும் தொழிலும் சுதந்திரமாக இயங்கினால்தான் தேசம் சுபிட்சமடையும் என்று நாம் நம்புகிறோம். இதனை வாக்காளர்களுக்கு எடுத்துச் சொல்கிறோம்.

சுதந்திரக் கட்சியைத் தொடங்கியபோது அதற்குப் பிரதிகூலமான சூழ்நிலை இருப்பதை நான் எண்ணிப் பார்க்கவில்லை. ஓரளவுக்கு அசட்டுத் தைரியமான சாகஸமாகவே இதைச் செய்தேன். கட்சிக் கொள்கைகளிலுள்ள நியாயத்தின் காரணமாக அது போதிய பலம் பெறும் என்றும், எனவே என் பொறுப்பு மிகவும் பாரமாயிராது என்றும் எண்ணினேன். பொறி தானே தீயாகப் பிடித்துக் கொண்டு வளரும் என்று நம்பினேன்.

சுயநலனுக்காக ஒன்று சேர்ந்துள்ள ஒரு கோஷ்டியே இக்கட்சி என்று நேருஜி எண்ணினார். தொழில்களை வளர்ப்பது கட்சியின் திட்டமான படியால், எல்லாத் தொழிலதிபர்களும் வியாபாரிகளும் இக்கட்சியில் சேர்ந்து நிறைய நிதி உதவி செய்வார்கள் என்றும் கட்சி பலமடைந்து கொண்டே போகும் என்றும் எண்ணினார். எனவே இதைப் 'பணக்காரர் கட்சி' என்று கூறினார். நிர்வாகத் துறையில் அநுபவம் வாய்ந்தவர்களும் கட்சிக் கொள்கைகளை ஆதரித்ததைக் கண்டார் நேருஜி. அநுபவம் மிக்கவர்கள் வயதில் முதிர்ந்தவர்களாயிருந்தபடியால் இதைக் 'கிழவர் கட்சி' என்றும் அவர் கூறினார்.

பெர்மிட் — லைசென்ஸ் — கோட்டா முறையால் தொழில் துறையினருக்கு ஆள்கிற கட்சியிடம் ஏற்பட்டுள்ள அச்சம் சுதந்திரக் கட்சிக்குப் பெருத்த பலம் தராதவாறு அவர்களைத் தடுத்து நிறுத்தும் என்பதை நேருஜி உணரவில்லை. வர்த்தகத்துக்கும் தொழிலுக்கும் மொத்தத்தில் என்ன நடந்தாலும், தொழிலில் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் பெர்மிட்-லைசென்ஸ் முறையின் கீழ் தங்கள் நலனையே கவனித்துக் கொள்வார்கள் என்று நேருஜி எதிர்பார்க்கவில்லை. தமது சோஷலிஸம் ஒரு சர்வாதிகாரக் கொடுங்கோன்மையாகும் என்பதை நேருஜியே காணவில்லை. சுய முன்னேற்றத்தை மட்டும் விரும்புவோர் அனைவரையும் காங்கிரஸின் ஏக-கட்சி ஆட்சி தன்பால் இழுத்து வியாபாரத்தையும், வியாபாரிகளையும் கட்டுப்படுத்தி வைக்கும் என்பதை அவர் காணவில்லை.

ஒவ்வொரு மனிதனின் பொருளாதாரத்தையும் ஆளும் கட்சி கட்டுப்படுத்தத் தொடங்கியபோது அது மக்களின் எதிரியாகவே ஆகிவிட்டது. தேசத்தை ஆளுவதோடு திருப்தி அடைந்து, வியாபார சுதந்திரங்களைக் குலைக்காமலிருந்த அந்நிய ஆட்சியாளரை விட, மக்களின் அடிப்படை உரிமைகளைக் கவர்கிறவர்கள் மோசமானவர்கள்.

ஒத்துழையாமைக் கொள்கைகள் மட்டுமே சுதந்திரத்தை மீண்டும் ஏற்படுத்தும். எனவே விடுதலை பெற வேண்டுமாயின் வர்த்தக சமூகத்தினர் அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதில்லை என்று முடிவு செய்து, அதை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும்.

காங்கிரஸ் கட்சி மீண்டும் ஆட்சிக்கு வருமாயின் அக்கட்சிக்கு நிதி உதவாதவர்களையும், சுதந்திரக் கட்சிக்கு

உதவியவர்களையும் பழி வாங்கும் என்று பயப்படுவதற்கு ஆதாரமில்லை. பெரிய அளவில் ஒத்துழையாமை நடைபெற்றால் அதற்கு எதிராகச் சர்க்காரால் பழி வாங்கும் நடவடிக்கைகள் எடுக்க முடியாது. இத்தகைய அவமானகரமான நடவடிக்கையை மேற்கொள்ள ஆள்கிற கட்சி துணிச்சல் பெற்றிராது. எனவே தொழில் துறையினர் காங்கிரஸுக்கு நிதி உதவ மாட்டோமென்று தைரியமாக மறுதலிக்க வேண்டும். அடிமை நாடாகி விட்ட போதிலும் இங்கு இன்னமும் ஓரளவுக்குப் பத்திரிகை சுதந்திரம் இருக்கிறது. பொது மக்களின் கருத்துச் சுதந்திரமும் இருக்கிறது. இவற்றுக்கு ஆள்கிற கட்சி முகம் கொடுத்தாக வேண்டும்.

என்ன சேதி?

இந்து சமயப் பேரவை

வாழ்க வள்ளுவர்!

ஐயப்பனுக்கு ஆலயம்

இந்து மதத்தினர் நல்ல சமய உணர்வு பெறுவதற்காகவும், தமது மதத்தை விட்டு நீங்காதிருப்பதற்காகவும் சமீப காலமாக மடாதிபதிகள் பலரும் சீரிய முயற்சிகள் செய்து வருகின்றனர். இவற்றுக்கு ஒரு சிகரம் போல் இம்மாதம் 13ந் தேதியன்று சென்னையில் மடாதிபதிகள் மகாநாடு ஒன்று நடக்கவிருக்கிறது. அன்று மாலை மயிலை பி. எஸ். ஹைஸ்கூலில் சமய சரித்திரத்தில் முக்கியத்துவம் பெறப் போகும் ஒரு சம்பவம் நிகழவிருக்கிறது. ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகளும் சைவ - வைஷ்ணவ - மத்வ மடாதிபதிகள் பலரும் ஒரே மேடையில் தோன்றி மக்களுக்கு நல்லுரை வழங்கப் போகிறார்கள். தமிழக முதலமைச்சர் ஸ்ரீ பக்தவத்சலம் அவர்களும் இந்த 'இந்து சமயப் பேரவை'யில் பங்கு கொள்கிறார். ஒரே இலட்சியத்தை அடைய உதவும் பல நெறிகளைச் சேர்ந்த துறவிகளை ஒரே சமயத்தில் தரிசித்து, அவர்களது உபதேசத்தைப் பெறும் இம்மகத்தான வாய்ப்பை மக்கள் பூரணமாகப் பயன்படுத்திக் கொள்வார்களாக!

ஃ ஃ ஃ


'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு' என்ற பெருமை இந்நாடு முழுவதற்கும் உண்டு எனில், அதனிலும் ஒரு பாகமான மயிலை இப்பெருமைக்கு மேலும் அதிகமாக உரிமை பெற்றுள்ளது. தமிழகத்தின் மாமுனிவர் மயிலையில்தான் வாழ்ந்து தெய்வத் திருக்குறளைப் படைத்தார் என்று கருதப்படுகிறது. இவ்விடத்தில் பொய்யாமொழிப் புலவருக்கு ஒரு திரு உருவச் சிலை அமைவது பொருத்தமன்றோ? இந்த நல்ல காரியத்தைச் சென்னை மாநகராட்சி செய்ய முன்வந்திருப்பதைப் பாராட்டுகிறோம்.

பாரத ராஷ்டிரபதி என்ற முறையிலும், தத்துவ ஞானி என்ற முறையிலும் சிலையைத் திறந்து வைக்கப் பூரணத் தகுதி பெற்ற டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் தமது ஆசிவந்த கரங்களால் இச்சிலையை இம்மாதம் இரண்டாந் தேதி திறந்து வைக்கிறார். இந்த நன்னாளிலிருந்து உலகமெல்லாம் பரவியுள்ள திருக்குறளின் உபதேசத்தை நம் உள்ளத்தில் உறைவித்துச் செயலில் பிரதிபலித்துப் பெருமை கொள்வோமாக! வள்ளுவரின் சிலை நாளையொட்டி வெளியாகும் இவ்விதழின் மேலட்டையில் தமிழகம் தந்த தலைசிறந்த பெருமகனையும், கற்புக்கரசியான அவரது இல்லாள் வாசுகியையும் வெளியிட்டு வணங்குகிறோம்.

ஃ ஃ ஃ

சிவபெருமானின் மூத்த குமாரனாகிய விநாயகப் பெருமானுக்குத் தமிழ் நாட்டில் வீதிதோறும் ஆலயம் உண்டு; இரண்டாவது குமாரனாகிய குமரப் பெருமானையோ தமிழ்த் தெய்வம் என்றே வழிபட்டு வருகிறோம். சில காலமாகச் சிவனாரின் மூன்றாவது மைந்தனாகிய ஐயப்ப சுவாமியும் தமிழ் நாட்டில் தமது சக்தியைப் பரப்பிப் பக்தியைப் பெருக்கி வருகிறார். சென்னை சபரிமலை சாஸ்தா பூஜா சமாஜத்தினர் ஐயப்பன் புகழ் பரப்புவதில் நல்ல தொண்டு ஆற்றி வருகிறார்கள். இவர்களின் நன்முயற்சிகளுக்கு உருவமாக, சிந்தாதிரிப்பேட்டை ஆதிபுரீசுவரர் தேவாலயத்தில் ஐயப்பனுக்கென ஒரு தனி ஆலயமும் எழும்பியுள்ளது. ஈசனுக்கும் மோகினியாக வந்த திருமாலுக்கும் உதித்த ஐயப்பனின் ஆலயம் ஆதிபுரீசுவரர் கோயிலுக்கும் ஆதிகேசவப் பெருமாள் கோயிலுக்கும் இடையே அமைவதும் ஒரு விசேஷப் பொருத்தமாகும். இந்த ஆலய கும்பாபிஷேகமும், இதனில் ஸ்ரீ ஐயப்ப சாஸ்தாவின் விக்கிரகப் பிரதிஷ்டையும் இம்மாதம் ஐந்தாம் தேதி காலை ஸ்ரீ சாந்தானந்த ஸ்வாமிகளின் முன்னிலையில் நடைபெறுகிறது. மெய்யன்பர்கள் விழாவில் பங்கு கொள்வதோடு கீழ்க்கண்ட விலாசத்துக்குப் பொருளுதவி அனுப்பி வைத்து இந்தக் கைங்கரியம் சிறப்புற நீடிக்க உதவ வேண்டும்: ஸ்ரீ சபரிமலை சாஸ்தா பூஜா சமாஜம், 17, மகமது அப்துல்லா சாகிப் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை—5.


Premium
TALC
J.K. Helene Curtis
புத்துணர்ச்சி மயம்
Premium
பிரீமியம் டால்க்
கருமையும் பொன்னிறமும் இணைந்த எடுப்பான டப்பாக்களிலுள்ள ஜே. கே. ஹெலன் கர்ட்டிஸ் பிரீமியம் டால்க் அத்தகையதே...கோடை நாட்களில் குளுமை நிறைந்த இதமான உணர்வை உங்களுக்கு அளிக்கும்...வசந்த காலப் புத்துணர்வோடு உங்களை நாள் முழுதும் வைத்திருக்கும்.
பிரீமியம் டால்க் — உலகப் புகழ் பெற்ற ஹெலன் கர்ட்டிஸ் ஸ்தாபனத்தின் தரமான அழகுசாதன அணிவகுப்பைச் சார்ந்தது.
J.K. Helene Curtis
PRESYN/HC/7A/66
ஏகபோக விநியோகஸ்தர்கள்: ஸ்பென்ஸர் & கோ. லிட்,



செய்திப் படங்கள்

1. மே மாதம் 9ஆம் தேதி யன்று லக்ஷ்மிபுரத்தில் கோபால கிருஷ்ண கோகலே அவர்களின் நூற்றாண்டு விழா விமரிசை யாக நடைபெற்றது. ராஜாஜி கோகலேயின் திருவுருவப் படத் தைத் திறந்து வைத்தார்.

★


2. நாதகரராஜா திருவெண் காடு திரு சுப்பிரமணிய பிள்ளை அவர்களின் அறுபதாண்டு நிறைவு விழா சமீபத்தில் சிறப் பாகக் கொண்டாடப் பட்டது. அவர் தமது இரு தர்மபத்தினி களுக்கும் மாங்கல்யதாரணம் செய்தது கண்டு உற்றமும் சுற்ற மும் மகிழ்ந்தன.

★

3. அமெரிக்க புல்பிரைட் ஸ்காலர் ஜான் பி. ஹிக்கின்ஸ் காஞ்சிபுரத்தில் திரு நாயனாப் பிள்ளை சங்கீத விழாவில் கலந்து கொண்டு கர்நாடக சங்கீதக் கச்சேரி செய்தார். அவரது நல்ல கச்சேரிக்கு வயலின் வி. தியாகராஜனும், மிருதங்கம் டி. ரங்கநாதனும், கஞ்சிரா வி. நாகராஜனும் பக்கவாத்தி யங்கள் வாசித்துச் சிறப்பித் தார்கள்.






ORIENT
ALL-PURPOSE

★

பம்பாயில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் ஸ்ரீமதி இந்திராகாந்தி அவர்கள் தம்மைத் தற்காப்புச் செய்து கொள்ள நேர்ந்தது. 'ஆசார' கம்யூனிஸ்டுகளின் சொற்றொடர்படி அவர் பழைய கொள்கைகளிலிருந்து 'திசை மாறிய தாக'க் குற்றம் சாட்டப்பட்ட போது, தற்காப்பு செய்து கொண்டார். தாம் திசைமாற வில்லை என்பதற்கு விளக்கம் தந்த இந்திரா அம்மையார், ''ஆயினும் பழைய கொள்கைகளிலிருந்து விலக வேண்டிய அவசியம் ஏற்பட்டால் அவ்வாறு செய்ய நான் தயங்க மாட்டேன்'' என்று மிகவும் சரியாகக் கூறினார்.

'கொள்கையை மாற்றிக் கொள்வதில்லை' என்றிருப்பதும், 'கூட்டுச் சேருவதில்லை' என்றிருப்பதும், இன்னும் இது போன்ற சொற்றொடர்களும்தான் நேர்மையான மக்களின் கழுத்தில் கட்டித் தொங்கவிடப்பட்ட பாறாங் கல்லாக உள்ளன. தேசத்திடம் பற்று வைத்து, தம் ஆற்றலுக்கு இயன்றதெல்லாம் செய்ய விரும்புபவர்களையும் இந்தச் சொற்றொடர்களே கட்டுப்படுத்தி வருகின்றன.

காங்கிரஸ் ஸ்தாபனத்தில் விரிசல் ஏற்பட்டுவிடவில்லை என்கிறார் ஸ்ரீமதி இந்திரா. ஆம், அவர் கூறுவது ஒரு விதத்தில் உண்மைதான். இன்னமும் காங்கிரஸ் சில மக்களைக் கவர்ந்திழுக்கத்தானே செய்கிறது? இம்மக்கள் எப்படிப்பட்டவர்கள்? காங்கிரஸில் சேருவதால் சில லாபங்களைப் பெற விரும்புபவர்கள். உண்ணிபோல், பிறர் உரிமையைப் பறித்து வாழ நினைப்பவர்களே இவர்கள்.

ஸ்தாபனத்தில் பிளவோ விரிசலோ இல்லை. ஆனால் தர்மநீதியில் அது விரிசல் கண்டுவிட்டது. தர்மபலத்தின் அடிவேர் வரையில் இவ் விரிசல் செல்கிறது. தேசத்துக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற பழைய அபிலாஷையை முற்றிலும் கழுவி வெளியேற்றியாகிவிட்டது. காங்கிரஸில் ஒட்டிக் கொண்டால் லாபம் உண்டு என்பதாலேயே அதற்காக உழைக்கிறார்கள். அதாவது சுதந்திரக் கட்சியானது உற்பத்தி அபிவிருத்திக்காகக் கோரும் லாப நோக்கமும், சுய அக்கறையும் ஒரு விசித்திரமான முறையில் காங்கிரஸிலேயே செயல்படுகின்றன! இந்த லாப நோக்கங்களையும், சுய அக்கறையையும்தான் காங்கிரஸார் தொழிலுக்கும் உழவுக்கும் அளிக்க மறுக்கிறார்கள்! பழைய மூலதனத்தில் செழிப்புடன் ஓடிக் கொண்டிருக்கும் தனியார் தொழிலாகிவிட்டது காங்கிரஸ்!

★

நகர்ப்புற நிலங்களின் மீது தமிழக அரசாங்கம் விதித்த வரியைச் சட்டவிரோதமானது என்று உயர்நீதி மன்றம் தடுக்காமல் காக்கும் பொருட்டு அவசர உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இப்போது நான் ஒரு வழக்கறிஞர் என்று உரிமை கொண்டாடுவதற்கில்லை. எனது சட்டஞானமில்லாத அறிவுக்குத் தோன்றுவதையே சொல்கிறேன்: அரசியல் சாஸனத்தில் ராஜ்ய சர்க்காரின் வரி அதிகார வரம்புக்குட்பட்ட 'நிலம்' என்று கூறப்பட்ட இனத்தில் நகர்ப்புற நிலம் அடங்காது என்றே தோன்றுகிறது. இந்த வரி, நிலத்தின் மீது விதித்த வரியாக இன்றி, சொத்தின் மீது விதித்த வரியாகவே தோன்றுகிறது. சாஸனப்படி சொத்து வரி மத்திய சர்க்காரால்தான் விதிக்கப்பட வேண்டும். ராஜ்ய சர்க்கார் ஒன்றின் நில ரெவின்யூ இலாகா இவ்வரி விதிக்க முடியாது. முதலீடு ஆகாமல் செல்வம் தேங்குவதைத் தடுத்து நிறுத்துவதற்காக மத்திய சர்க்கார் வரி விதிக்கலாம். எனினும் நிலம் என்பது ராஜ்ய சர்க்காரின் ஆணை எல்லையிலிருப்பது காரணமாக, ஒரு நகரில் மக்கள் வசிக்கும் வீடுகள் கட்டப்பட்ட நிலத்தின் மீதோ, அல்லது ஜனநெருக்கமுள்ள இடங்களில் வீட்டைச் சுற்றிலும் காற்றோட்டத்துக்காக உள்ள காலி இடத்தின் மீதோ ராஜ்ய சர்க்காரின் ரெவின்யூ இலாகா 'நில வரி' விதிப்பது அபத்தமாகவே தெரிகிறது.

இவ்விஷயத்தில் ராஜ்ய சர்க்காருக்குள்ள அதிகாரத்தை ஸுப்ரீம் கோர்ட்டோ,



அல்லது குறைந்தபட்சம் மத்திய சர்க்காரின் சட்ட அதிகாரிகளோ சோதித்துப் பார்க்க வேண்டும்.

★

ஏதோ ஒரு மாயமான முறையில் ஐந்தாண்டுத் திட்டங்கள் வறுமையுடன் போராடி அதை ஒழித்துவிடும் என்று கூறப்படுகிறது; ஒருவேளை இவ்வாறு நம்பப்பட்டும் வரலாம். இது உண்மையாகவே இருக்கலாகாதா என்று நாமும் ஆசைப்படுகிறோம். ஏனெனில் வறுமையை வெல்ல வேண்டும் என்பதே சுதந்திரக் கட்சியின் இலட்சியம். வறுமையுடன் போராடுவதென்றால் வேலை வாய்ப்புக்களைப் பெருக்க வேண்டுமென்று பொருள். தேர்தலுக்கு முந்தைய சில மாதங்களில் 'பிரசாதம்' விநியோகிப்பதும், மயக்க மருந்து தருவதும் வறுமை ஒழிப்பாகாது. தனி மனிதர்களின் தொழில் நிறுவனங்களின் மூலம்தான் வேலைகள் பெருக வாய்ப்பு உண்டு; மக்களின் வரிப் பணத்தைக் கொண்டு சர்க்கார் அதிகாரிகள் ஊழலாக நிர்வகிக்கும் பெரும் அரசாங்கத் தொழிலகங்களில் தேசத்துக்கு உபயோகமான வேலை வாய்ப்புக்கள் பெருகாது என்ற திடமான ஆதாரத்தின் மீது சுதந்திரக் கட்சி உறுதியாக நம்புகிறது.

காங்கிரஸ் ஆட்சியில் காணும் விரயமும், வரி உயர்வும், விலை உயர்வும் தனியார் தொழில்களில் மூலதனம் ஈடுபடுத்தப் பெறுவதைத் தடுக்கின்றன; இதனாலேயே ஏழைகளின் துயர் அதிகரிக்கிறது. புராதன அரசியல் சாஸ்திரத்தின்படியோ, நவீன ஆட்சி முறைப்படியோ விதிக்கப்படும் வரிகள் அல்ல இன்று நாம் காண்பவை. மூலதனத்தையே விழுங்குகிற—பொன் முட்டையிடும் வாத்தையே அறுக்கின்ற — வரிகளே இவை. பொருளாதாரத்தைச் சுதந்திரமாக விட்டு, சர்க்காரின் தண்டலைக் குறைத்தால் பல திசைகளில் தொழில்கள் பெருகி ஏராளமான வேலை வாய்ப்புக்கள் ஏற்படும். இது ஒன்றே வறுமையைத் தீர்க்கும் வழி. தேர்தல் உபாயங்கள் மக்களை ஏமாற்றுமேயன்றி உண்மையான உதவி புரியா.

★

அமெரிக்கப் பத்திரிகையொன்றின் கூற்றுப்படி, பெண்களுக்கு, அவர்களது ரத்தத்திலிருந்தே எடுத்துத் தயாரித்த மருந்தை ஊசி போட்டு, தாற்காலிகமாக மலடாக்கக் கூடும் என்று கொலராடோ பல்கலைக் கழகப் பேராசிரியர் ஸீமூர் காட்ஸ் கூறியிருக்கிறார். இப்போதைய கருத்தடை உபாயங்கள்போல் இது கர்ப்பிகளின் வேலை முறைகளைப் பாதிக்காது என்று கூறப்படுகிறது. காட்ஸ் கூறுவது எப்படியாயினும், கருத்தடை மருந்துகளினால் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்வது நாளுக்கு நாள் எளிதாகி வருகிறது. விரைவிலேயே இன்னும் எளிதாகும் என்று புதிய மருத்துவக் கண்டுபிடிப்புக்களிலிருந்து தெரிகிறது. கஷ்ட நிவாரணப் பட்டியலிலுள்ள மணமாகாத தாய்மார்களின் எண்ணிக்கை உயர்வதைப் பற்றிக் கவலைப்படும் 'க்ஷேமாபிவிருத்தி' ஆபீஸர்கள் இச்செய்திகளை வாழ்த்தி வரவேற்கிறார்கள். ஆனால் அதே சமயத்தில் இது போன்ற எளிய கருத்தடை உபாயங்களால் இளவயதினரின் நன்னடத்தை பாழாகும் என்று பெற்றோரும், பாதிரிமார்களும், நல்லறிவு போதிப்பவர்களும் விசாரப்படுவதாக மேற்சொன்ன அமெரிக்கப் பத்திரிகை கூறுகிறது. மற்ற நாடுகளை எச்சரிப்பதற்கு அமெரிக்கா ஓர் உதாரணமே. அமெரிக்காவில் மட்டுமின்றி உலகெங்கிலுமே இளைஞர்களை அதருமத்தில் ஈடுபடுத்தும் போக்கில்தான் 'நாகரிக சமுதாயம்' நடைபோடுகிறது. இதன் விளைவு எப்படியிருக்கும்?

★

வெளிநாட்டுப் பத்திரிகையொன்று கூறும் அடியிற்கண்ட விஷயங்களைத் தில்லியிலுள்ள மந்திரிகள் கவனித்தால் நலமாயிருக்கும்:

> சில கட்டுப்பாடுகள் இருந்தால்தான் திட்டமிட முடியும். ஆனால் இந்தியாவில் திட்டம் வகுப்பவர்களோ, 'கட்டுப்பாடுகள் வெறும் சாதனம் மட்டுமல்ல, அவையே இலட்சியம்' என்று எண்ணுகிறார்கள்.
>
> தனியார், சர்க்கார் இரு துறைகளிலுமுள்ள எல்லாத் தொழில்களுக்கும் ஒரு 'டைரக்டர்கள் குழு' போல் இந்திய சர்க்கார் செயல்படுகிறது. எவ்வளவு உற்பத்தி செய்ய வேண்டும், எத்தகைய பண்டங்களை உற்பத்தி செய்ய வேண்டும், என்ன விலைக்கு விற்க வேண்டும் என்பதையெல்லாம் அதிகார வர்க்கத்தினரே நிர்ணயிக்கின்றனர். சர்க்காரின் அங்கீகாரம் பெற்றால்தான் இந்தியாவில் புதுத் தொழிற்சாலைகளைத் தொடங்கவோ, பழையவற்றை விஸ்தரிக்கவோ முடியும்.
>
> உணவு குறித்தும், மக்கள் வாங்கி உபயோகிக்கும் வேறு பல பண்டங்கள் குறித்தும் விற்பனை—வினியோக விஷயமாகப் பல இறுக்கமான கட்டுப்பாடுகளை விதித்த சர்க்கார், இதன் விளைவாக 1966ம் ஆண்டில் தானே 50 கோடி மக்களுக்கு மளிகைக் கடையாகி விட்டது.
>
> அந்நிய மூலதனத் துறையில் இந்திய திட்டக் குழுவினரின் திருஷ்டி மிகவும் குறுகியதாக உள்ளது.
>
> சர்க்கார் தொழிலுக்கும் தனியார் தொழிலுக்கும் இடையே சுதந்திரப் போட்டி இருப்பதாகத்தான் கொள்கையளவில் சொல்லப்படுகிறது. ஆனால் நடைமுறையில் தட்டுப்பாடுள்ள பொருள்களைப் பயன்செய்து கொள்வதிலும் அந்நியச் செலாவணி பெறுவதிலும் சர்க்காருக்குச் சொந்தமான தொழிலகங்களுக்கே சலுகை காட்டப்படுகிறது.
>
> அந்நியச் செலாவணி பற்றாக்குறையும், இறக்குமதி வெட்டுக்களுமாகச் சேர்ந்து பல தொழிற்சாலைகளின் உற்பத்தியைக் குறைத்திருக்கின்றன. இயந்திரங்களுக்குப் புதிய பாகங்களை இறக்குமதி செய்ய முடியாத காரணத்தாலேயே பல தொழிற்சாலைகளில் வாரக் கணக்காக வேலை நடக்காதிருக்கிறது. உற்பத்திச் செலவும் ஏறிக்கொண்டே வருகிறது. 'வியாபார அறிவுக்குப் பதில் உத்தியோக அறிவைப் பிரயோகிப்பதால் ஒரு சுவாதீனமிழந்த விசித்திர மிருகம் போன்ற கொள்கை உருவாகியுள்ளது' என்று ஓர் அமெரிக்கர் கூறியிருக்கிறார்.
>
> இரண்டு மாதங்களுக்கு முன்பு சிமெண்ட் மீது கண்ட்ரோல் நீக்கப்பட்டது. அதிலிருந்து விலை அதே மட்டத்தில் உள்ளது. ஆலைகளில் உற்பத்தியும் பெருகியுள்ளது. பத்தாண்டுகளுக்கு முன்பு இதைச் செய்திருந்தால் இந்தியா இன்று சிமெண்ட் உற்பத்தியில் தன்னிறைவு பெற்றிருக்குமென்றும், சிமிண்ட் விலை இறங்கியிருக்குமென்றும் ஓர் இந்தியப் பொருளாதார அறிஞர் கூறுகிறார்.
>
> தொழிற்சாலைகளைத் திறம்பட இயங்கச் செய்வதெப்படி, உற்பத்தியான பண்டங்களைத் திறம்பட மக்களுக்குக் கிடைக்கச் செய்வதெப்படி என்பதே பிரச்னை. இவ்விரண்டில் ஒன்றைச் செய்யவும் இந்திய சர்க்காரின் உத்தியோக வர்க்கத்துக்குத் திறமை போதவில்லை.

இளைஞர்களின் கடமை

**ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகளின்
திருவுள்ளக் கருத்து**

இன்றைய ஹிந்து சமூகத்தில் ஒரு புரை போன்று ஓடி, சமூகத்தையே அரித்துக் கொண்டிருக்கும் வரதட்சிணைக் கொடுமையைப் பற்றி ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் மிகுந்த வேதனைப் படுகிறார்கள். இத்தீமையை அகற்றுவது ஹிந்து சமூகத்தின் மறுமலர்ச்சிக்கு மகத்தான ஒரு தொண்டு செய்ததாகும் என்று ஸ்ரீ சுவாமிகள் கருதுகிறார்கள்.

ஹிந்து மதத்தின் மேன்மையில் பரிபூர்ணமான நம்பிக்கையும் மனிதாபிமானமும் உள்ள ஹிந்து இளைஞர்களே தான் இந்தக் கடமையைச் செய்ய முன்வரவேண்டுமென்பது ஸ்ரீ ஆசார்யாளின் அவா.

திருமணம் என்பது நெடுங்காலப் பயிர். அத்துடன் எதிர்காலத்துக்கும் உத்தரவாதமளிக்கும் ஒரு தார்மிகப் பாதுகாப்பு. ஆகையால் திருமண விஷயத்தில் பெற்றோர்களோ, குடும்பத்தில் பெரியவர்களோ தேர்ந்தெடுக்கும் பெண்களைத்தான் பிள்ளைகள் மணந்து கொள்ள வேண்டும்.

அதே சமயத்தில் பிள்ளைகள் சமூகத்துக்குச் செய்ய வேண்டிய ஒரு கடமையும் இருக்கிறது.

வரதட்சிணை கொடுக்க வேண்டுமென்று பெண் வீட்டாரைத் தமது குடும்பத்தினர் கேட்டால் அந்தத் திருமணத்துக்குச் சம்மதிக்க முடியாது என்று பிள்ளைகள் கண்டிப்பாக மறுத்து விடவேண்டும். இதன் மூலம் அவர்கள் தம் குடும்பத்துக்குச் செய்ய வேண்டிய கடமை, சமூகத்துக்கும் மதத்துக்கும் செய்ய வேண்டிய கடமை ஆகிய இரண்டையும் நிறைவேற்றி விடுகிறார்கள் என்று சுவாமிகள் கருதுகிறார்கள்.


வரதட்சிணையின் கொடுமையால் பெண்ணைப் பெற்றவர்கள் படும் வேதனையை அகற்றுவதை நமது இளைஞர்கள் முக்கிய கடமையாக மனத்தில் கொண்டு, தாங்கள் வரதட்சிணை வாங்குவதில்லை என்று சபதம் செய்து கொண்டு அந்தச் சபதத்தைப் பூரணமாக நிறைவேற்றி வைக்க வேண்டும். இதனை அவர்கள் செய்வது இன்றியமையாததாகும்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் பக்தர்கள் தங்கள் வீட்டில் நடைபெறும் திருமணப் பத்திரிகையில், ''ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் அவர்களின் அனுக்கிரஹத்தை முன்னிட்டு'' என்று போடுவது வழக்கமாக இருக்கிறது.

வரதட்சிணை வாங்காதவர்கள்தான் திருமணப் பத்திரிகையில் இனி அம்மாதிரி போட வேண்டுமென்பது ஸ்ரீ சுவாமிகளது விருப்பம்.

மேலும் திருமணங்களில் ஏற்படும் செலவுகளைக் குறைக்க ஸ்ரீ ஆசார்யாள் கீழ்க்கண்ட யோசனையைக் கூறியிருக்கிறார்கள்:

திருமண அழைப்பு வந்தால் நண்பர்கள், உறவினர்கள் எல்லோரும் போகத்தான் வேண்டுமென்பதில்லை. பிரயாணத்துக்காகப் பணம் செலவிடுவதற்குப் பதிலாக மணமக்களுக்கு ஆசிகூறித் தம்மால் இயன்றதை ரொக்கமாக அனுப்பி விடலாம். இது பெண்களின் பெற்றோர்களுக்குப் பெரும் உதவியாக இருக்குமென்பதுடன் விருந்துச் சாப்பாடு முதலியவைகளுக்காக அதிகம் செலவிடாமல் தவிர்ப்பதற்கும் உதவியாக இருக்கும்.



வைகாசி அநுஷம் நமக்கெல்லாம் ஒரு நன்னாள். இன்று நம்மிடையே ஓரளவேனும் சத்தியமும் தருமமும் பக்தியும் அன்பும் ஆசாரமும் அடக்கமும் உள்ளனவெனில், அவற்றுக்கெல்லாம் காரணமான வஸ்து — ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் குருமூர்த்தம் — தோன்றிய திருநாள் அது. இவ் வைகாசி அநுஷத்தில் எழுபத்து மூன்றாவது பிராயத்தைத் தொடங்கும் மூவா மருந்துக்கு நம் அஞ்சலிகளை அளித்து அருள் நாடுகிறோம்.

நானெனும் அகந்தை விட்ட
நலத்தினைத் தெய்வம் வாழ்த்தும்!



வெம்பிடும் உள்ளந் தோறும்
அமைதிக்கு விதையை ஊன்றி
நம்பிடற் குரிய ராகி
நாமெலாம் வந்து வந்து
கும்பிடும் ஞானி யாகிக்
குலவுசங் கரர்எம் கோமான்
அம்புவி தனில்வந் துற்ற
அந்தநாள் பொன்னாள் அன்றோ?

பொருளினைத் தெளிவு செய்து
பொழுதினை மலர வைக்கும்
விரிகதிர்ச் செல்வன் தன்னை
வியந்து நாம்பேசி னால்தான்
தெரியுமோ பெருமை? கண்ணைத்
திறப்பதால் நமக்கே நன்மை!
அருள்நிறை ஐயன் பாதம்
அடைந்தவர் பிறந்த நாளை,

மகிழ்ந்துகொண் டாடும் அன்பர்
மனமெலாம் தெளியு மல்லால்
புகழ்வதால் தானோ காஞ்சிப்
புனிதரின் பெருமை கூடும்?
இகழ்வதால் இமய வெற்பும்
இடிந்துமே சரிந்து போமோ?
தகுதியால் இமயம் எங்கள்
சங்கர முனிவர் தாமே!

பிறப்பினால் எவரும் ஒன்றே;
பிறகவர் வாழும் வாழ்வின்
சிறப்பினால் மேன்மை வந்து
சேர்ந்திடும் அறிவீர் நன்றே!
நிரப்பினால் வயிற்றை; போதும்
என்றெவர் நினைப்பார்? மாய
மறைப்பெனும் திரைகி ழித்து
வாழ்வதே மனித வாழ்க்கை!

உண்பதே போதும்; ஆடை
உடுத்தலே போதும்; தூக்கம்
பின்பதே போதும் என்னல்
பெருமைதான ஆமோ?— பக்திப்
பண்பதே வேண்டும் — ஆளும்
பரம்பொருள் தன்னை எண்ணி
அன்பதே பெருக்கி வாழ
அமைந்ததே மனித வாழ்க்கை!



சௌந்தரா கைலாசம்



அறிவிலே தேர்ச்சி பெற்று
வானையே அளந்திட் டாலும்,
திருவிலே நாட்டம் வைத்துக்
கோடியாய்ச் சேர்த் திட்டாலும்,
கருவிலே உயிரை ஊட்டும்
கடவுளை உணரா ராகில்,
தெருவிலே புழுதியாக
முடிவது திண்ணந் தானே!

கெட்டோடி மாய வாழ்வில்
ஏமாந்து கேடு றாமல்
கட்டாத புலனைக் கட்டிக்
கண்முதற் புலனால், என்றும்
எட்டாத பொருளை எட்டி
இருப்பவர்க் கன்றோ, வந்து
கிட்டாத இன்பம் கிட்டும்;
கேளாத கானம் கேட்கும்?

வண்ணந்தான் ஏழென் றாலும்
வானவில் உண்மை யாமோ?
என்னதான் நூல்கற் றாலும்
எத்துணை அறிவுற் றாலும்
தன்னைத்தான் அறிவ தன்றோ
தக்கதோர் ஞானம்? அந்த
ஒன்றினைப் பக்தி ஒன்றால்
உறுவதில் சிறந்த துண்டோ?

கல்லுளும் நெல்லில் தானும்
கவிஞர்கள் பாடும் பாடற்
சொல்லுளும் பொருளில் தானும்
கடலிலும் இருளில் தானும்
அல்லுளும் பகலில் தானும்
அனைத்திலும் அவனே என்றும்
நல்லுளம் கொண்டால் அன்றோ?
நம்மனக் கவலை தீரும்?

முழங்கிடும் கடலில் உப்பு
முழுவதும் மாறக் கூடும்;
வழங்கியே உயிரைக் காக்கும்
வான்பொருள் நினையா ராகிக்
கலங்கிடும் மனிதர் நெஞ்சில்
கவலையோ மாறா தென்றும்!
தொழுதிறை நாமம் சொல்லத்
துயரெல்லாம் சொல்லா தோடும்!







வழுக்கிடும் களிமண் மேட்டில்
வாய்த்தநற் கோலாம்; ஞான
முழுமையை மறைக்க வந்து
முளைத்தபொய்த் திரைக்கு வாளாம்!
அழுக்கெனும் மும்ம லத்தை
அகற்றிடும் நீராம் பக்தி
தழைத்திடச் செய்தார் எங்கள்
சங்கரர் தவத்தி னாலே!

சித்தமே குழப்ப வைத்து,
ரத்தமும் சிந்தச் செய்து,
பக்தியை வெறியாய் மாற்றிப்
பார்ப்பவர் சிலபே ருண்டு!
உத்தமர் "காஞ்சி பீடம்"
பக்தியை ஊட்டும் போதே
பத்தியை பொருளொன்! றென்னும்
பண்பையும் ஊட்டு_வாரே!

எம்பாவை திருவெம் பாவை
ஏதிதிற் சிறந்த கோவை?
நம்புவீர் என்பார் அல்லர்
நயந்திரு "பாவை" இரண்டும்
செம்பொருள் மிக்க தென்பார்;
தெருவெலாம் முழங்க வைத்தார்;
வெம்பிடச் செய்யும் பேதம்
விளைந்திடா வகை செய்தாரே!

பாதையால் வேறு பட்டோர்
பகைமிறல் மோதி முட்டி
வேதனை பெருகா வண்ணம்
விழிப்புடன் உழைக்கும் சீலர்;
யாதுதான் வழியென் றாலும்
அடைந்திடும் பொருளொன்
றென்னும்
போதனை புரிந்த இந்தப்
புனிதரைப் போற்றுர் யாரே?

உலகினுக் கிடுக்கண் என்றே
உருகினர் ஐயன்; அந்த
நிலையினில் அருமருந் தாய்
ஞானசம் பந்தர் நெஞ்சில்
மலர்ந்ததோர் பதிகந் தன்னை
வழங்கினர் உருகி ஓத!
நலந்தரும் பாடல் கண்டால்
நாமெலாம் உய்வோம் அன்றே!

அஞ்சலென் றருளைப் பெய்யும்
அற்புதப் பொலிவே - தூய
செஞ்சொலால் நெறியைச் செப்பும்
சிந்தனைத் தெளிவே - மக்கள்



நெஞ்சகத் திருளை நீக்கும்
நிகரிலா ஒளியே - உன்னைத்
தஞ்சமென் றுற்றோம் - எம்மைத்
தாங்கிடும் தவமே! போற்றி!

ஈசனை நினைந்து நித்தம்
பூசனை புரிந்து முற்றும்
ஆசையைத் துறந்து ஞான
அமுதினை அடைந்தாய் - மக்கள்
மாசினைக் களைந்து தெய்வ
மாண்பினை உணர்ந்து வாழப்
பேசினை வேத சாரம்;
பேசரும் பெரியோய் போற்றி!

முழுப்பொருள் தனையு ணர்ந்து
அறிவிலே முதுமை யெய்தி
எழுபத்திரண்டைத்தாண்டி-தாயின்
எழில்மடி சரணம் என்று
தழுவிடும் சேயைப் போலத்
தனிப்பரம் பொருளைச் சார்ந்து
கழுவிட மாசொன் றின்றிக்
கனிந்த நற்கனியே போற்றி!

தனித்திடர்க் காட்டில் மெத்தத்
தவித்திடும் போது நித்தம்
இனித்திடப் பேசி நெஞ்சில்
இறையுணர் வேறச் செய்து
பனித்திடும் கண்க ளோடே
பரம்பொருள் தன்னை மாந்தர்
நினைத்திடத் தூண்டும் எங்கள்
பெரியவர் நீடு வாழ்க!

சங்கரர் நீடு வாழ
தாரணி தன்னில் இன்பம்
பொங்கிடும்; பக்தி யென்னும்
பூமிகப் பூக்கும்; வையம்
எங்கணும் சாந்தி வாழும்!
இதயங்கள் கோயிலாகும்!
இங்கிவை நிகழுமாறு
இறைவனே பார்த்துக் கொள்
வான்!

வானினை வாழ்க வென்று
சிறுசெடி வாழ்த்தல் போலும்
யானையை ஈசல் வாழ்த்தும்
அதிசயம் போலும் அன்றோ
ஞானியை "வாழ்க" வென்று
நானுமோர் வார்த்தைசொன்னேன்!
நானெனும் அகந்தை விட்ட
நலத்தினைத் தெய்வம் வாழ்த்தும்!





ஆழ்கடலுக்கடியில்.....!

சர்வதேச கடல் ஆராய்ச்சிக் கழகம் என்ற ஒன்று இருக்கிறது. 56 நாடுகள் இதில் பங்கு பெற்று, கடல் பற்றி ஆராய்ந்து புதுச் செய்திகளைத் தந்து கொண்டிருக்கிறார்கள். நமது மேற்குக் கடற்கரையை வந்து மோதும் அரபிக் கடலைப் பற்றி அவர்கள் ஆராய்ந்து சொல்லி இருப்பவையைப் பாருங்கள்:

'அரபிக் கடலுக்குள் இமயமலை உயரமுள்ள ஒரு மலை மூழ்கிக் கிடக்கிறது. இந்த மலைதான் ஒரு காலத்தில் ஆப்பிரிக்காவையும், ஆசியாவையும் தொடர்பு படுத்தும்படியாக அமைந்திருக்கக் கூடும். இந்தக் கடலில் 100 மீட்டருக்கும் கீழே பிராணவாயுவே இல்லை. ஆகவே, அதற்குக் கீழே எந்த உயிரினமும் இல்லை!'

ஆதாரம்: ஹிந்துஸ்தான் டைம்ஸ்


◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

நச்சரிக்கும் மனைவி தேவை

வியாபாரத்தில் துரிதமாக முன்னேறிய கனவான் தமது வெற்றியின் ரகசியத்தைப் பற்றிச் சொன்னது:

''வருடத்துக்கு மூன்று முறை காஞ்சிபுரம் பட்டுப் புடவை வேண்டும் என்று என் மனைவி நச்சரித்திரா விட்டால், நானும் இக்கனை கடினமாக உழைத்திருக்க மாட்டேன்!''

— மீனாட்சிகிருஷ்ணு



''குறளி''ல் எம்.எல்.ஏ....!

ஆச்சாரியா விநோபா பாவே அவர்களுக்கு, தமிழக பூதான யாத்திரையின் போது ஒரு நாள் அன்பர்கள் சிலர் திருக்குறள் அறிந்த நண்பர் ஒருவரை அறிமுகப்படுத்தினர். அவரை, ''எப்பொருள் எத்தன்மைத்தாயினும்'' என்று ஆரம்பிக்கும் குறளுக்கு உவமை கூறுமாறு ஆசார்யா விநோபா பவே அவர்கள் கேட்டார்.

''எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு'' என்று முழுச் செய்யுளையும் கூறி, கீழ்க் கண்டவாறு அந்த அன்பர் அதற்கு உதாரணம் தந்தார் :

''சிற்பியொருவன் கல்லில் நாயின் சிலையொன்றை அழகாகச் செதுக்கி வைத்திருக்கிறான். தூரத்தில் இருந்து பார்த்தால், அது அசல் நாய் போலவே காட்சியளிக்கிறது. ஆனால் உண்மையில் அது கல்லா, நாயா என்று கண்டு கொள்வதுதான் அறிவு.''

இந்த உவமையால் திருப்தியடையாத விநோபா, ''நான் ஓர் உதாரணம் கொடுக்கிறேன், பாருங்கள்'' என்று கூறி, ''ஒரு எம். எல்.ஏ.யும் என்னுடன் யாத்திரையில் (பூதான யாத்திரை) கலந்து கொள்கிறார். பார்த்தால் பூமி தானத்தில் மிகுந்த அக்கறையுள்ள தயாளுவான ஊழியராகவே அவர் காட்சியளிக்கிறார். ஆனால் உண்மையில் அவர் தமது எம். எல். ஏ. ஸ்தானத்தை அந்தத் தொகுதியில் ஸ்திரப் படுத்துவதற்காகவே என்னுடன் வருகிறார். இதுதான் மெய்ப்பொருள். இதனைக் கண்டுகொள்வதுதான் அறிவு'' என்று அவர் விளக்கினார்.

அங்கு கூடியிருந்தவர்கள் எல்லோரும் அதைக் கேட்டுக் 'கொல்'லென்று சிரித்து விட்டார்கள். — ''மேதைகள் தமாஷ்''

தகவல்: பொன் சீனிவாசன்




இவர்கள் பழக்கம்!



★ டாக்டர் ஜான்சன் என்னும் அறிஞர் வீதியிலே செல்லும்போது ஒவ்வொரு லாந்தர்க் கம்பத்தையும் தொட்டுக்கொண்டே செல்வாராம்! அப்படித் தொட்டுக் கொண்டு செல்வதால் தான் தாம் க்ஷேமமாய் இருப்பதாக நம்பினர் அவர்!



★ ஷெல்லிக்குக் காகிதக் கப்பல் செய்து தண்ணீரில் மிதக்க விடுவதென்றால் மிகவும் சந்தோஷம். பையில் எந்தக் காகிதம் இருந்தாலும் அதைக் கப்பல் செய்து விட்டு விடுவார். ஒருசமயம் பத்துப் பவுன் கரன்ஸி நோட்டையே கப்பலாக்கி விட்டாராம்!



★ ஔரங்கசீப்புக்குச் சங்கீதத்தைக் கேட்கவே பிடிக்காதாம்!



★ இங்கிலாந்தை ஆண்ட இரண்டாவது ஹென்றிக்குப் பூனையைக் கண்டாலே சிம்ம சொப்பனம். பூனையைப் பார்த்தாலே மூர்ச்சை போட்டு விடுவாராம்!

ஆதாரம்: வாழ்க்கை விநோதம்
தகவல்: விஜய்

கற்கள்

நாம் தினமும் எத்தனையோ கற்களைப் பற்றிப் பேசுகிறோம். கீழே சில சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவை ''கல்'' என்ற சொல்லில் முடிகின்றன. அருகிலிருக்கும் குறிப்புக்களிலிருந்து அந்தச் சொற்களைக் கண்டுபிடியுங்கள், பார்க்கலாம்!

1. — — கல் (பிரிக்க முடியாதது)
2. — — கல் (நீர்த் தேவையை உணர்த்துவது)
3. — — கல் (வேதனை நிறைந்தது)
4. — — கல் (தமிழர் திருநாள்)
5. — — கல் (அந்தரத்தில் நிற்பது)
6. — — கல் (கற்சட்டி)
7. — — — கல் (ஒளித்துவைப்பது)
8. — — — கல் (நாசன் வேலை)
9. — — — கல் (ஒருவித அரிசி)
10. — — — கல் (தெளிவற்றது)
11. — கல் (காக்கும் காய்)

விடைகள்: (1) சிக்கல்; (2) விக்கல்; (3) பிக்கல்; (4) பொங்கல்; (5) தொங்கல்; (6) மாக்கல்; (7) பதுக்கல்; (8) செதுக்கல்; (9) புழுங்கல்; (10) கலங்கல்; (11) பாகல்.

-- ஜ. நா. சுப்பிரமணியன்



கோடாக்கண்டரும் விடாக்கண்டரும்

கோடாக்கண்டரான ஒரு நூல் வெளியீட்டாளர் மீது விடாக்கண்டரான ஒரு கதாசிரியர் பணத்துக்காகப் படையெடுத்து அலுத்துப்போய்க் கடைசியில் பாடியது:

வரைந்தெழுதிப் பல கடிதம்
வக்கணையாய் அனுப்பிவைத்தும்
வாளா விருந்துவிட்டீர்
வாய்திறவா மௌனியானீர்!
காலமென்னும் வெள்ளம்
கடும்வேகச் சுழல் என்று
கணம் நினைத்துப் பார்த்தீரா?
கையை நெஞ்சில் வையுமையா!
மாதங்கள் பலவாக
மன்றாடி, நிலைஉணர்ந்து
மனத்தை மரமாக்கி,
மதிப்பாய்க் கேட்டும்
மண்புகுந்த அரவாக
மௌனம் சாதித்தீர்!
கஷ்டம் என்னும் கத்தி
கழுத்தில் உரசுங்கால்
காத்திருக்கும் பொறுமை
கடவுளுக்கே கிடையாது!
ஐயா நான் கேட்கின்றேன்
அர்ஜண்டாய்ப் பணம் வேணும்
ஆவன செய்யுங்கள்
ஆத்திரத்தைக் கிளப்பாதீர்
ஆகாயம் பூமியை
ஆதரவாய்ப் பார்க்காதீர்!
அலட்சியமாய்த் தலைமறையும்
அலுத்துவிட்ட வித்தையதை
ஆசையுடன் தொடர்ந்திடவே,
அணுவளவும் நினையாதீர்!
அப்பாவியாகவே என்றும் நான்
அசடா யிருக்கமாட்டேன்.
ஐயா உடன் பணம் வேணும்
அவ்வளவுதான் நான் சொல்வேன்

— மேலு

தபால்காரர் ஹிச்காக்

ஹாலிவுட்டின் பிரபல டைரக்டர் ஹிச்காக்கைத் தெரியாதவர்கள் அநேகமாக இருக்க முடியாது. கொலை, துப்பறியும் கதைகளைத் திரைப்படம் பிடித்து, உலகம் கண்டு வியக்கப் பாராட்டுகள் பெற்று வருபவர்.

ஹிச்காக் இளம் வயதில் ஒரு பெண்ணைக் காதலித்தார். காதலிக்கு ஆயிரக் கணக்கில் கடிதங்கள் எழுதியிருக்கிறார் ஆல்பிரட் ஹிச்காக். அப்படி எழுதிய கடிதங்களைத் தபாலில் அனுப்பவில்லை. வேறு நபர்கள் மூலமாகவும் கொடுத்தனுப்பவில்லை. காதலியின் வீட்டுக்குத் தாமே நடந்து சென்று ''போஸ்ட்'' என்று கூவிக் காதலியின் கையிலேயே கொடுத்து விட்டு வருவார். வரும்போது காதலியும் ஒரு கடிதத்தைக் கொடுத்து விடுவாள். தினத்துக்கு இரண்டு கடிதங்களுக்குக் குறைவில்லாமல் எழுதிப் பரிமாறிக் கொண்டிருக்கின்றனர். முதல் கடிதம் எழுத ஆரம்பித்த பின்னர் மூன்று ஆண்டுகள் கழித்து அவர்கள் இருவரும் திருமணம் செய்து கொண்டனராம். அப்படியென்றால் எத்தனை கடிதங்கள் அவர்களுக்குள் எழுதிக் கொண்டிருப்பார்கள் என்று நீங்களே கணக்குப் போட்டுப் பார்த்துக் கொள்ளவும்! - இதா

ஆதாரம்: ''வீக் எண்ட்''




வசீகரத்தையும், பெருமிதத்தையும்
கொடுக்கும் நறுமணம் உங்களுக்கு
பாமாலிவ் லவண்டர் டால்க்
உபயோகிப்பதால்.
உங்களுக்கு மிகவும் பிடித்தமான ஸெண்டுகள்—உங்களுக்காகவே மீண்டும் உருவாக்கப்பட்டிருக்கின்றன!
ஒரு காலத்தில் உலக அழகுக் கேந்திரங்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவையும், உங்களுக்கு மிகவும் பிடித்தமானவையுமான ஸெண்டுகளின்றி இனி நீங்கள் தவிக்கவேண்டாம்...இன்று பாமாலிவ் லவண்டர் டால்க் மட்டுமே அளிக்கும் வசீகர நறுமணத்தினாலும், பெருமிதத்தினாலும் உங்கள் உடலைச் சொகுசாகப் பராமரிக்க முடியும். பாமாலிவ் லவண்டரை உங்கள் உடம்பு முழுவதும் தூவிக்கொண்டு, சூழ்ந்து நிற்கும் அதன் இனிய வசீகர நறுமணத்தினால் களிப்படையுங்கள்.
எப்பொழுதும் புத்துணர்ச்சியுடனும் நறுமணம் சூழ்ந்த அழகுடனுமிருக்க பாமாலிவ் லவண்டர் டால்க்.
புதிய, நவீன காஸ்மெடிக் டின்!
PALMOLIVE
Lavender
TALC POWDER
எடுப்பான புதிய டின்!
NEW
PALMOLIVE
Talc Powder
DE LUXE
மற்றும் பாமாலிவ் டால்க் டீலக்ஸ் —
மயக்கும் 17 ஸெண்டுகளை அற்புதமான கலை
PT.G.8 TAM.



பூ மலர மலர! [ஜப் ஜப் பூல் கிலே]

பெண்ணுக்கு ஆண் நாகரிகம் பயில்விக்கும் ஒரு தமிழ் நாடகத்தையும், அதே கருத்தில் சிறப்பு மிகுந்த "கலையம்சம் பொருந்திய ஆங்கிலப் படத்தையும் பார்த்தவர்கள் இந்தப் படத்தில் ஒரு மாற்றத்தைக் காண்பார்கள். ஆம், ஆணுக்குப் பதிலாகப் பெண் நாகரிகம் சொல்லித் தருகிறாள். இரட்டைப் பொருள் தரும் வசனங்கள் சில இடங்களில் கிளுகிளுக்க வைக்கின்றன. பாமரனாக நடித்து நாகரிகம் கற்று உயர் சமூகத்துக்கேற்ப உயர்ந்து கடைசியில் பாரதத்தின் பாமரப் பண்பே சிறந்தது என்று முடிவுக்கு வருகிற ராஜாவாகப் பாத்திரத்தின் தன்மை உணர்ந்து நன்கு நடித்திருக்கிறார் சசிகபூர். அவருக்கு ஈடு கொடுத்து நந்தாவும் நடித்திருக்கிறாள். வளர்ந்து வரும் திரையுலக உத்தியிலே இவ்விருவரைத் தவிர வேறு எந்த நடிக — நடிகையரையுமே அனாவசியமாகப் புகுத்தாமல் படக் கதையை வளர்த்திருந்தால், படம் புது மாதிரியா யிருந்திருக்கும். கதை தளர் நடை போட்டாலும், சென்னையின் வெப்பத்தில் அவதிப்படும் ரசிகர்கள் அருமையான காஷ்மீரத்துச் சூழலை வரவேற்பார்கள்.

குமரிப் பெண்

பட்டிக்காட்டு மாட்டுக்காரக் கந்தன் தவறிப்போய் (சினிமாவுக்காகத்தான்! வாழ்க்கையில் நடந்தால், அவன் முதுகைப் பதம் பார்த்து விடுவார்களே!) பெண்கள் ரயில் பெட்டியில் ஏறி விடுகிறான். அவன் வாழ்க்கையில் ஏற்பட்ட அத்தனை அனர்த்தங்களுக்கும் அந்தச் சம்பவம் காரணமாகிறது. அதனால் 'டைட்பிட்' மேனாட்டு உடையில் ஆடிக் குலுக்கும் குமரிப் பெண்களிடம் அகப்பட்டுத் தவிக்கிறான்.

'பின்னிய கூந்தலை வெட்டிவிட்டு - வெறும்
பெருக்கு ஆடையைக் கட்டிக்கிட்டு
மண்ணை மிதிக்கிற பொண்ணுக போலே
குதிப்பதும் ஒரு ஆட்டமோ?'

என்று கந்தன் காந்தனாகிப் பாடும் பிளேட்டை இங்கே திருப்பலாம்!

இந்த அப்பாவிக் கந்தனையே காந்தனாக்கித் தன் தாத்தாவின் உயிர் பிழைக்க (அதுவும் நடிப்புத் தான்!) காதலனாக நடிக்க வைக்கக் குமரிப் பெண் சியாமளா முயன்று, அவன் அவள் கைப் பொம்மையாகிறான்! அதன் பிறகு அவன் பெற்ற தாயையே மறக்க, தாயை இழக்கிறான். அவன் தாயை இழப்பதற்குத் தான்தான் காரணம் என்று குமரிப் பெண் கருதி அவன் மீது அன்பும் பரிவும் கொள்ளப் பிறகு காதலும் பிறக்கிறது. வில்லன் தேவராஜன் இவர்களது திருமணத்துக்கு முட்டுக்கட்டை போடுகிறான். ஆபத்பாந்தவனாக வக்கீல் சட்டநாதன் வந்து காதலர்களை ஒன்று சேர்க்கிறான்.

ஆடாமல் குலுக்காமலிருந்தால் ஜெயலலிதா அழுது சிரித்து நம்மை அயர வைக்கிறார். ரவிசந்தர் அப்பாவிக் கந்தன்! காந்தனாக மாறும் கட்டத்தில் நன்கு நடிக்கிறார்.


குழாய்ச் சண்டை வக்கீல், நாகேஷ் என்றால் சிரிப்புக்கும் இடம் இருக்கிறது என்று அர்த்தம்! அதுமட்டுமல்ல! சீரியஸ் ரோலில் துப்பறியும் நிபுணராக மாறி ஜமாய்க்கிறார்.


ரங்கா ராவ்தான் குமரிப் பெண்ணின் தாத்தா.


குமரிப் பெண்ணில் தளுக்குக் குலுக்கு நடனங்களைத் தவிர சஸ்பென்ஸ் கதையும் இருக்கிறது. கதைக்காக ஒரு முறை பார்க்கலாம்!





தீயும் திருட்டும்
கதை: கௌசிகன்
சித்திரம்: ரமணி..
துணிகரமான பல திருட்டுக்களைத் திறமையோடு செய்தவன் வீராசாமி. ஒரு கிடங்கைக் கொள்ளையடிக்கத் திட்டமிட்டிருக்கும் போது அவன் முயற்சியைப் போலீசுக்கு முன்னதாகவே யாரோ போல் அறிவித்து விடுகிறான் சேட் மங்கள்லால். காரணம்-இத்தனை நாள் வரை அவனுக்காகத் தொழில் நடத்திய வீராசாமி இப்போது தன் உழைப்பை வேறு ஒருவருக்கு மாற்றிக் கொண்டதினால் ஏற்பட்ட பொறாமைதான். கிடைத்த தகவலின்படி கிடங்கைப் போலீஸ் வளைத்துக் கொள்கிறது.
வீராசாமி! துப்பாக்கியைக் கீழே போட்டுவிடு. இனி உன்னைக் காத்துக் கொள்ள அது பயன் படாது.
விலகிக் கொள் என்னைக் கைது செய்ய உங்களால் முடியாது.
இரண்டாவது மாடியின் திறந்த வெளியில் குழப்பம். ஆத்திரம் தொங்கப் பிடிபட்ட வீராசாமி பின்பக்கமாக நகர்ந்து கட்டடத்தின் விளிம்பிற்குச் சென்று விட்டதை உணராத நிலையில்....
வீராசாமி!..நகராதே.. பின்னால்...
ஆ..! ஐயோ..
கீழே விழுந்த வீராசாமியிடம் முதலில் சென்றவன் அவன் கூட்டாளி கந்தசாமிதான்.
கந்தசாமி! என்னைக் காட்டிக் கொடுத்தவன் அந்த மங்கள்லால் தான்.
அவசியம் அண்ணா! நான்...
இரண்டு நாட்களுக்குப் பின் கந்தசாமி மங்கள்லால் கடைக்குப் போகிறான்.
சேட்ஜீ! எனக்கு ரொம்ப முடை. அவசரமா நூறு ரூபா வேணும்
நம்பள் கிட்டே ஏன் வரான்? போ..போ!
மங்கள்லால்! இந்தச் சொத்துக்களாலேதான் உன் தொந்தி பெருத்திருக்கு. மறந்திடாதே. செத்துப் போன வீராசாமி உன்னைப் பத்தி எல்லா ரகசியங்களையும் எழுதி வச்சிருக்கான். அது போலீஸ் கையிலே சிக்கினா உன் வண்டவாளம் பூரா தண்டோராப் போட்டபடும். தெரிஞ்சுதா? அந்தக் கடிதாசி இருக்கிற இடம் எனக்குத் தெரியும்.
உஸ்.. மெள்ளப் பேசப்பா கந்தசாமி! இப்படி நம்பள் ஆபீஸ் ரூமுக்கு வாப்பா.
இது... நம்பள்கி ரொம்பப் புடிச்சுப் போச்சு.
மன்னிக்கணும் சேட்ஜீ! இது ரொம்ப அபூர்வமான பொருள்.


ஏகாம்பரம் பீரோவை விற்க மறுத்ததும் சேட்ஜி ஆத்திரமடைகிறான். எப்படியும் அதன் ரகசிய அறைக்குள்ளிருக்கும் தங்கப் பற்றிய கடிதத்தைக் கைப்பற்றத் தீர்மானிக்கிறான்.
ஆ... ஐயோ...!
மறு நாள் காலை — ஏகாம்பரத்தின் கடைக்குச் சிங்காரத்தின் விஜயம் நடக்கிறது...
கடையிலிருந்து விளக்கு வெளிச்சம் தெரிந்ததாகச் சொல்கிறீர்களே. அந்நியன் இரும்புப் பெட்டியைத் தொட்டிருக்க வேண்டும்.
இல்லை. அவன் இரும்புப் பெட்டியின் அருகில் கூடப் போகவில்லை. வேறு எதையோ தேடித்தான் அவன் வந்திருக்கிறான்.
கடையினுள் புகுந்த மர்ம மனிதன் இரும்புப் பெட்டியின் அருகிலேயே போகவில்லை என்று எதைக் கொண்டு சிங்காரம் அத்தனை உறுதியாகச் சொன்னான்? அவன் பார்வையில் சிக்கிய அது உங்கள் பார்வையில் படுகிறதா?
சிங்காரம் தரையிலிருந்து எதையோ எடுத்துக் கடைக்காரரிடம் கொடுக்கிறான்.
இது என்னுடையது இல்லை சார். இதை நான் இதற்குமுன்பு பார்த்தது கூட இல்லை.
கான்ஸ்டபிளைத் தாக்கிய அந்த மனிதனிடமிருந்து இது விழுந்திருக்க வேண்டும். நகைக் கடைக்காரர்கள் உபயோகிக்கும் 'ஐ கிளாஸ்' அது.
அன்று வந்தவனின் காரியம் கான்ஸ்டபிளின் வரவினால் கைகூடவில்லை. ஆகவே அவன் மறுபடியும் அங்கு வரக் கூடுமென்று அனுமானத்துடன் சிங்காரம் இரவில் அந்தக் கடையைக் கண்காணிக்கும் போது, தூறல் போட்டுக் கொண்டிருந்த ஒரு நாள் இரவு....
சிங்காரம், அதோ! ஏகாம்பரத்தின் கடையிலிருந்து தீ ஜுவாலை.
பாரு! அந்தக் கார் இங்கு வெகுநேரமாக நின்று கொண்டிருந்தது. இதன் டிரைவர் ஏன் தீயைப் பற்றிக் கூக்குரல் எழுப்பவில்லை? அது கிளம்புகிறது. அதன் நம்பரைக் குறித்துக் கொள். நான் தீயணைக்கும் படைக்குப் போன் செய்கிறேன்.
மின்சார இஸ்திரிப் பெட்டியோட பிளக்கை எடுத்து 'ஆஃப்' பண்ணாமலேயே அதை இந்த பீரோ மேலே படும்படி வச்சிருக்கும் போது பின்னே தீப் பிடிக்காம என்ன செய்யும்?
உண்மைதான். ஆனால் அந்த இஸ்திரிப் பெட்டி பிளக்கை நான் மின்சாரத்துடன் இணைத்ததும் இல்லை. இதை இங்கு இப்படி வைக்கவுமில்லை.
கடையில் தீயைக் கண்ட சிங்காரத்தின் கண்கள் ஏதோ ஒரு தடயத்தைக் கண்டு ஒரு முடிவிற்கு வந்தது. அது என்ன என்பதை ஊகிக்க முடிகிறதா?
இதைச் செய்தது நீங்கள் இல்லை ஏகாம்பரம். தீ விபத்துக்குக் காரணம் — மறைப்பதற்காக யாரோ இந்த இஸ்திரிப் பெட்டியை இப்படி வைத்திருக்கிறார்கள். இந்தப் பீரோவை ஏதோ காரணத்துக்காக அழிக்க முயன்றிருக்கிறான் அவன்.
மின்சார இஸ்திரிப் பெட்டியினால் தீ விபத்து ஏற்பட வில்லை என்பதைச் சிங்காரம் எப்படி முடிவு செய்தான்? சிங்காரத்தின் ஊகங்கள் உங்களுக்குத் தெரிய வேண்டுமானால் 71ம் பக்கத்துக்குப் போகலாமே.


சிங்கம்! நேற்றிரவு குறித்துக் கொண்டோமே காரின் நம்பர். அது நகைக்கடைக்காரர் மங்கன்லாலுக்குச் சொந்தமான வண்டி.
மங்கன் லால்! இவர் இரட்டைப் பொருள்களை வாங்குவதாக அவன் மீது ஒரு புகார்கூட இருக்கிறது… சரி…
சேட் மங்கன் லாலுக்குத் திங்காரம் வலை விரிக்கிறான்…
இந்த வைரத்துக்கு நீங்க எவ்வளவு தருவீங்க? அவசரமாக் கொஞ்சம் பணம் தேவைப்படுது.
வைரமா? நம்பள் இதை இப்போ பார்க்க முடியாது. வைரத்தைச் சோதனை போடற 'இகிளாஸ்' எங்கேயோ போச்சு. நீ நாளை வாப்பா.
உங்களுக்குத் தெரியாதா அந்தக் கண்ணாடி இதுதானா சேட்ஜி? … கண்டெடுத்தேன்.
ஆ! துப்பறியும் நாதரா? மிஸ்டர், இதை வச்சுக்கிட்டு நம்பளை நீ ஒன்னும் செய்திட முடியாது.
சேட்ஜி! உங்களோடு விசாரிக்க வேண்டும். வாங்க கடைக்குப் போகலாம்…
நம்பளை நீ என்ன செய்யப் போறேன்னு தெரியும் மிஸ்டர்! … 'புரூப்' பண்ண உங்களால முடியாது, தெரிஞ்சுதா?
சுந்திரபாலியான சேட்ஜியின் வாதம் எதுவும் திங்காரத்தின் எதிர்வாதங்களின் முன் எடுபடவில்லை.
ஓகே! இன்ஸ்பெக்டர். உங்க திட்டம் நல்லா… அதுக்காக மன்னிப்பும் கேட்டுக் கொள்கிறேன். போதுமா?
என்… என்ன? அந்தக் கடிதம்… உங்களுக்கு… எப்படி… கிடைத்தது…?



தூரத்திலிருந்து காணில்
அழகு...



அருகே நெருங்கினாலோ
கொஞ்சும் எழில்


ஆம், **லாக்டோ-காலமைன்** உபயோகித்தால்

இனி எழிலுடன் விளங்குங்கள்—லாக்டோ-காலமைன் ஒரு சிறந்த அழகுசாதனம்சருமக்கோளாறுகளை மிருதுவாயும், வெண்மையாகவும் நீக்குகிறது.

இனி என்றுமே எழிலுடன் மிளிருங்கள்—லாக்டோ-காலமைனில் சருமத்திற்கு நலன் தரும் காலமைன், விட்ச்ஹாஸல் இரண்டும் உள்ளன...சருமத்தைத் தூய்மையுடன் ஒளிவிடச் செய்கிறது.

லாக்டோ-காலமைன் மூலம் எழிலுடன் ஒளி வீசுங்கள்.

அட்டைப்பெட்டியுடன், திருட்டுச் செய்யமுடியாத சீசாவில் தற்போது கிடைக்கிறது.



சருமக் கோளாறுகளைக்
களையும் ஒரே
அழகு சாதனப்
பொருள்

லாக்டோ காலமைன் ரகங்களில் இப்பொழுது கிரீம், டால்க் இரண்டும் கிடைக்கின்றன.

Benson/I-CIL-9-TAM

பெப்ஸோடெண்டின் 'இரியம் ப்ளஸ்' உங்கள் பற்களை சுத்தம் செய்து வெண்மை பளிச்சிடச் செய்யும்



எப்படி என்று பாருங்கள் : பெப்ஸோடெண்டில் மட்டுமே அற்புத நுரையை உண்டுபண்ணும் 'இரியம் ப்ளஸ்' உள்ளது. இது விஞ்ஞான முறைப்படி பிரத்தியேகமாக கண்டுபிடிக்கப்பட்ட சேர்க்கைப் பொருளாகும். இதனால் ஏராளமாக அற்புத நுரை உண்டாகி உங்கள் வாயின் உட்புறம் முழுவதையும், பற்களையும் நன்றாக சுத்தம் செய்யும்... பெப்பர்மிண்டைப் போல வாய்க்கு குளிர்ச்சியும், புத்துணர்ச்சியும் ஊட்டும். 'இரியம் ப்ளஸ்'ஸின் தனிப்பட்ட சக்தியால் பற்கள் இயற்கை வெண்மையுடன் பிரகாசிக்கும். அற்புத வெண்மை அளிப்பது பெப்ஸோடெண்டின் தனிப்பட்ட தன்மை.

இந்துஸ்தான் லீவர்
லிமிடெடின்
ஓர் உன்னத தயாரிப்பு



சிவனருட் செல்வர்

திருமுருக கிருபானந்த வாரியார்



திருமகவைக் கண்டு தாய் தந்தையரான சடையனாரும், இசை ஞானியாரும் மகிழ்ந்தனர். தம்பிரான் அருளால் பிறந்த குழந்தைக்கு நம்பியாரூரர் என்று நாமம் சூட்டினர்.

நம்பியாரூரருக்கு நவமணிக் கலன்களும் இரத்தினச் சுட்டியும், அரைநாணும், பஞ்சாயுதமும். சதங்கையும் பூட்டி அவருக்கு அழகு செய்தனர். ஆரூரர் அற்புதம் அற்புதமாக வளர்ந்து வீதியில் தளர் நடையிட்டு, தேர் உருட்டி விளையாடுவாராயினர்.

ஒரு நாள் அந்நாட்டினையாளும் அரசராகிய நரசிங்கமுனையர் பெரும் தேரில் வந்து கொண்டிருந்தார். அப்போது வீதியில் நம்பியாரூரர் சிறு தேரில் விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டார். அந்தக் குழந்தையின் பொலிவைக் கண்ட மன்னர், அதன் மீது அளவிலா அன்பு கொண்டு வாரியெடுத்தார். ''இது யார் குழந்தை?'' என்று அங்கிருந்தவர்களிடம் விசாரித்து அறிந்து, குழந்தையின் தாய் தந்தையர் வசிக்கும் வீடு சென்றார். தமது நண்பராகிய சடையனாரையும் இசை





ஞானியாரையும் தொழுது ஆரூரரைத் தமக்கு மகனுகத் தருமாறு வேண்டினர்.

**''இலனென்னு மெவ்வ மூரையானை ஈதல்
குலனுடையான் கண்ணே யுள''**

என்ற பொய்யாமொழிக்கிணங்கச் சடையனுர் உடனே உயிரினும் இனிய தம் மைந்தரை மன்மைந்தராகத் தந்தனர். ஆரூரர் நரசிங்கமுனையருடைய அரும் பெரும் காதல் மைந்தராக அந்தணர் திருவும், அரசர் திருவும் ஒருங்கே பொலிய மிகவும் செல்வமாக வளர்ந்தனர். குழந்தை நல்ல சீலத்துடனும், தமிழ்ப் புலமையுடனும் நான்மறையங்கம் பயின்ற நாவுடனும் விளங்கிற்று. இதனை, ''சீலம் வல்ல சிறுவன்'' என்றும், ''நான்மறையங்கம் ஓதிய நாவன்''— என்றும் ஒற்றியூர்த் தேவாரம் குறிப்பிடுகிறது. ''கற்ற தமிழ்ப் புலவன்'' ''தேடிப் , பாடிய சொற்புலவன்'' என்று அருணகிரிநாதரும் பழனித் திருப்புகழில் பாடுகின்றுர். அரண்மனையில் பல ஆசிரியர்கள் வந்து குழந்தைக்குக் கல்வி புகட்டினர்கள். நம்பியாரூரர் படிக்க வில்லை. கல்வி, பள்ளத்தில் வெள்ளம் வந்து தங்குவதுபோல் அவரிடம் வந்து தேங்கிய தாம். நாயன்மார்களிலேயே நிரம்பப் படித்தவர் சுந்தரர். அவர் பெரிய கலைஞர்; நாவலர் என்ற பெயரும் அவருக்கு உண்டு.

5. திருமண மீட்சியும் திருவடி தீட்சையும்

நம்பியாரூரர்க்கு உரிய காலத்தில் உபநயனம் செய்து முப்புரிநூல் சாத்தினர். ஆரூரர் அளவில் தொல்கலைகள் ஆய்ந்து திருமலி சிறப்பின் ஓங்கித் திருமணப் பருவமாகிய பதினறுவது ஆண்டினை அடைந்தனர். சடையனுர் தமது திருமைந்தருக்குத் திருமணம் செய்யக் கருதினர். பண்ணுருட்டிக்கும் மடப்பட்டுக்கும் இடையில் மணந்தவிர்ந்தபுத்தூர் என்ற ஊர் உள்ளது. 'மணம் தவிர்ந்த' என்பது பின்னுல் சேர்ந்தது. முதலில் புத்தூர் என்றே கொள்ளலாம். அங்கே சடங்கவியார் என்ற சிவாச்சாரியார் வாழ்ந்தார். சடங்கு என்பது வேதத்தின் ஆறு அங்கங்களால் (ஷட் அங்கங்களால்) செய்வது. அந்த ஆறங்கத்தில் வல்லவர்கள் சடங்கவிப் பிராமணர்கள்.

ஆறங்கத்தில் வல்ல சடங்கவியார் புதல்வியே தம் மைந்தனுக்கு மனைவியாகத் தக்க மங்கை என்று முடிவு செய்தார் சடையனுர். குலம், கோத்திரம், அறிவு முதலிய எல்லா நலன்களிலும் ஒத்த அக்கன்னிகையை மணம் பேசுமாறு தக்கவர்களை அனுப்பினர். நம்பியாரூரரது நற்குணங்களை முன்னரேயே அறிந்த சடங்கவியாரும் அகமும் முகமும் மலர்ந்து பெண்தர இசைந்தார். திருமணம் நிச்சயமாயிற்று. உறவினருக்கும் திருமண ஓலை அனுப்பினர்கள். புத்தூரில் திருமணத்துக்குரிய சிறந்த ஏற்பாடுகள் யாவும் அமைத்துக் கொண்டிருந்தனர்.

சுந்தரர் நண்பரும் உறவினரும் சூழ, காதுகளிலே வைரக் கடுக்கன் அணிந்து சாண் அகலம் உள்ள சரிகைக் கரை வேட்டி உடுத்தி, புரவிமேலமர்ந்து மன்னர்க் கோலமும் வைதிகக் கோலமும் விளங்க, சிவமூர்த்தியைச் சிந்தித்துப் புத்தூரினையடைந்தனர்.

**மன்னவர் திருவும் தங்கள் வைதிகத்
திருவும் பொங்க
நன்னகர் விழவு கொள்ள நம்பியா ரூரர்
நாதன்
தன்னடி மனத்துட் கொண்டு தகுந்திரு
நீறு சாத்திப்
பொன்னணி மணியார் யோகப் புரவி
மேற் கொண்டு போந்தார்.**

சங்கங்கள் முழங்கின; வேத கீதங்கள் பாடினர்; மாதர்கள் ஆடினர் ; மங்கல வாத்தியங்கள் கடல் போல் ஒலித்தன; மணம் வந்தபடியால் அவ்வூர் அன்று தொட்டு ''மணம்வந்த புத்தூர்'' எனப் பெயர் பெற்றது. தோரணங்களும், வாழை கமுகுகளும் நாட்டப் பட்டன; மனைகள் தோறும் நிறை குடம் வைத்தனர். வீதிகள் பன்னீரால் தெளிக்கப்பட்டுச் சந்தனத்தால் மெழுகப் பெற்றன.

**கண்கள் எண்ணிலாத வேண்டுங்
காளையைக் காண என்பார்
பெண்களில் உயர நோற்றுள்
சடங்கவி பேதை என்பார்
மண்களி கூர வந்த மணங்கண்டு
வாழ்ந்தோம் என்பார்
பண்களில் நிறைந்த கீதம்
பாடுவார் ஆடுவார்கள்**

சடங்கவி சிவாசாரியார் எல்லாரையும் வரவேற்றனர். மணச் சடங்கு தொடங்கப் பெற்றது. அப்பொழுது, முன் திருக்கயிலாய மலையில், ''மையன்

மானுடமாய் மயங்கும்வழி ஐயனே தடுத்தாண்டருள் செய்'' என்று சுந்தரர் கேட்டுக்கொண்டவாறு எம்பெருமானுர் தடுத்தாட்கொள்ளக் கருதினர்.

ஆலும்மறை சூழ்கயிலை யின்கணருள்
செய்தே
சாலு மொழியால் வழி தடுத்தடிமை
கொள்வான்
மேலுற வெழுந்து மிகு கீழுற அகழ்ந்து
மாலும் அயனுக்கும்அரி யாரொருவர்
வந்தார்

தளர்ந்த வயதும், தலைமிசையிருந்த சந்திரனே நரைமயிராகியது போன்ற வெளுத்த நரைமயிர் முடியும், செவியில் வடிந்த குழையும், மார்பினில் புரிநூலும், தோளில் உத்தரீயமும், வெயிலை மறைக்கும் குடையும்,— தருப்பை முடிந்த மூங்கில் தடியும் விளங்க அழகு கிழ வடிவு கொண்டது போன்ற திருவடிவுடன், சிவபெருமான் மணத் தொழில் தொடங்கும் பந்தரிடையே வந்தார், ''நான் கூறும் இந்த மொழியை யாவரும் கேளுங்கள்'' என்று கூறினர். அவரது திருமேனியின் பொலிவைக் கண்ட அந்தணர்களும் நம்பி ஆரூரரும், ''ஐயா! உமக்கு நல்வரவு; நாங்கள் செய்த தவப் பயனுல் உங்கள் வரவு எமக்குக் கிடைத்தது: தாங்கள் சொல்ல எண்ணியதைச் சொல்லியருள்வீர்'' என்றார்கள். மூத்தை மறையாயிர மொழிந்த முக்கட் பெருமான் மணமகனை நோக்கி, ''அப்பனே! உனக்கும் எனக்கும் உள்ள தொடர்பு காரணமாக ஒரு பெரு வழக்கு உள்ளது; அதனை முடித்த பின்னர்தான் நீ உனது திருமணத்தைச் செய்யலாம்'' என்ருர். விவாகத்தில் கலந்து கொள்வோருக்கு எப்படியிருக்கும்? அனைவரும் கலங்கினர். ஆரூரர், ''ஐயனே! நன்று; உமக்கும் எனக்கும் உண்மையிலேயே வழக்கு உளதாயின் அதனை முடித்தே இவ்வதுவை செய்வேன்; அது என்ன வழக்கு? இன்னதெனத் தெரியுமாறு விளக்கமாகக் கூறும்'' என்றனர்.

ஆவதிது கேண்மின்மறை யோர் என்அடி
யான்இந்
நாவல்நக ரூரன்இது நான்மொழிவ'
தென்ருன்
தேவரையும் மாலயன் முதல்திருவின்
மிக்கோர்
யாவரையும் வேறடிமை யாவுடைய
எம்மான்

''இந்த அவையில் உள்ள அனைவரும் கேளுங்கள்; இந்த நம்பியாரூரன் என்னுடைய அடிமை'' என்று கிழவர் பகர்ந்தனர். மாலயனாதி வானவர் அனைவரையும் தன்னடிமையாகவுடைய பெருமானுடைய இந்த எதிர்பாராத சொல்லைக் கேட்ட அனைவரும் திகைத்துப் போயினர்; திருமணப் பந்தரே கிடுகிடுத்தது. சிலர் கோபத்துடன் பார்த்தார்கள்; சிலர் அவரது பேச்சைக் கேட்டு ஏளனமாகச் சிரித்தார்கள். ''இவர் என்ன நினைந்தார்'' என்று சிலர் அவர்பால் நெருங்கினர். கிழவரை நோக்கிய நம்பியாரூரர், 'இந்த ஐயருடைய சொல் நன்ருக இருக்



கின்றது' என்று இகழ்ச்சியாகக் கூறிச் சிரித்தார்; அவரை உற்றுப் பார்த்தார்.

தக்கான் முகம்நோக்கி நடுங்கி
நுடங்கி யார்க்கும்
மிக்கான் மிசையுத் தரியத்துகில்
தாங்கி மேற்சென்(று)
'அக்கா லம்உன்தந்தை தன்தந்தை
ஆள்ஓலை ஈதால்
இக்கா ரியத்தை நீஇன்று
சிரித்ததென் ஏட' என்ன

சுந்தரர்க்கு விவரிக்க முடியாத அன்பு வெள்ளம் ஊற்றெடுத்ததாம். முற்பிறப்பின் தொடர்பினுல் சிலர் தம்மையறியாமலே அன்புடன் பழகுவர் அல்லவா? அது போல் சுந்தரர், 'நேசமுன் கிடந்த சிந்தை நெகிழ்ச்சியால் சிரிப்பு நீங்கினர்.'

தம்மைப் பார்த்துச் சிரித்த தமது அன்பனை நோக்கிய பெருமான், தோளில் இருந்த உத்தரீயத்தைத் தாங்கிக் கொண்டு அருகிற் சென்று ''அந்தக் காலத்தில் உனது பாட்டன் எனக்கு எழுதிக் கொடுத்த அடிமை ஓலை இதோ இருக்கின்றது. இது வெறும் வாய் வார்த்தை மட்டுமன்று. அங்ஙனமிருக்க நீ எள்ளி நகையாடுவது சரியன்று'' என்றார். நம்பியாரூரரோ ''அந்தணர் வேறு ஓர் அந்தணர்க் கடிமை என்பது கிடையாது; இன்று புதிதாக நீர் சொல்லத்தான் கேட்டோம். நீர் என்ன பித்தனோ?'' என்றார்.

குழந்தை வந்து உதை தந்தாலும் தந்தை கோபப்படுவாரா? சுவாமி எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டார். ''அப்பனே! நான் பித்தனும் ஆக; அல்லது பேயனும் ஆக; இன்னும் நீ எத்தனை இகழுரை கூறினாலும் நான் அதற்கு நாண மாட்டேன். என்னை நீ இன்னும் சிறிது தெரிந்து கொள்ளவில்லை. இங்கேயே உட்கார்ந்து நீ வித்தகம் பேச வேண்டாம்; எழுந்து பணி செய்'' என்றார் விருத்தர். ஆரூரர்க்கு அவருடைய வடிவுஞ் சொல்லும் உள்ளத்தை ஒருபுறம் உருக்கினாலும் அடிமை என்ற சொல் ஒருபுறம் சினத்தை மூட்டியது. ''என்னய்யா என்னை அடிமை என்கிறீர்கள்?'' என்று கூறிப் பரிகசித்தார் சுந்தரர்.

''ஏடா! ஏன் சிரிப்பது? இதோ பார் உனது தந்தையின் தந்தை முன்பு எழுதிக் கொடுத்த அடிமை ஓலைச் சீட்டு!''

''எங்கே? அந்த ஓலையை இப்படிக் காட்டுங்கள்'' என்றார் நம்பியாரூரர்.

''ஓலையைப் படி என்று சொல்லி உன்னிடம் கொடுத்தால் நீ கிழித்துவிடக் கூடும்; என் வழக்கு அடிபட்டு விடும். அதுமட்டுமன்று; வேலைக்காரன் சொல்வதை எஜமானன் கேட்கலாமா? அடிமையாகிய நீ ஓலையைக் காட்டு என்றால் காட்டுவேனோ? சபையில் உள்ள பெரியோருக்குக் காட்டி மெய்ப்பித்த பின் நீ வேலை செய்'' என்றனர் கிழவராக வந்த அரனார். இதைக் கேட்ட நம்பியாரூரர் மறையவர் கையிலிருந்த ஆவணத்தை வலிதில் பறிக்கச் சென்றார்.

ஆவணம் பறிக்கச் சென்ற
அளவினில் அந்த ணாளன்
காவணத் திடையே ஓடக்
கடிதுபின் தொடர்ந்து நம்பி
பூவணத் தவரை உற்றார்
அவரலால் புரங்கள் செற்ற
ஏவணச் சிலையி னாரை
யார்தொடர்ந் தெட்ட வல்லார்?


எம்பெருமான் காவணத்திடையே ஓடினார். சுந்தரர் அவரைத் தொடர்ந்தார். பால்ய வயதினர்; வயது பதினாறு. ஆனாலும் அந்தக் கிழவரை நெருங்க முடியவில்லையாம். இருவரும் ஓடினார்கள். சுந்தரர் கடைசியில் அவரைத் தொடர்ந்து பற்றினார். ஆலமுண்ட நீலகண்டரை அவரைத் தவிர வேறு யார் தொடர்ந்து எட்டவல்லார்? அரனார் திருக்கரத்திலிருந்த அடிமை ஓலையைப் பறித்த சுந்தரர், ''அந்தணர் அடிமையாகி ஏவல் செய்தல் என்ன நியாயம்?'' என்று கூறி ஓலையைக் கிழித்தெறிந்தார்.

அருமறை முறையிட் டின்னும் அறிவதற்
கரியான் பற்றி
ஒருமுறை முறையோ என்ன
உழைநின்றார் விலக்கி ''இந்தப்
பெருமுறை உலகில் இல்லா
நெறிகொண்டு பிணங்குகின்ற
திருமறை முனிவ ரேநீர் எங்குளீர்
செப்பும்'' என்றார்.

அருமறை முறையிட்டு இன்னும் அறிவதற்கு அறியாத அரனும், ''முறையோ'' என்று ஒருமுறை ஓலம் இட்டார். அருகில் நின்றவர்கள் அரனையும் நம்பியாரூரரையும் விலக்கினர். ''ஐயரே! எங்கும் எக்காலத்திலும் நடந்திராத தன்மையைக் கொண்டு வழக்காடுகின்றீரே? நீர் யார்? உமது ஊர் எது? கூறும்'' என்றனர். ''நான் இவனது தலைவன்; எனது ஊர் திருவெண்ணெய் நல்லூர்; அது இருக்கட்டும். இவன் அறநெறியின்றி வலிதில் என் கையில் இருந்த ஓலையைப் பறித்துக் கிழித்ததனாலேயே அடிமை என்பது உறுதியாயிற்று'' என்றார் கிழவர். ஆரூரர் அவரை நோக்கி, ''ஓகோ! நீர் பழைய மன்றாடி போலும்? உமது ஊர் திருவெண்ணெய் நல்லூர் என்கிறீர். உமது வழக்கை அங்கேயே பேசி முடிவு செய்வோம்'' என்றார். ''அங்ஙனமே செய்வோம்; திருவெண்ணெய் நல்லூரில் உள்ள ஆன்றோர் முன் கூறி உறுதி செய்வேன்'' என்று கூறிய வேதமுங் காணாத விமலன், கோலூன்றி நடந்தார். சுந்தரர் அவரைத் தொடர்ந்தார். போகத்தினால் மட்டும்தானோ? அல்ல. காந்தத்துக்குப் பின் இரும்பு ஈர்க்கப்படுவது போலவே கிழவர் பின் சென்றார் மணக்குமரர்.

திருவெண்ணெய் நல்லூரை யடைந்தார்கள். அங்கு குழுமியுள்ள அந்தணர்களது சபையிற் போய், இறைவர், ''ஐயன்மீர்! இந்த நாவலூரான் என்

வீட்டிலோ, வெளியிலோ...ஆயுட்கால ஆனந்தத்தை அளிக்கும் உறுதுணை—பை!



வீட்டினுள்ளோ, வெளியிலோ ஒரு பை ரேடியோ எடுத்துச் செல்லுங்கள்! வருடக்கணக்காக உடனிருந்து ஆனந்தமளிக்கும் ரேடியோ, பை! பொருத்தமாக மாட்ச் செய்யப்பட்ட ஒலி அமைப்பின் காரணமாக, பை ரேடியோ, மிகத் தெளிவான ஒலியீட்டைத் தருகிறது. வருடக்கணக்காக அப்பழுக்கற்று இயங்குவதற்கென இதன் ஒவ்வொரு பாகமும் மிக நுணுக்கமாகத் தயாரிக்கப்பட்டிருக்கிறது. பை ரேடியோவின் நவீன சீரமைப்பு (ஸ்ட்ரீம்லைன்ட் ஸ்டைலிங்) உங்கள் இல்லத்தை அழகுமிளிரச் செய்கிறது. ரேடியோ மற்றும் டெலிவிஷன் துறையில், சிறந்த அகில உலகப் புகழ்வாய்ந்தது, பை.

உங்கள் அருகாமையிலுள்ள பை வியாபாரியிடம் சென்று பை ரேடியோக்களையும், ட்ரான்ஸிஸ்டர்களையும் வைத்துக் கேட்டுப் பாருங்கள், நீங்கள் அவற்றை விரும்புவீர்கள்.

மாடல் 3320 போர்டெபிள் ட்ரான்ஸிஸ்டர். 9 ட்ரான்ஸிஸ்டர் டயோடுகள், 3 பாண்டுகள், அதி நுட்பம் வாய்ந்த ஒலிபெருக்கி, ஃபெர்ரைட் மற்றும் டெலெஸ்கோபிக் ஏரியல்கள், 2-டோன் வார்ப்படம் செய்யப்பட்ட காபினெட், எர்த்திங் (நிலத்தொடர்பு) மற்றும் வெளிப்புற ஏரியல்களைப் பொருத்துவதற்கான ஸாக்கெட்டுகள். விலை ரூ. 328/-* தோல் உறை விலை ரூ. 20/- மேலும், டேபிள் ட்ரான்ஸிஸ்டர்கள், ஏஸி மற்றும் ஏஸி/டிஸி மெயின்கள்.

* விலைகள் சுங்கவரி மாத்திரம் அடங்கியவை. விற்பனை வரி மற்றும் இதர உள்ளூர் வரிகள் தனி.

ஏகபோக விநியோகஸ்தர்கள்: **ஜெனரல் ரேடியோ அண்ட் அப்ளையன்ஸஸ் லிட். பை ரேடியோ டிவிஷன்.**
பம்பாய், கல்கத்தா, மதராஸ், டெல்லி, பெங்களூர், செகந்திராபாத், பாட்னா.

பை லிமிடெட், கேம்ப்ரிட்ஜ், இங்கிலாந்து. அவர்களின் சார்பில் நேஷனல் எக்கோ ரேடியோ அண்ட் என்ஜினீயரிங் கோ. லிட்., பம்பாய் ! அவர்கள் பை ரேடியோக்களைத் தயாரிக்கின்றனர்

Shilpi GRA 286 TAM

அடிமை; அடிமை யென்று காட்டிய ஆளோலையை வலிதில் பற்றிக் கிழித்து விட்டான். இவன் கிழித்த ஓலை இவன் பாட்டன் தானும், தன் வழித்தோன் றல்களும் அடிமை என்று எனக்கு எழுதித் தந்தது. இது என் வழக்கு'' என்று முறையிட்டார். சபையோர் சுந்தரரை நோக்கி, ''இவர் காட்டிய அடிமை ஓலையை வலிய வாங்கிக் கிழித் தது முறையாகுமா? அதனால் உமக்கு வெற்றி வருமோ? இவர் யார்க்கும் ஏற்கும்படி வழக்கைக் கூறினர். உமது கருத்து யாது?'' என்று கேட்டனர்.

''எல்லா நூல்களையும் உணர்ந்த அறி ஞர்களே! என்னை ஆதி சைவன் என்று நீங்கள் அறிவீர்கள். என்னை இவர் அடிமை என்று சாதிப்பாராகில், அது மனத்துக்கெட்டாத மாயையே; நான் என்ன சொல்ல வல்லேன்? எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை'' என்றார் நம்பி ஆரூரர்.

சபையோர்கள் கிழவரை நோக்கி, ''ஐயா! இவர் உமது அடிமை என் பதை எம்முன் உறுதி செய்யும். ஒரு வழக்கை உறுதிப்படுத்த மூன்று வழிகள் உண்டு. ஆட்சி (அநுபவ பாத்தியதை), எழுத்து, சாட்சி என்பவை அவை. அவற்றில் ஒன்றைக் காட்டும்'' என்றனர்.

''ஆட்சியில் ஆவ ணத்தில்
அன்றிமற் றயலார் தங்கள்
காட்சியில் மூன்றில் ஒன்று
காட்டுவாய்'' என்ன ''முன்னே
மூட்சியிற் கிழித்த ஓலை
படியோலை மூல ஓலை
மாட்சியிற் காட்ட வைத்தேன்''
என்றனன் மாயை வல்லான்

மாயையில் வல்ல மணிகண்டர், ''ஓ, எழுத்து இருக்கிறதே. முன் இவன் கிழித்தது அசல் ஓலையன்று; மூல ஓலை யைப் பார்த்து எழுதின நகல் ஓலை. இப்படிக் கிழித்தெறிவான் என்று தெரிந்தே மூல ஓலையைக் காட்டவில்லை. மூல ஓலை இதோ வைத்திருக்கிறேன்'' என்று கூறினர். அவையினர், ''அத னைக் காட்டும்'' என்றனர். ''முன் கிழித்தது போல் இவன் இதையும் கிழியாவண்ணம் தடுப்பீராயின் காட்டு வோம்'' என்றார் எம்பிரான். அவை யினர் ''அங்ஙனமேயாகுக'' என்றனர். பெரும ரர் ஓலையை எடுத்தனர். அப் பொழு சபையோர் கட்டளைப்படி கருணிக ஒ அதனை எல்லோருக் கும் கேட்டு க்கனன்.



''ஹலோ.....ஹர்ரு...-..ஹர்.....ஹலோ..... அம்மா....ஹச் ஹல்லல்லல்லோ! ஹச்சூ! ஆபீஸா? மானேஜரா? ஆ ஹச்சூ!''

''என்ன? ஜலதோஷமா? ஆபீஸ் வர முடியாதா? அரை நாள் லீவு வேணுமா?''

''ஆமாம் சார்! கரெக்டா கண்டுபுடிச் சிட்டீங்களே! மத்தியானம் ஆபீஸ் வரேன்! தாங்க்ஸ்! ஓகே!''

''அருமறை நாவல் ஆதி
சைவன்ஆ ரூரன் செய்கை
பெருமுனி வெண்ணெய் நல்லூர்ப்
பித்தனுக் கியானும் என்பால்
வருமுறை மரபு ளோரும்
வழித்தொண்டு செய்தற் கோலை
இருமையால் எழுதி நேர்ந்தேன்
இதற்கிவை என் எழுத்து.''

''திருநாவலூர், ஆதிசைவ குலம், ஆரூரனாகிய நான், திருவெண்ணெய் நல் லூர்ப் பித்தனுக்கு நானும் என் சந்ததி களும் வழி வழியாக அடிமை செய்ய உள்ளும் புறமும் ஒத்து எழுதிக் கொடுத் தேன். இப்படிக்கு — ஆரூரன்'' என்று அந்த ஓலையில் எழுதப் பெற்றிருந்தது. ''இருமையால் எழுதி நேர்ந்தேன்; இதற் கிவை என் எழுத்து'' என்பதுதான் அந்த 'தஸ்தாவேஜி'லேயே ஜீவனான இடம். அந்த ஓலையில் சாட்சிகளாகக் கையெழுத்திட்டவர்கள் தங்கள் கை யெழுத்தென்றே ஒப்புக் கொண்டனர். மறையோர்கள், ''அப்பா, ஆரூரா! இது உமது பாட்டன் கையெழுத்துத்தானே? பார்த்துச் சொல்லு'' என்றார்கள்.

கிழவர் சிரித்து, ''பாட்டனையே இவன் பார்த்திருக்க மாட்டானே? இவனா பாட்டன் கையெழுத்தைச் சரி பார்க்கத் தக்கவன்? நன்று; நன்று; இவன் பாட்டன் எழுதிய வேறு எழுத் தைக் கொணர்ந்து ஒத்துப் பாரும்'' என்று அருளினர். (தொடரும்)

அவள் பெண்

பூரணி

"சீதா... சீதா......சீதா, நீ என்னம்மா சொல்றே?"

சீதா முகமெல்லாம் புன்னகை மலர நின்று கொண்டிருந்தாள்.

"என்னம்மா? பதில் சொல்லு!" என்றார் அவர்.

"எனக்கு என்ன மாமா தெரியும்? நீங்கள் பெரியவர்கள். உங்களுக்குத் தெரியாததா?"

"அப்படிச் சொல்லாதேம்மா. இந்தக் குடும்பத்திலே ஒளியைக் கொண்டுவந்த மகாலட்சுமி இல்லையா நீ? உன்னைக் கேட்காமல் ஒண்ணு செய்யறதா?" உணர்ச்சிப் பெருக்கில் அடைத்துக் கொண்ட தொண்டையை ஒரு கனைப்புக் கனைத்துச் சரி செய்து கொண்டார். "கோபிகூட என்ன எழுதியிருக்கான் பார்த்தாயா? 'மன்னி என்ன சொல்கிறாரோ அதன்படியே செய்யுங்கள்' என்று எழுதியிருக்கிறான்."

"கோபிக்குப் பெண் பிடித்து விட்டால் கலியாணத்தை முடித்து விடலாம் மாமா. அவரும் வெளியூரில் தனியாக எத்தனை நாட்கள்தான் இருப்பார்?" என்றாள் சீதா.

"வெரி குட்! அப்படிச் சொல்லு! இன்னிக்கே கோபியை வரச் சொல்லிக் கடிதம் எழுதிப் போட்டு விடுகிறேன். இந்தா பேப்பரும் பென்சிலும் எடுத்துக்கொள். உன் ராசியான கையாலே நீயே எழுதிவிடு" என்று மருமகளிடம் பேனாவை எடுத்து நீட்டினார்.

அதைக் கையில் வாங்கிக் கொண்ட சீதா ஏதோ ஒரு குறுகுறுப்புத் தோன்றவே நிமிர்ந்து பார்த்தாள். அந்த அறையை அடுத்தாற்போல் அமைந்திருந்த மாடிப் படிகளின் முதல் படியில் நின்று கொண்டிருந்தான் ரவி. சீதா தன்னைப் பார்த்ததை உணர்ந்து கொண்டதும் கையினால் வயிற்றைத் தட்டி, வாயினருகில் கையை வைத்து உண்பது போல ஜாடை காட்டினான்.

சட்டென்று தன் மாமனாரைத் திரும்பிப் பார்த்தாள் சீதா. அவர் குனிந்து பேப்பரை எடுத்துக் கொண்டிருந்தார். "வந்து..." என்று மெல்ல இழுத்தாள் சீதா. அவர் நிமிர்ந்து பார்க்கவும், "அவர் இன்னும் சாப்பிடல்லே. போய் வந்து எழுதவா?" என்று தயக்கத்துடன் கேட்டாள்.





''என்ன! இன்னுமா அவன் சாப்பிடவில்லே? போம்மா. சீக்கிரம் போய் அவனைக் கவனி'' என்றவர், ''நீ அவசரப்பட்டுக் கொண்டு வரவேண்டாம். எனக்கு இன்னும் இரண்டு கடிதாசுகள் எழுத வேண்டியிருக்கிறது. அப்படியே அதையும் எழுதிப் போட்டு விடுகிறேன்'' என்றார். பேனவை மெதுவாக மேஜையின் மேல் வைத்துவிட்டு, ரவியை நோக்கி நடக்க ஆரம்பித்தாள். எங்கே மாமா திரும்பிப் பார்த்து விடுவாரோ என்ற பயத்தால் உள்ளெழுந்த பரபரப்பை வெளிக்காட்டிக் கொள்ளாமல் நடந்தவள், அறையைத் தாண்டியதும் ஒதுக்கி விடப்பட்டிருந்த திரை மறைவை இழுத்து விட்டாள். நிம்மதிப் பெருமூச்சு ஒன்று அவளிடமிருந்து எழுந்தது. தன்னை நோக்கி வரும் சீதாவை நோக்கிக் கைகளை நீட்டிய ரவி அவள் தன்னருகில் வந்ததும், தன் இரு கைகளையும் அவள் கழுத்தைச் சுற்றி மாலையாகப் போட்டபடியே, ''எனக்குப் பசிக்கிறதே, சாப்பாடு கிடையாதா?'' என்று



கேட்டான். மெதுவாக அவன் கைகளைக் கழுத்தினின்றும் விலக்கியவள், ''வாருங்கள். சாப்பிடப் போகலாம்'' என்று கூறியபடியே நடந்தாள்.

''சீதா, நீ என்னம்மா சொல்றே?'' மாமாதான் கேட்டார்.

''எனக்குப் பெண் பிடித்திருக்கு. நல்ல அழகு!'' என்றுள் சீதா.

''கோபிக்கும் ரொம்பப் பிடித்திருக்காம். சாஸ்திரிகளும் ரொம்ப நெருக்கறார். நாளைக்கும் வெள்ளிக் கிழமையா யிருக்கிறதாலே பாக்கு வெத்திலே மாத்திட்டா அடுத்த வெள்ளிக் கிழமையே கலியாணத்தை முடிச்சுடலாம்னு சொன்னர். எனக்கும் சரின்னு படறது. நீ எல்லாத்துக்கும் ஏற்பாடு பண்ணும்மா'' என்றார் மாமா.

''நாளைக்கேவா?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் சீதா.

''ஏம்மா?'' என்றவர் அவள் தயங்குவதைக் கண்டு, ''பரவாயில்லே, சொல்லு!'' என்றார்.

''கொஞ்ச நாட்களானாலும் நாலு இடத்திலே விசாரித்துத் தெரிந்து கொண்டு நிச்சயம் பண்ணலாம்னு எனக்குத் தோன்றுகிறது'' என்றான் மென்று விழுங்கிக்கொண்டு.

''அதெல்லாம் சாஸ்திரி விசாரித்திருப்பார். இல்லேன்னா எங்கிட்ட வந்து பேசுவாரா?'' என்று தீர்மானமாகக் கூறியவர், ''சரிம்மா! போய் ஏற்பாடுகளை யெல்லாம் கவனி'' என்று அவளை உள்ளே அனுப்பி விட்டு டெலிபோனை எடுத்து ஒவ்வோர் எண்ணாகச் சுழற்ற ஆரம்பித்தார்.

சர்மாவின் வீட்டுத் திருமணம் என்றால் கேட்கவா வேண்டும்? பணம் பணத்தோடு சேர்ந்தால் அமர்க்களத்துக்கும், ஆடம்பரத்துக்கும் குறைவில்லை. மணமக்களைக் கூடக் கவனிக்க இயலாதபடி ஊரின் பெரிய புள்ளிகளும், உறவினர்களுமாய்க் குழுமி யிருந்தார்கள். சீதாவுக்கு மூச்சுவிட முடியாதபடி வேலை. இரவு கச்சேரியும், நடனமும் முடிந்த பின் பெரும்பாலோர் சென்று விட்டனர். மாமாவின் வேண்டுகோளுக்கு இணங்கி, மாடி அறையை ஒரு முறை ஏற்பாடெல்லாம் சரியா யிருக்கிறதா என்று பார்த்துவிடலாம் என்று வந்த சீதா திருப்தியுடன் கீழே வந்தாள். பெண்ணை அழைத்து வர வேண்டாமா?

கோபிக்கு ஒரே பரபரப்பு! நிலை கொள்ளாமல் தவித்தான் அவன். படியருகில் வந்து நின்று கீழே எட்டிப் பார்ப்பதும், அறைக்குள் செல்வதுமாக எத்தனை முறைதான் நடை போடுவான்! தன்னை அனுப்பி வைத்த மன்னி ஏன் இன்னும் அவளை அழைத்து வரவில்லை? 'சே' என்று கையை உதறிக்கொண்டே கட்டிலின் மீது சென்றமர்ந்தான் கோபி. ராதாவைப் பற்றி நினைக்கும்போதே, அவளது ரோஜாக் கன்னங்களும், சாயம் தடவாமலேயே சிவந்த கனி இதழ்களும் அடிக்கடி அவன் நினைவில் வந்து அவனைத் தூண்டின. காலையில்தான் அவள் எவ்வளவு அழகாக இருந்தாள்! அவளது பட்டு உடம்புக்கு அந்த மஞ்சள் நிறப் பட்டுப் புடவையும் ஜாக்கட்டும் எவ்வளவு எடுப்பாக இருந்தன! அழகும், அடக்கமும் வாய்ந்த ராதாவைப் போன்ற பெண்ணை மனைவியாக அடைந்த தான் மிகுந்த அதிர்ஷ்டசாலிதான் என்று தன்னைத் தானே மனத்துக்குள் பாராட்டிக் கொண்டான்.

அறையினுள் நுழைந்து தலை குனிந்தவாறே நின்ற ராதாவை ஒரு கையால் அணைத்தவாறே, மறு கையால் கதவை அடைத்துத் தாளிட்டான் கோபி. கட்டிலில் அவள் தோளைப் பற்றி அமர வைத்தவன், ''இந்த இருபது படிகள் ஏறி வர இத்தனை நேரமா?'' என்று கொஞ்சலாகக் கேட்டான்.

வெட்கத்துடன் தலையைக் குனிந்து கொண்டாள் ராதா. என்னவெல்லாமோ பேசவேண்டும் என்று எண்ணிய கோபிக்கு அவளை நேரில் கண்டதும் ஒன்றுமே புரியவில்லை. வாய்க்கு வந்ததையெல்லாம் சொல்லிக்கொண்டே போனான். ''ராதா! ரிஸப்ஷன்போது நீ அப்படி டிரஸ் பண்ணிக் கொண்டிருந்தது எனக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்கல்லே!'' என்றான் கோபி. கவலைக் குறியுடன் ஏறிட்டுப் பார்த்தாள் ராதா.

''ஆமா! நீ அவ்வளவு அழகா டிரஸ் செய்து கொண்டிருந்ததாலே யாராவது கண்ணு போட்டு விடுவார்களோன்னு நான் எப்படிப் பயந்தேன் தெரியுமா?'' என்றான் கோபி குறும்புடன். நிம்மதியாகப் பெருமூச்சு விட்டபடி தலை குனிந்து கொண்டாள் ராதா.

''ஏய் ராதா! புகுந்த வீட்டில் அடக்கமாக இருக்கணும்னு சொன்னதை இதுவரைக்கும் கடைப்பிடிச்சது போதும். எல்லோரும் பொண்ணு ரொம்ப அடக்கம்னு ஆயிரம் தடவை சொல்லியாகி விட்டது. இனிமேல் அதையும் சேர்த்து வைத்து என்னிடம் பேசி விடு. இனிமே நான் பேசவே மாட்டேன். நீதான் பேசணும்'' என்றான் கோபி குழைவாக. அப்படியும் அவளிடமிருந்து பதில் வராததால், ''ஏய், ஊமை! நான் சொன்னது காதில் விழுந்ததா? பேசப் போறியா இல்லையா?'' என்று கொஞ்சலாகக் கேட்டபடியே அவளது தோள்களைப் பற்றி உலுக்கினான். சடாரென்று நிமிர்ந்து பார்த்தாள் ராதா. அவள் கண்களில் கேள்வியும், வியப்பும், கண்ணீரும் மூடி நின்றன.

''வெட்கப்பட்டது போதும் ராதா. என் உணர்ச்சிகள் உனக்குப் புரியவில்லையா? மனம் விட்டுப் பேசாவிட்டால் இந்த நாளே வீண் இல்லையா? பேசு, ராதா!'' என்று கேட்டபடியே அவளருகில் நெருங்கினான்.

''பே...பே...''

சாட்டையடி பட்டவன் போல் பின் வாங்கினான் கோபி. அவன் கண்கள் ராதாவையே வெறிக்கப் பார்த்தன. ஆசை வினையாடிய நெஞ்சை அச்சம் வந்து கவ்வியது. ஒரு நிமிடம் அப்படியே நின்றவன், தன் காலடியில் கண்ணீர் பெருக விழுந்த ராதாவைக் கண்டான். அவள் தொண்டையிலிருந்து அர்த்தமற்ற பல ஒலிகள் எழுந்தன. துடித்துப் போய் நின்றவன் அடுத்த நிமிடம் மார்பைக் கைகளால் பற்றியபடியே, அறையை விட்டு ஓடிக் கொண்டிருந்தான்.

காலையில் வீடே அமர்க்களப்பட்டது. ''காலை மெயிலில் நான் ஊருக்குப் போகிறேன்'' என்ற கோபியின் கடிதத்தைக் கையில் வைத்துக் கொண்டு சுற்றிச் சுற்றி வந்தார் சர்மா. அரை மணியில் உண்மை விடறிந்த செய்தியாயிற்று. கண்களில் நீர் வர நின்ற ராதாவைக் கவனிப்பார் யாருமில்லை அங்கே. பரிதாபமாக அவளைப் பார்த்தபடியே தன் மாமாவின் எதிரில் வாய் திறவாமல் நின்று கொண்டிருந்தாள் சீதா.

''என்னை என்னவென்றம்மா நினைத்துவிட்டான் அவன்? ஊமைப் பெண்ணைத் தலையில் கட்ட என் பிள்ளைதானா அகப்பட்டான்? மூத்த பிள்ளையின் தலையில்தான் அப்படி எழுதியிருக்கிறது. இவனாவது நன்றாக...'' என்று பேசிக் கொண்டே போனவர், வார்த்தையைச் சிதற விட்டதை உணர்ந்து நாக்கைக் கடித்துக் கொண்டார். ஒரே நிமிஷத்தில் அதை மாற்றி, ''என்னை ஏமாற்ற நினைத்தவனுக்குச் சரியான பாடம் கற்பிக்காமல் விடப் போவதில்லை. கோபியும் ஊருக்


வெள்ளை
டெட்
சலவையின் மேன்மை
வெண்மையுடன் தூய்மை
def

கால்கேட்டின் மூலம் நாள் முழுவதும் வாய் துர்நாற்றத்தை அகற்றி பற்கள் சொத்தையாவதையும் தடுங்கள்!




ஏனெனில் ஒரே தேய்ப்பில் கால்கேட் கிரீம், துர்நாற்றத்தையும், சொத்தையையும் உண்டாக்கும் கிருமிகளில் 85 சதவிகிதத்தை ஒழித்துவிடுகிறது.

கால்கேட், 10ல் 7 சந்தர்ப்பங்களில் உடனடியாக வாய் துர்நாற்றத்தை அகற்றுகிறது என்பதையும், உணவு உட்கொண்டவுடன் கால்கேட்டினால் பற்களைத் துலக்கும் முறையால், இதுவரை பற்பசை வரலாற்றிலேயே கண்டிராத பெருமளவில் ஏராளமானவர்களுக்குச் சொத்தை தடுக்கப்படுகிறது என்பதையும் விஞ்ஞான ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன. இந்த சாதனை கால்கேட் ஒன்றுக்குத்தான் உண்டு!

கால்கேட்டின் நீடித்திருக்கும் நூதன நறுமணத்திற்காக, குழந்தைகள் அதனாலேயே பல் துலக்க விரும்புகிறார்கள்!

நீங்கள் பற்பொடியை விரும்பினால் இந்தப் பலன்கள் அனைத்தையும் கால்கேட் டூத் பவுடர் மூலம் அடையலாம். ஒரு டப்பி பல மாதங்களுக்கு வரும்.



DC. G. 35 TAM

பரிசுத்தத்திற்கும், வாயில் நறுமணம்கமழவும், வெண்மையான பற்களைப் பெறவும் வழக்கமாக கால்கேட்டினால் பல்துலக்குங்கள்

...உலகிலேயே பெரும்பாலானவர்கள் மற்றெல்லாப் பற்பசைகளையும் விட, கால்கேட் டெண்டல் கிரீமையே வாங்குகிறார்கள்.

குப் போய்விட்டான். ஹும், பிள்ளையையும் மருமகளையும் விருந்து வைத்து ஊர் அனுப்பணும்னு கோட்டை கட்டினேன். இப்ப பிள்ளைகூடச் சொல்லிக்காமப் போயிட்டான்'' என்று கண்களைக் கைகளால் கசக்கி விட்டுக் கொண்டார். ''நீ உள்ளே போம்மா. எனக்குச் சாப்பிட நேரமாகும்'' என்று சீதாவை உள்ளே அனுப்பினார். ராதாவின் பக்கம் கூடத் திரும்பவில்லை அவர். மெதுவாக ராதாவின் கைகளைப் பற்றிய சீதா, விம்மலினால் நடுங்கும் அவள் உடலை அணைத்தவாறே அறையை விட்டு வெளியேறினாள்.

''சீதா! நீ என்னம்மா சொல்றாய்?'' மாமாதான் கேட்டார்.

பதிலே சொல்லாமல் நின்றாள் சீதா.

''இதோ பார், நான் போட்ட கடிதாசுக்குக் கோபி என்ன பதில் எழுதியிருக்கான் பார்த்தியா? 'அவள்' இருக்கும்வரை இந்த வீட்டுக்கு அவன் வரமாட்டானாம்'' என்று ஒரு கடிதத்தை அவள் முன் தூக்கி எறிந்தார். அதை எடுத்துப் படித்தாள் சீதா.

''படிச்சாயா? அதனாலே நான் நேற்றே உன்கிட்ட சொன்னதையே இப்ப முடிச்சுடப் போறேன். பேப்பர் எல்லாம்கூடத் தயாரா விடுத்து. அவள்கிட்ட கையெழுத்து வாங்க வேண்டியதுதான் பாக்கி. இந்தா இதைப் படிச்சுட்டுக் கையெழுத்தும் வாங்கிக் கொண்டு வா'' என்று ஒரு பேப்பரை அவள் முன் விட்டெறிந்தார். அதைக் கையில் எடுத்துக் கொண்டவள், ''மாமா...'' என்று தயங்கித் தயங்கி ஏதோ ஆரம்பித்தாள். அவளை நிமிர்ந்து பார்த்த சர்மா, அவள் நிற்கும் நிலையையும், அவள் கண்களில் இருந்த பரிதாபத்தையும் உதடுகள் துடிப்பதையும் கண்டவர், ஏதோ புரிந்தது போல் தலையைக் குனிந்து கொண்டார். நிமிர்ந்த போது அவர் கண்கள் கலக்கத்தால் சிவந்திருந்தன. ''இல்லே, சீதா! என் தீர்மானத்தை நான் மாத்திக்க முடியாதுன்னு சொல்றதுக்கு ரொம்ப வருத்தப்படறேன். ஆனா... ஆனா... என் நிலைமையில் நீ இருந்து பார்த்தால்தானம்மா உனக்குப் புரியும். நான் ஒரு தகப்பன் அம்மா! துரதிர்ஷ்டம் பிடித்த தகப்பன். என் குழந்தைகள் நன்றாக வாழறதைப் பார்க்கணும்னு என் பெத்த மனசு துடிக்கிறதம்மா! நான் பெத்த செல்வங்கள்லே ஒண்ணாவது வாழ்க்கையை நிறைஞ்ச மனசோட வாழணும்னு நான் நினைக்கிறது தப்பாம்மா! நான் செய்யறது இரக்கமில்லாத கொடூரமான செயல்தான்! எனக்கே தெரியும் அது! ஆனா பாசத்துக்கு முன்னால் எந்தக் குற்றமும் நிற்க முடியாதும்மா!'' என்றவர் கண்களில் நீர் பொங்கி வழிய அதைத் துடைக்கக் கூட இல்லாமல் அறையை விட்டு வெளியேறினார்.

எதும் புரியாமல் ராதாவை நோக்கிச் சென்ற சீதா கையிலிருந்த கடிதத்தை அவள் முன்னால் வைத்து, ஏதோ சொல்ல வாயெடுத்தவள், கண்ணீர் பெருகி வரவே விம்மலை அடக்கியவண்ணம், அவ்விடத்தை விட்டு ஓடி விட்டாள்.



போலீஸ்காரர்: இதிலே ஒரு ஆள் எலக்ட்ரிசிடி போர்ட் தொழிலாளி; இன்னொரு ஆள் வாட்டர் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்டு. ரோட்லே யாரு முதல்லே குழி தோண்டறதுன்னு போட்டி வந்து, வாய்ச் சண்டை முத்தி அடிதடிவரைக்கும் வந்துட்டது சார்!

நான் கொடுத்த ஒரு பேப்பருக்குப் பதிலாக ராதா கொண்டு வந்து கொடுத்த கடிதத்தைக் கையில் எடுத்தவள், அதைப் படிக்கும் துணிவின்றிக் கையிலேயே வைத்திருந்தாள். பிறகு மாலையில் மாமா வந்து கேட்கும்போது பதில் சொல்ல வேண்டும் என்ற எண்ணம் வந்த சீதா, அதைப் படிக்க ஆரம்பித்தாள்:

''வாயிருந்தும் வார்த்தைகள் வராமையால் இந்தக் கடிதம் எழுதுகிறேன். நீங்கள் தந்த பேப்பரைப் படித்தேன். விவாகரத்துக்கு என் கையெழுத்தை எதிர்பார்த்து அதை என்னிடம் தந்தீர்கள். மன்னி! இந்தத் திருமணத்தைப் பற்றி எத்தனை கோட்டை கட்டினேன் தெரியுமா? என் வாய் ஊமை தான். ஆனால் மனம் ஊமையாக இல்லையே! நமக்கும் வாழ்வு உண்டா என்று எண்ணி ஏங்காத நாள் இல்லை. என் அழகுக்கு ஆசைப்பட்டவர்கள் எல்லாம் என் ஊமைத் தனத்தை வெறுத்து என்னை வெறுத்து விட்டார்கள். அப்படி இருக்கையில் இவர் என்னை மணக்க ஒப்புக் கொண்டு விட்டார் என்றதும் எப்படித் துள்ளினேன் தெரியுமா? உண்மையாகச் சொல்கிறேன். என் தந்தை உண்மையை மறைத்திருப்பார் என்று நான் கனவிலும் கருதவில்லை. ஆனால் அவரும் தான் பாவம் என்ன செய்வார்! எத்தனை ஏமாற்றங்களை அனுபவித்துப் புண்ணானதோ அவர் மனம்? உண்மை தெரிந்தே என் கணவர் திருமணத்துக்குச் சம்மதித்தார் என்று ஊமைக் கனவுகண்ட நான் எப்படி என்னையே புகழ்ந்து கொண்டேன் தெரியுமா? என்னால் பேச முடியாது. ஆனால் நான் பேச நினைப்

சிந்தனைத் துளி

மனிதன் சந்திரனுக்கும், செவ்வாய்க்கும் செல்ல வேண்டுமென்று இப்பொழுது முயன்று வருகிறான். அவன் உயரப் பறக்க விரும்புகிறான். அதே நேரத்தில் அவனுடைய உள்ளம் உயருவதில்லை. அது முன்பிருந்ததுபோல வளர்ச்சியடையாது குறுகியிருக்கிறது. ஆகவே, இன்றையப் பூசல்கள் யாவும் புத்திக்கும், உள்ளத்துக்கும் இடையே உள்ள சண்டையேயன்றி வேறில்லை.

புத்தியின் வளர்ச்சிக்கேற்ப இதயமும் வளராதவரை இந்தச் சண்டை தொடரும். இந்நிலையில் சமுதாயம் என்றும் நிருப்தியற்றிருக்கும். பரஸ்பரவிரோதமும் இம்சையும் தோன்றும். -வினோபா

பதையெல்லாம் அவர் பேசுவார் என்று கோட்டை கட்டினேன். வார்த்தைகள் எங்களிடையே விளையாட முடியாது. ஆனால் கண்களால் சொல்லாமல் சொல்லப்படும் சொற்களுக்கு விலையே இருக்காது என்று எண்ணினேன்! எல்லாம் வீண்! அன்று இரவு, என் வாழ்க்கையின் மங்கல இரவன்று அவர் ''ஊமையா?'' என்று கேட்டதும்தான், உண்மை புரிந்தது எனக்கு! என் தந்தையின் அவசரத்தின் அர்த்தமும் புரிந்தது. ஆனாலும் உங்கள் மூலம் அவரைச் சமாதானப்படுத்தலாம் என்று எண்ணினேன். என் பெண்மையைச் கட்டிக் காட்டி வாழ்வுப் பிச்சை கேட்கலாம் என்று எண்ணினேன். நீங்கள் சொன்னால் மாமா தட்ட மாட்டார் என்பதைப் பலர் சொல்லி அறிந்திருந்ததால் இப்படி எண்ணினேன்! பேப்பரைப் படிக்க எடுக்கும் போதுகூட அந்த எண்ணத்துடன்தான் நான் எடுத்தேன். ஆனால் விதி சதி செய்துவிட்டது. ஆம்! எப்படியோ அவர் எழுதிய கடிதம் அந்தப் பேப்பரின் பின்னால் ஒட்டிக்கொண்டிருந்தது. நானும் 'கோபி' என்ற கையெழுத்தைக் கண்டதும் படித்து விட்டேன். நான் இருக்கும்வரை அவர் ஏன் வராமலிருக்க வேண்டும்? என் பிறந்த இடத்துக்கே நான் போகிறேன். ஆனால் அந்தப் பேப்பரில் நான் கையெழுத்துப் போடவில்லை. மன்னி! உங்களிடம் கைகூப்பி வணங்குகிறேன். தயவு செய்து எனக்கும் கணவர் இருக்கிறார் என்று சொல்லிக் கொள்ள மட்டுமாவது — தவறு நான் எப்படிச் சொல்ல முடியும்!—நினைத்துக் கொள்ள மட்டுமாவது உறுதி தாருங்கள்! உரிமை தாருங்கள்! நான் பெண்! என் மனம் உங்களுக்குப் புரியும். ஆனால் இதற்காக அவர் மறுமணம் செய்து கொள்வது என்றால் தடைப்படாது. அதற்கு எந்த விதத்திலும் நான் குறுக்கே நிற்க மாட்டேன். ஆனால் அவரே பலரறியத் தந்த அந்த ஒரே ஒரு மங்கலச் சின்னத்தை மட்டும் நான் அணிந்திருக்கத் தடை சொல்லாதீர்கள். நீங்கள் தான் மாமாவிடம் பேசி இந்த உதவியைச் செய்ய வேண்டும். நன்றி.''

படித்து முடித்த சீதாவின் கண்களில் நீர் பெருகிக் கொண்டேயிருந்தது.

''என்ன சீதா? படிக்கிறாயா?'' என்று அருகில் வந்தான் ரவி. அவனைக் கண்டதும் சிரிக்க முயன்றாள் சீதா. அவள் அருகில் உட்கார்ந்து கொண்ட ரவி, ''சீதா, எனக்கும் புத்தகம் காண்பியேன். நானும் படம் பார்க்கிறேன். படிக்கவா?'' என்றவன், 'படம், பட்டம், பம்பரம்' என்று என்னவோ எழுதியதைப் படிப்பது போலப்படித்துக் கொண்டே போனான். விம்மல் ஒன்று வெடித்துப் புறப்பட்டது சீதாவின் இதயத்திலிருந்து. நிமிர்ந்து பார்த்த ரவி, ''ஐயோ! ஏன் சீதா அழறே? அப்பா அடிச்சானா? அழாதே. நான் அப்பாவை அடிச்கடறேன். முன்னக் கூட கோபி என் பம்பரத்தைப் பிடுங்கிண்டு தரவே மாட்டேன்னான். அப்பக்கூட அப்பா அவனை அடிச்கட்டு, என்னையும், 'நீ ஏண்டா பொறந்தே?'ன்னு அடிச்சா. கோபி என் பம்பரத்தைத் தராமலேயே ஊருக்குப் போயிட்டான், பாரு! நீ அழாதே சீதா!'' என்றவன், அவள் குமுறிக் குமுறி அழுவதைப் பார்த்து, ''சீதா, அழாதே! நீ அழுதால் எனக்கும் அழுகை வறது. நோக்கு மிட்டாயி, சாக்லெட், பம்பரம் புதுசா வாங்கித் தரேன். நீ அழாதே, சீதா!'' என்று கெஞ்சினான்.

''உங்க அப்பா என்னை அடிக்கல்லே! ஒரு பெண்ணோட வாழ்க்கையையே அடிச்சுட்டார். உடல்லே வளர்ந்தும், உள்ளத்திலே வளராத பச்சைக் குழந்தையான உங்களுக்கு என்னை உண்மையை மறைச்சுக் கலியாணம் பண்ணினபோது தம் தப்புத் தெரியலே. இப்ப ராதா ஊமைங்கறதை மறைச்சதுக்கு அவனைப் பழி வாங்கறார். அவவாய் ஊமை என்றாலும் உள்ளம் நிறைஞ்ச வார்த்தைகள் இருக்கு. ஆனா உணர்ச்சிகளை ஊமையாயிட்ட உங்களை எனக்குக் கலியாணம் பண்ணினாரே அதுக்கு நீதி இடையாதா? ஆமா! நீங்க ஆண்! உங்களுக்குக் குறையிருந்தாலும் நான் ஊமையாயிருக்கணும். ராதா பாவம், ஏன் பெண்ணாய்ப் பிறந்தாள்! அதுக்குத் தண்டனையை அவள் அனுபவிக்கத்தான் நீரணும்'' என்று பைத்தியம் பிடித்தவள் போலக் கதறினாள்.

''சீதா, சீதா!'' என்று அவளருகில் வந்து அவள் கண்களைத் துடைத்த ரவி, ''என்னை ஏன் இட்டறே சீதா? என்னைக் கலியாணம் பண்ணிண்டது உனக்குப் பிடிக்கல்லையா? நீ யாரையாவது கலியாணம் பண்ணிக்கோ, சீதா. ஆனா அழாதே. நீ அழுதா எனக்கு என்னமோ பண்றது சீதா. அழாதே சீதா!'' என்று அவள் கண்களைத் துடைத்தவாறே அவளைப் பரிதாபமாகப் பார்த்தான். அவன் கண்கள் அவனுக்கே தெரியாமல் நீரைப் பொழிந்து கொண்டிருந்தன. ''இல்லே, இல்லே. எனக்கு உங்களைப் பிடிச்சிருக்கு. இனிமே அப்படிச் சொல்லாதீர்கள். உங்கள் அப்பா மேல் உள்ள ஆத்திரத்தில் என்னென்னவோ உளறிவிட்டேன். என்னை மன்னித்து விடுங்கள். என் தெய்வமே, என்னை மன்னித்துவிடுங்கள்!'' என்று கதறிய சீதா ஆவேசம் வந்தவள்போல ரவியின் கழுத்தைச் சுற்றித் தன் கைகளைப் படரவிட்டு, குமுறிக் குமுறி அழ ஆரம்பித்தாள். ''அழாதே, சீதா! அழாதே!'' என்றபடி தானும் அழுதபடியே அவள் கண்களைத் துடைத்தான் அந்த வாலிபக் குழந்தை!



17

அந்த இரவும் அந்த நிலவும் நாணுவால் மறக்க முடியாதவை. அந்த உறவும் அந்த நிறைவும் மறக்க முடியாதவை.

மனத் திரையில் இன்னும் அவள் நிற்கிறாள்; சிரிக்கிறாள்; அன்பைப் பொழிகிறாள்.

தலைகீழாக மலையிலிருந்து விழுந்த அருவி சிதறிப் போகாமல் மின் சக்தியாக மாறியது போல, அவனுடைய உறவின் வேகமும் ஆக்கம் பெற்று விட்டது.

கள்ளிக் கோட்டை அலுவல்கள் ஒருவாறு முடிந்ததும், கோவை திரும்பினான் நாணு. குஞ்சுராமன் கோஷ்டியும் குன்னி குட்டன் கோஷ்டியும் தலைமைப் பதவியைச் சங்குவின் கோஷ்டிக்கு விட்டுக் கொடுக்க வகை செய்த பின்னரே புறப்பட்டான். புறப்படும் முன் பாருக் குட்டியிடம் விடைபெற நேரம் கிடைக்காது போயிற்று.

வந்ததும் வராததுமாக விசுவநாதன் கேட்டார்: ''பணத்தை என்ன செய்தாய்...?''

''தானம் செய்து விட்டேன், மாமா!'' என்றான் அவன்.

''தானமா, நன்கொடையா?''

''இரண்டுக்கும் வித்தியாசம் உண்டா, என்ன ?''

''ஏன், இல்லாமல்?...தானத்தில் ஆத்ம பலனை எதிர்பார்க்கிறோம். நன்கொடையில் பிரதி பலனை....''

நாணு சிரித்தவாறே தன் அறைக்குச் சென்றான். பாருக் குட்டியிடம் பணம் போய்ச் சேர்ந்ததே, அது தானமா, நன்கொடையா? இரண்டும் இல்லை. உரிமையோடு பாருக்குட்டி அவனிடமிருந்து எடுத்துக் கொண்ட பணத்தை, குஞ்சுராமன் கொள்ளையடித்துக் கொண்டு போனான். அவனுடைய பேதை

மையைத் துணைக் கொண்டு அவளிடமிருந்து அதை அவன் பறித்துக் கொண்டு விட்டான்.

''கள்ளிக்கோட்டை விஜயம் ஒரு மகத்தான சாதனையாக அமைந்து விட்டதுபோல் இருக்கிறதே, நாராயண்...! தேர்தல் நன்றாக நடந்ததாகத் தகவல் வந்திருக்கிறது'' என்றார் நாயர்.

நாணு அவருடைய புகழ்ச்சியை ஒரு முறுவலோடு அங்கீகரித்துக் கொண்டான்.



நாயர் தொடர்ந்தார். ''குஞ்சுராமன் கோஷ்டியைத் தலைதூக்க முடியாமல் செய்து விட்டார்கள்.... பாவம், அவன் ஊரைவிட்டே ஓடி விட்டானும்.''

''ஓடி விட்டானா?''


''ஆமாம். உங்களுக்குத் தெரியாதா, சேதி?''

''தெரியாதே!''

''நீங்கள்தான் அவரை விரட்டுவதற்கு எல்லா ஏற்பாடுகளும் செய்ததாகப் பேசிக் கொள்கிறார்கள்.''

யாத்திரை

ஏ.எஸ்.ராகவன்



புதுமையின் பொலிவுக்கு ஹமாம்
HAMĀM
the family soap
அதிக காலம்
நீடித்துழைக்கும்
டாய்லெட்
சோப்
நாள்தோறும் ஹமாம் உபயோகியுங்கள். உங்கள் சருமத்தைச் சுத்தம் செய்வதுடன், புத்துணர்ச்சியையும் அளிக்கிறது. உங்கள் மேனிக்கு கவர்ச்சியான மெருகையும் கொடுக்கிறது. நெடுங்காலம்...நீடித்திருக்கும் ஹமாம் டாய்லெட் சோப்பை உபயோகியுங்கள்.
டாடா தயாரிப்பு

நாணு அவரை உற்றுப் பார்த்தான். குப்பு சாமியின் வழக்கில் மூக்கு உடைந்த பிறகு, நாயர் அவனிடம் வாலாட்டுவதில்லை. இப்போதுதான் மெள்ளத் தொடங்குகிறார். எதையோ மனத்தில் கொண்டு எதற்கோ முடிச்சுப் போட்டு அவர் பேச்சை விரிக்கிறார் என்பதை அவன் கண்டு கொண்டான். எனவே, அழுத்தமான குரலில், ''மிஸ்டர் நாயர், வதந்திகளை நம்புவது நமக்கெல்லாம் அழகில்லை'' என்றான்.

''உண்மை. மிஸ்டர் நாராயண்..... நானும் உங்கள் விஷயத்தில் அதிகம் கவனமுள்ளவன்தான்.... ஆனால் குஞ்சுராமனைப் பொறுத்தவரையில் அவனை ஒழித்துக் கட்டியது சரியான காரியம் என்பேன். அவன் உங்களைப் பற்றி என்னவெல்லாம் பேசியிருக்கிறான், தெரியுமா?''

முழு வதந்தியையும் கேட்டே விடுவதென்று நாணு தீர்மானித்தவனாய், ''தெரியாது, மிஸ்டர் நாயர்! சொல்லுங்கள். என்னைப் பற்றி எனக்கே தெரியாத பல சுவையான செய்திகளெல்லாம் இருக்கும் போலிருக்கிறதே'' என்றான்.

நாயர் நிதானித்தார். அவர் படபடத்தால் அபாயமே இல்லை. நிதானித்தாரானால் ஆபத்து. ''நாராயண், குஞ்சுராமனின் மனைவி பாருக்குட்டியுடன் நீங்கள் ரயிலில் பயணம் செய்தீர்களாம். கள்ளிக்கோட்டையில் அவள் வீட்டுக்குப் போய் விருந்து சாப்பிட்டீர்களாம்.''

''உண்மை. விருந்தில் குஞ்சுராமனும் இருந்தார்'' என்றான் நாணு நிதானமாக.

''அவன் மூலம் குஞ்சுவுக்குப் பணம் கொடுத்தீர்களாம். லஞ்சம் கொடுத்து, அவனைத் தேர்தலிலிருந்து விலக்க முயன்றீர்களாம்....''

நாணு சிரித்தான்.

''ரயிலில்கூட அவளுடன் நீங்கள் பழகிய முறை நன்றாக இல்லை என்று பேச்சு அடிபடுகிறது.''

''இவ்வளவுதானா?''

''இது போதாதா?''

''போதாது, மிஸ்டர் நாயர், போதாது'' என்று சிரித்தான் நாணு. ''நம் ஜனங்களுக்கு என் மீது எத்தனை அக்கறை! ரயிலில் மட்டுமல்ல, கள்ளிக்கோட்டையில் அவர்களுடைய வீட்டில்கூட நான் பழகியது நன்றாக இல்லை என்று யாரும் சொல்லவில்லையா?''

நாயர் சமாதானம் கூறுபவர் போல் அவனைப் பார்த்து அசட்டுச் சிரிப்புடன், ''எங்கள் பகுதியில் மாந்திரீக வேலை அதிகம், நாராயண்.... தவிரவும் கேரளப் பெண்கள் அழகுக்குப் பெயர் போனவர்கள். நீங்கள் இளைஞர்..... இந்த ஆபத்துக்களை எதிர் பார்த்திருக்க வேண்டும்'' என்றார்.

''தங்கள் உபதேசத்துக்கு நன்றி.... எனக்குக் கேரளப் பெண்களைவிட, அங்குள்ள மாந்திரீக வேலைகளைவிட, பெண்மையை மதிக்காத ஆணினத்தின் மீதே வருத்தம் உண்டாகிறது. மிஸ்டர் நாயர்! குஞ்சுராமனின் மனைவி ஒரு களங்கமற்ற புஷ்பம் போன்றவள். குழந்தை மனம் படைத்தவள்..... ஒரு முறை அவளை நீங்கள் பார்க்க நேர்ந்தால் என் வார்த்தை உங்களுக்குப் புரியும்.''

'' நான் அவளைப் பார்த்திருக்கிறேன், நாராயண்.''

''பார்த்திருக்கிறீர்களா?''

''ஆமாம்.... அவள் குழந்தை இல்லை. நீங்கள்தான் குழந்தை. அவளைக் கொண்டுதான் குஞ்சுராமன் கோஷ்டியே கள்ளிக்கோட்டையில் தலைதூக்கி நிற்பதாக எல்லாரும் சொல்கிறார்கள்.''



லட்சாதிபதியின் மகன்: காரிலிருந்து இறங்கிக் கதவைத் திறக்க வேண்டுமென்று டிரைவரை வேலையிலிருந்தே எங்கப்பா நீக்கிட்டாரு!

கோடீசுவரரின் மகன்: இதென்னடா பிரமாதம்? கார் டிரைவர் கதவைத் திறக்கலேன்னு எங்கப்பா ஒரு நாள் முழுவதும் காரிலேயே உட்கார்ந்திருந்தாரு, தெரியுமா?

நாணு எழுந்தான். ''நல்லது, மிஸ்டர் நாயர்...நான் இன்னமும் குழந்தை தான் போல் இருக்கிறது....'' என்றவாறே வெளியேறினான்.

இவ்வளவு வதந்திகள் உலவக்கூடும் என்று அவன் எண்ணவேயில்லை. அவை எவ்வளவு விரைவில் எங்கெல்லாம் பரவி விட்டன என்பதை நினைத்து வியந்தான். கோவையே புகைகிற போது கள்ளிக்கோட்டையில் தீயல்லவா மூண்டிருக்கும்! இந்நேரம் அந்தப் பேதைப் பெண் குஞ்சுராமனிடம் அடிபட்டுக் கொண்டுதான் இருப்பாள். அவனுக்கு வேலையும் போய் விட்டதாக நாயர் சொல்லுவது உண்மையானால், அதற்கு நாணுவே காரணமாக இருந்தான் என்ற பிரசாரம் வலுவாக இருப்பது உண்மையானால், அந்த அபலை அதற்கான முழுப் பொறுப்பையும் ஏற்றே தீரவேண்டியிருக்கும். இழவள் என்ன பாடுபடுகிறாளோ!

பெருமூச்சு திமிறிக் கொண்டு வந்தது.

''ஏன், என்னவோ போலிருக்கிறாய்?'' என்று கேட்டவாறே கமலா நுழைந்தாள். நாணு பதில் சொல்லாமல் வெறுமனே அவளையே உற்றுப் பார்த்தான். கமலாவுக்கும் பாருக்குட்டிக்கும் எத்தனை வேறுபாடு! ஒரு திருப்பத்தில் இவள் தன்னை, நிலை நிறுத்திக் கொண்டாள். பாருவோ நிலைப்பிலேயே திருப்பம் விளைவிப்பவள்.

''அடேயப்பா, என்ன பார்வை இது?'' அவள் சிரித்தாள்.

'' நானும் கவனித்துக் கொண்டே வருகிறேன். நீ ரொம்பவும் மாறிவிட்டாய்,

நாணு!'' என்றவள் அந்தப் பக்கம் வந்த லட்சுமி அம்மாளைப் பார்த்து, ''அத்தை, கள்ளிக்கோட்டை போய் வந்த பிறகு நாணு புது ஆளாகி விட்டான், இல்லையா?'' என்று கேட்டாள்.

லட்சுமி அம்மாள் கவனியாமல் இருப்பாளா? கவனிக்காதது போல் வேண்டுமானால் இருப்பாள். கமலாவின் கேள்விக்கு அவள் பதிலாக ஏதும் சொல்லாமல் ஒரு பாட்டைச் சொன்னாள்.

''பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவல; காலவகையினானே.''

''புதிதாகப் புகுந்தது எது, அத்தை?'' என்று கேட்டாள் அவள்.

''அவனையே கேளேன். யாரோ ஒருத்தியின் விசாரம் அவனைப் பிடித்துக் கொண்டிருக்கிறது.''

கமலாவோடு நாணுவும் திடுக்கிட்டான்.

''அத்தை, யாரவள்?'' என்று கேட்டாள் கமலா, பரபரப்புடன்.

பாருக்குட்டியைப் பற்றிய செய்தி அம்மாவுக்குத் தெரிந்து விட்டதை நாணு புரிந்து கொண்டான். விசுவநாதன் மூலம்தான் அது அவள் காதுக்கு வந்திருக்கும். செய்தி மட்டும் வந்ததா! வதந்தியுமா?

''இந்த வீட்டில் இதுவரையில் எதுவும் ரகசியமாக இருந்ததில்லை'' என்றாள் லட்சுமி அம்மாள், அவனுடைய சந்தேகத்தை ஊர்ஜிதப்படுத்தும் முறையில்.

நாணுவை இந்தச் சொற்கள் சுட்டுவிட்டன. ஆற்றாமையோடு அவளைப் பார்த்துப் பேச வாயெடுத்தான். கண் கலங்கி விட்டது.

லட்சுமி அம்மாள் சிரித்தாள். ''பயந்து விட்டாயா, குழந்தை?.... நேற்று சாயந்திரம் அந்தப் பெண்ணே இங்கே வந்திருந்தாள். இல்லா விட்டால் எனக்கு எப்படித் தெரியும்?'' என்றாள்.

''பாருக்குட்டியா வந்திருந்தாள்?'' நாணுவுக்கு இந்தச் செய்தி வியப்பாக இருந்தது. அவன் அருகேயே அவள் வந்து விட்டாளா! எப்போது? எவ்வாறு?

''ஆமாம்'' என்று தலையை ஆட்டியவாறே லட்சுமி அம்மாள் உள்ளே போய் விட்டாள்.

''யார் இந்தப் பாருக்குட்டி?'' என்று கமலா கேட்டாள்.

அந்தப் பெண்ணைப் பற்றிய ரகசியத்தை நாணு கூறினான். ''கமலா, அவளைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?'' என்று கேட்டான்.

''அவளைப் பற்றி என்றால் ஏதும் நினைக்க முடியவில்லை, நாணு.... உன்னைப் பற்றித்தான் நினைக்கிறேன். நீ எப்படி இவ்வளவு உயர்ந்தவனாக ஆனாய்!''

''அதுவும் அவளால்தான்..... பொதுவாகப் பெண்களே என் வாழ்வில் என் உயர்வுக்குக் காரணமாக இருந்திருக்கிறார்கள். ஏன், நீயே என்னை உயர்த்தியவள்தானே, கமலா?'' என்றான் நாணு.

'' நாணு?'' — வியந்தாள் கமலா.

''ஊஹூம். நீ இல்லை. கமலா என்கிற என் அத்தானின் பெண்.... வேலூரிலே அவள் செல்லப் பெண்ணாக இருந்தாள்.... இங்கே அவள் பெண் செல்வமாக இருக்கிறாள்.''

கமலா சிரித்தவாறே, ''எனக்குத் தலையைச் சுற்றுகிறது. நான் போய் வருகிறேன்'' என்றாள்.

''எங்கே போவாய்?''

''கடவுளே, போகும்போது எங்கே என்று கேட்கலாமா?''

''போகாத போது கேட்க முடியுமா? இரு கமலா, நானும் வருகிறேன்.''

நாணு அவளுடன் புறப்பட்டான். கமலாவுக்குத் தேர்வுகள் முடிந்த சமயமாக இருக்கவே ஏதாவது திரைப்படத்துக்குப் போக விரும்பினாள். மறு நாள் வேலூர் போவதாகவும் சொன்னாள். அத்தானிடம் அவளைப் பற்றிச் சொல்லப் போகிறாளாம். ருக்கம்மா அவளைப் பற்றிக் கேட்டால் மகிழ்ந்து போவாளாம். கமலா சொன்னாள்.

''எங்கோ போயிருக்க வேண்டியவன் எங்கோ வந்துவிட்டேன், கமலா. உண்மையில் நாம்தான் வளர்கிறோமா, நம்மை ஏதாவது ஒரு சக்தி வளர்க்கிறதா என்று புரியவில்லை. சந்தர்ப்பங்கள் வரும் போது அவற்றை எதிர்கொள்ளும் முறையில்தான் வளர்ச்சி அல்லது தாழ்ச்சி வருகிறது போலிருக்கிறது'' என்றான் நாணு.

படம் ஓடிற்று. பேச்சும் நின்றது.

படம் நின்றது. பேச்சு ஓடிற்று.

இருவரும் குளிர்நீர் அருந்த வெளியே வந்தார்கள். கடைக்காரன் அவர்களுக்கு ஆசனம் அளித்து உபசரித்தான். அழகிய மங்கை உடன் வந்தால் உபசரணைக்குக் கேட்க வேண்டுமா? முட்டை முட்டையாகக் கண்கள் நாலாபுறமும் அடை காத்தன.

''நாராயண்!''

கும்பலிலிருந்து ஒரு குரல் வெளிப்பட்டுத் தன்னை விளிப்பதைக் கண்ட நாணு திரும்பிப் பார்த்தான். புஷ்கோட்டும், நிஜாரும், குளிர்க்கிக் கண்ணாடியும் மாறாமல் பழைய திருக்கோலத்தில் ஜெகு வந்தான் எதிரே. அருகில் கமலா இருப்பதைக் கண்டதும் தலையைச் சாய்த்து வணக்கம் தெரிவித்து, ''நாராயணன், எத்தனை காலம் ஆயிற்று. உன்னைப் பார்த்து?.... ஒரு பெரிய ஸர்ப்ரைஸாக இருக்கிறதே! கமலா, சௌக்கியம்தானே?'' என்று விசாரித்தான்.

''உம்'' என்றாள் அவள் தலையைத் திருப்பிக் கொண்டு.

''ஜெகு, எப்போது வந்தாய் நீ?'' என்றான் நாணு.

''எப்போது போகப் போகிறாய் என்று கேள்....நான் இங்கே வந்து பத்து நாட்கள் ஆகின்றன.''

''அப்படியா?''

''நாளைக்குப் புறப்படுகிறேன். மறுபடியும் அடுத்த மாதம் வருவேன். படம் எப்படி இருக்கிறது? எங்கள் கம்பெனி ரிலீஸ்தான்.''

''நன்றாக இருக்கிறது, ஜெகு!''

''நன்றாக இருக்கிறதா? பாக்ஸ் ஆபீஸ் ஹிட் தெரியுமல்லவா?.... ஒரு லவ் ஸீன் போதுமே! ஸிம்லாவிலே எடுத்தது.... புதுமுகம் குமார் 'லவ்'வுக்கே பிறந்தவன் மாதிரின்னா நடிக்கிறான்! ஹோட்லாவ் எப்படி? லாரி லாரி, லம், லாரி லாரி லம்....''

ஒரு லாரிப் பேச்சை இறக்கத் தயாராக இருந்தான். ஜெரு, பழைய லாரியேதான்! சரக்கெல்லாம் பழசு. முறுக்குத்தான் புதிதாக இருந்தது.

''இந்தத் தடியன் அப்படியே இருக்கிறானே!'' என்றாள் கமலா, அவன் போனதும்.

''அதுதான் அவனுக்கு அழகு. பிறக்கும் போதே வளர்ந்து பிறந்தவன் அவன்'' என்றான் நாணு.

''இன்னமும் உனக்குப் பாசம் விடவில்லே!''



''என் அம்மா 158 பவுண்டு. அவள் எடை அதிகமாயிருக்கேன்னு நேற்று 5 பவுண்டு எடையைத் தனியாக எடுத்து வைத்து விட்டாள்!''

''அதெப்படி முடியும்? ஆபரேஷனா?''

''இல்லே! எனக்குத் தங்கைப் பாப்பா பிறந்ததே, அதன் எடை!''

''அதல்ல, கமலா! பிறவியின் இயற்கைத் தன்மை மாறாது..... அதை மாற்றினாலும் செயற்கைதான் வரும்.''

மீண்டும் படம் தொடங்கிக் கொஞ்ச நேரத்துக்கெல்லாம் இருளில் துழாவிக் கொண்டு ஜெரு வந்து விட்டான். நாணுவுக்கு அருகில் உட்கார்ந்து கொண்டான். என்னென்னவோ கதைகள். அவனுடைய வழக்கமான காதல் விவகாரங்கள். உத்தியோக மாற்றங்கள். அத்தையின் மீது புகார்கள். ஒளிவு மறைவுதான் கிடையாதே அவனிடம்!

''லைஃப்லே பற்றுதலே இல்லாமல் போய் விட்டது. நார்யாணு.... எதுக்காக வாழ்கிறோம்னே புரியலே'' என்றான் இறுதியில்.

''நீ உல்லாசப் பேர்வழி ஆயிற்றே! உனக்குக் கூடவா விரக்தி வந்து விட்டது?'' என்று கேட்டான் நாணு.

''உன்னைப் பார்த்த பிறகு அந்த விரக்தி வந்திருக்கிறது, நார்யாணு.''

''அட, கடவுளே!''

''ஆமாம்..... நான் தேடி அலைகிறேன். எனக்கு அகப்படுவதில்லை. நீயோ தப்பித்து ஓடப் பார்க்கிறாய்: உன்னை எல்லாமே நாடி வருகிறது.....'' என்றான் ஜெரு, பெருமூச்சுடன். கமலாவின் காதில் விழுகிற மாதிரிதான் சொன்னான். அவள் முகம் சிறுத்து விட்டது.

''ஜெரு, என்னைப் பார்த்தா பொறாமைப் படுகிறாய்?'' என்றான் நாணு.

''பொறாமை இல்லே, நார்யாணு... சந்தோஷம்தான். நீ நன்றாக, சௌக்கியமாக இருப்பாய். உன்னால் முடியும். என்னைப் பார். ஏன் இப்படி ஊர் ஊராகத் திரிந்து கொண்டு ஒரு வேலையும் பிடிக்காமல் அலைய வேண்டுமோ, தெரியவில்லே. கல்கத்தாவிலே இருந்தேன். நல்ல சம்பளம்; தினசரிப் பேட்டா பத்து ரூபாய். முதல் வகுப்புப் பிரயாணமெல்லாம் இருந்தது. அதைத் தலை முழுகினேன். அப்புறம் பம்பாய்! அங்கேயும் நிலை கொள்ளவில்லே. டில்லியில்கூட ஒருவட்டம் அடித்தாயிற்று. எதுவுமே பிடிக்கவில்லே. எல்லோருக்கும் என்னைப் பிடிக்கவில்லே. கடைசியில் இந்த பேரா தூக்குகிற வேலை..... ஜனங்களை ஏமாற்றிப் பணம் செய்கிற தொழில் வாய்ப் போக்க இது....சீட்டி அடிக்கிற பயலுக்காக ஒரு குஸ்திச் சண்டை, கல்லூரி மாணவர்களுக்காகக் காதல் ஸீன். பெண்களுக்காகச் சில அழுகைகள், சாவுகள்...குழந்தைகளுக்காகத் தமாஷ்கள்... தாத்தாக்களுக்குப் பக்தி..... படத்துக்காகக் கதை........ பெயருக்காக நடிகர்கள், டியூனுக்காகப் பாடல்கள்...'' என்றான் ஜெரு.

''ஜெரு! இவ்வளவு நுட்பம் புரிந்திருக்கிறதே, உனக்கு!''

''நானே படம் எடுத்து ஹிட் ஆக்க முடியும். ஆனால் யாருக்குப் பிரயோஜனம்?''

நாணு கமலாவைப் பார்த்துச் சிரித்தவாறே கூறினான்: ''ஜெரு மாறவே யில்லே, என்றாயே, கமலா? பார், எப்படி மாறியிருக்கிறான் என்று!''

அவள் அதைப் பார்க்கத் தயாராயில்லை. படம் பார்க்க வந்தாளா, கதை கேட்க வந்தாளா ?

''நாளைக்கு வரேன், உன்னைப் பார்க்க.... விசுவநாத மாமா வீடுதானே? அவர் கொஞ்சம் அரை ஜாஸ் ஆச்சே! வீட்டிலே மாமிதான் சர்வாதிகாரம் செய்வாள். இல்லையா?''

நாணு பதில் சொல்லவில்லே. ஜெருவின் துலாக்கோல் அப்படி இருக்கும் போது பதில் சொன்னாலும் அவனுக்கு விளங்குமா?

''அப்பாடா! தொலைந்தானா ஒரு வழியாக ?'' என்று மூச்சு விட்டாள் கமலா.

நாணு சிரித்தான்.

''மறுபடியும் அவன் காற்று உன் மீது படாமல் பார்த்துக் கொள், நாணு.... அது விஷப் பாம்பு'' என்றாள் கமலா.

''நான் யார் தெரியுமா? பரமசிவன்! அந்தப் பாம்பைக் கழுத்திலே போட்டுக் கொள்வேன்!''

கமலாவை இந்தப் பதில் சிரிக்க வைத்ததோடு சிந்திக்கவும் வைத்தது போலும். ஜெரு பற்றிய புகார்களை நாணு ஏற்கமாட்டான். அவனுடைய இயல்பை அவன் ரசிக்கிறான். இந்த ரசனை எதில் முடியுமோ?

உள்ளூற ஒருவித அச்சமும் அருவருப்பும் எழ, கமலா ஜெருவைப் பற்றிய பேச்சை அத்துடன் நிறுத்திக் கொண்டாள்.

படம் முடிந்து அவர்கள் வெளி வந்த போதும் ஜெரு விடவில்லை; மறித்துப் போய் பிடித்துக் கொண்டான்.

காதல் கடிதம்!



'நீங்க எனக்கு எழுதிய காதல் கடிதம் எங்கப்பா கையில் கிடைச்சுட்டுது.'

'ஐயய்யோ!'

'எங்கப்பாவுக்குப் படிக்கத் தெரியாது!'

'நல்ல வேளை!'

'அதனாலே அந்த லெட்டரை எடுத்துக்கொண்டு அடுத்த வீட்டுக்குப் போனார்.'

'ஐயையோ!'

'அடுத்த வீட்டு மாமா வீட்டுல் இல்லே.'

'கடவுள் காப்பாற்றினார்.'

'உடனே அவர் பையனைக் கூப்பிட்டுப் படிக்கச் சொன்னார்.'

'ஐயையோ!'

'நல்ல காலம்!' 'அந்த சமயம் பார்த்து அந்த லெட்டரை வாங்கி நான் மறைத்துக் கொண்டு விட்டேன்.'

'அப்பாடா! இதை முதலிலேயே சொல்லி யிருக்கக் கூடாதா, கண்ணே!'

'கண்ணாவது மூக்காவது. இனிமேல் இப்படி யெல்லாம் தத்துப் பித்துன்னு கடிதம் எழுதாதீங்கன்னு சொல்லி உங்க எதிரிலேயே இதைக் கிழித்துப் போட்டுவிட்டுப் போகத்தான் வந்தேன்!'

—என். சந்தானம்

கடைசியில் ஒருவாறு ஒப்புத்து, "காலையில் வந்து பார்க்கிறேன்" என்று கூறி இருவருக்கும் விடை கொடுத்தான்.

யாரைப் பார்ப்பதாகச் சொன்னானோ, புரியவில்லை. பொதுப்படையாகச் சொல்லி வைத்தான்.

சிறிது தூரம் சென்று திரும்பிப் பார்த்த போது, தியேட்டரின் வாசலில் யாரோ ஒரு பெண்ணுடன் ஜெரு பேசிக் கொண்டிருந்ததையும் வளையம் வளையமாக அவன் வாயிலிருந்து புகை வெளிப்பட்டதையும் கண்டான் நாணு. ஹூம், இப்படியும் ஒரு பிரகிருதி! ஜெருவிடமிருந்த ஒரே ஒரு நல்ல குணம் அவனுடைய வெகுளித்தனம்தான்—யாரிடம் எதைச் சொல்லலாம் என்கிற பாகுபாடு அவனுக்குக் கிடையாது. காதலிலிருந்து கம்பெனி விவகாரம் வரை சொல்லித் தீர்ப்பான்; மறைக்கத் தெரியாது.

வீட்டை அடைந்த போது லட்சுமி அம்மாள் வாசலிலேயே நின்று கொண்டிருந்தாள். "எங்கே, போய் விட்டாய் குழந்தை? அந்தப் பெண் உனக்காக இவ்வளவு நேரம் காத்துக் கொண்டிருந்தது" என்றாள்.

"பாருக்குட்டியா?"

"ஆமாம். நாளைக்கு வரச் சொன்னேன்."

"அவள் வரமாட்டாள்" என்றார் விசுவநாதன் உள்ளிருந்தவாறே. "நல்ல மாட்டுக்கு இரண்டு சூடுதான் போடுவது வழக்கம். மூன்றாவது சூடு போடுவதில்லை."

இரு முறை வந்தும் அவனைக் காணாததால் இனி அவள் வரலாகாது என்கிற குறிப்பை அவர் உணர்த்தினார். நாணு அதைப் புரிந்து கொண்டான். நேற்று வந்தவள் இன்றும் வரக் கூடும் என்று அவனுக்கு ஏன் தோன்றாமல் போயிற்று? அவளை மறந்து விட்டானா அதற்குள்? பாவம், அவனைக் காணாமல் பாருக்குட்டி வருத்தமுற்றிருப்பாள்.

"இவன் சாமானியப்பட்டவன் என்று எண்ணாதே, லட்சுமி. கன்னிக்கோட்டையில் அந்தப் பெண்ணின் வீட்டுக்குப் போய் விருந்து சாப்பிட்டுவிட்டு, பணமும் கொடுத்து விட்டு, பிரதி உபகாரமாகத் தேர்தலில் அவர்களைத் தோல்வியுறச் செய்து விட்டு வந்திருக்கிறான்."

லட்சுமி அம்மாள் விழித்தாள். நாணு திடுக்கிட்டான்.

"இங்கிருந்து போகும் போதே அந்தப் பெண்ணையும் அழைத்துக்கொண்டு போயிருக்கிறானடி இவன்! இஞ்சினைத் தடம் புரட்டி விட்டிருக்கிறான். அவளுக்கு நீ கொடுத்த பொரிவிளங்காய் உருண்டையை எல்லாம் தந்திருக்கிறான்....."

அவர் கேலி செய்கிறாரா, குற்றம் சாட்டுகிறாரா என்று நாணுவுக்குப் புரியவில்லை. ஒன்று மட்டும் புரிந்தது. நாயர் எல்லா விவரங்களையும் அவரிடம் சொல்லி விட்டார். சந்தேகமே யில்லை.

"இன்னும் என்னவெல்லாம் செய்யப் போகிறானோ? ஆபத்தில் சிக்கிக்கொள்ளாமல் தப்பித்து வந்தால் சரி" என்று கூறி முடித்தார் அவர்.

"குழந்தைக்கு ஓர் ஆபத்தும் வராது. சும்மா இருங்கள். அந்தப் பெண் பாவம், சூதே அறியாத குழந்தை! சதா சிரிப்புத்தான்; ஓயாத பேச்சுத்தான். வீடே கலகலப்பாக இருந்தது" என்றாள் லட்சுமி அம்மாள்.

"உனக்கு வெளுத்ததெல்லாம் பால்தான்" என்றார் அவர்.

நாணு அங்கிருந்து அகன்றான். மாமா ஏன் அவ்வாறு சொன்னார் என்பதை அவனால் கண்டுகொள்ள முடியவில்லை. பாருக்குட்டி வரமாட்டாள். அது நிச்சயம். அவளை இனி அவன்தான் சென்று காண வேண்டும். அவள் எங்கே இருக்கிறாளோ? அவளுடைய விலாசத்தை எப்படிக் கண்டுபிடிப்பது? இதுவரை தடையே சொல்லாத மாமா இந்த விஷயத்தில் சற்று மாறுபாடு தெரிவித்தது ஏன்?

மறுநாளே நாயர் மூலம் முகவரி தெரிந்தது. ஆனால் அவளைப் பார்க்காமலேயே இருந்திருக்கலாகாதா என்றுதான் அவனுக்குத் தோன்றிற்று. (தொடரும்)


COCOA MALTINE
the national family food beverage goes INTERNATIONAL

பொருள்களைத் தரமறிந்து உபயோகிக்கும் உலகெங்குமுள்ள மக்களின் நம்பிக்கையைப் பெற்றிருப்பது குறித்து கோகோ மால்டீன் நியாயமான பெருமை கொள்கிறது. பெருமளவு போட்டியுள்ள உலக மார்க்கெட்டுகளில் உறுதியாகவும் சரியான முறையிலும் கோகோ மால்டீன் இடம் பெற்று வருகிறது. இந்த சக்தியளிக்கும் உணவு பானம் செல்லுமிடங்களிலெல்லாம் ஊட்டக் குறைவை நிரப்பும் ருசியும் புஷ்டியும் மிக்க லட்சிய உணவுப் பொருள் என்று மக்கள் விரைவில் அறிந்து வருகிறார்கள். மேலும் மேலும் மக்கள் கோகோ மால்டீன் உபயோகிக்கும் நிலைக்குமாறி வருகிறார்கள் என்பதில் ஆச்சரியமே இல்லை.

கோகோ மால்டீன்

புத்துணர்ச்சியும் வலிவும் அளிக்கும் லட்சிய உணவு பானம்.






கோகோ மால்டீன் லாபரட்டரீஸ்

உரிமையாளர்கள்: டிரேட் லிங்க்ஸ் பிரைவேட் லிட்., 46, புனா ரோடு, புது டில்லி-5. போன்: 52835

பிராந்திய விற்பனை ஆபீஸ்: 76, [illegible] ரோடு, மவுண்ட் ரோடு, சென்னை-2: போன்: 85982 தந்தி: SOUTHLAND

TL-NP-73


...NOW
that our
village has a
Myers
Pumping
system.
THE BAD
OLD DAYS
ARE GONE
FOR
EVER...
Myers or Wasp Pumps for Every Purpose
You can have a pump to suit your
own particular needs. For details, contact:
WATER SUPPLY SPECIALISTS PVT. LTD.
Kal-ma 330, THAMBU CHETTY STREET
MADRAS-1
WS-81

இன்றுள்ள பதின்மூன்று மாநிலங்களைக் கொண்ட மலேசியாவின் மொத்த ஜனத் தொகை இனவழி என்ன என்பதைத் தெரிந்துகொள்வோம்.

	மலேசியா	சிங்கப்பூர்
மலேயர்கள்:	41,27,000	2,50,000
சீனர்கள்:	31,20,000	13,50,000
இந்தியர்கள்:	8,50,000	1,50,000
சரவாக், சபாவில் உள்ள பூர்வகுடிகள் உள்பட	6,50,000	...
மற்றவர்கள்:	1,50,000	50,000
மொத்தம்:	88,97,000	18,00,000

மலேசியாவின் வளத்துக்கு முக்கியமானதும் அடிப்படையானதுமான காரணம் அந்நாட்டின் தட்ப வெப்ப நிலைதான். பூமத்திய ரேகைக்கு அதிக தூரமில்லாமலிருந்தும்கூடத் தட்பவெப்ப நிலை கடுமையானதாக அமையவில்லை. 74 டிகிரி முதல் 87 டிகிரிக்குள்ளேயே இருந்து வருகிறது. காமரன்



மலேசியா மாநாடு

சா. கணேசன் எம்.எல்.ஏ



ஹைலாண்டு என்னும் மலை வாசத் தலத்தில் 36 டிகிரிக்குக் கீழே போவதில்லை.

அத்தீபகற்பம், தென் வடலாக நீண்டு, கீழ் மேல் நிலப்பரப்புக் குறுகியுள்ளதால் இரு பருவக் காற்றிலும் மழையைப் பெறுகிறது. எனவே, இத்தீபகற்பத்தில் மழை பெய்யும் நாளைவிட மழை பெய்யா நாள் குறைவு. பொதுவாகச் சொன்னால் பகல் நேரம் வெய்யில் கொளுத்துகிறது. இரவு குளிர்ந்து விடுகிறது.


மழையும் வெய்யிலும் கலந்து எங்கும் ஈரப் பசையும், சூரிய ஒளியும் இருப்பதால் தாவரம் செழித்து வளர்கிறது. சிறப்பாக, கித்தா (ரப்பர்) செழித்துப் பயன் கொழிப்பதற்கும், தென்னை, பாம் ஆயில், அன்னாசி முதலிய தோட்ட விவசாயம் வளம் சுரப்பதற்கும் அந்நாட்டின் தட்ப வெப்ப நிலையே தனிப் பெருங் காரணமாகும்.

மலேசியப் பொருளாதார நிலை மிக உறுதியானதாக இருக்கிறது. ஆசியாவிலேயே மலேசியா மிக முன்னேற்றமும், வளமும், நிலைபேறும் பெற்ற பொருளாதார



மேலே: துவான்கு இஸ்மயில் நாசிருத்தீன் ஷா இப்னி அல்மாருஹும் சுல்தான் ஸைனுல் அபிதீன்
கீழே: அரசி

றுடைய நாடு என்பதை எளிதில் நாம் உணர முடிகிறது. இப்பொருளாதார வளத்தால் சாலைகளும், ரயில் வழி, நீர்வழிப் போக்குவரத்துகளும், தபால், தந்தி, தொலைபேசி மின்சார வசதிகளும் வியத்தகு முறையில் செம்மையாக வளர்ந்திருக்கின்றன. நிலப் பரப்புக்கேற்ற மக்கள் தொகையும், இயற்கை வளமும், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இரு பெரும் காரணங்கள் என்றாலும், அரசு, விவசாயம், தொழில், வாணிபம் ஆகியவற்றில் அநாவசியமாய்த் தலையிடாதிருப்பதும், வெறும் மாய்மாலச் சித்தாந்தங்களுக்குத் தன்னை ஆட்படுத்திக் கொள்ளாமல் இருப்பதும் ஒரு குறிப்பிடத்தக்க காரணமாகவும் இருக்கிறது. கித்தா உற்பத்தி பெரும் அளவு நடைபெறுகிறது. உலக உற்பத்தியாளர் செயற்கை முறை ரப்பரை அதிகமாக உபயோகிக்கத் தொடங்கி விட்டதால் ஒரு காலத்தில்



ஈயம் தோண்டி எடுத்தல்

ரப்பரின் தேவை மிகவும் குறைந்துவிடவும் கூடும் என்ற தீர்க்கதரிசனத்துடன் அரசு செயல்படுகிறது. எனவே, ரப்பர் மரங்கள் வெட்டப்பட்ட இடங்களில் 'பாம்' மரங்கள் பயிரிட ஊக்கமளிக்கிறது. பாம் என்பது ஒரு வகை ஈச்ச மரம் போன்றது. அதன் வித்திலிருந்து சிறந்த எண்ணெய் கிடைக்கிறது. அதன் தரமும், பயனும் மிகுந்திருப்பதால் அதற்கு நல்ல கிராக்கி இருக்கிறது. தாவர எண்ணெய் வகையில் இது ஒரு குறிப்பிடத்தக்கதாகும். இதற்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நல்ல சந்தை இருக்கிறது.

மேலும் கித்தாத் தோட்டங்களில் மர வரிசைக்கிடையில் நிலக் கடலைப் பயிர்செய்வது இப்பொழுது வளர்ந்து விட்டது. அது நல்ல உணவு ஆவதுடன் ஏற்றுமதியும் ஆகிறது.

எல்லாவற்றுக்கும் மேலாக வெள்ளீயம் (Tin) உலகிலேயே இங்குதான் அதிகமாகக் கிடைக்கிறது. இதன் தேவையையும், முக்கியத்தையும் எவரும் குறைத்துவிட முடியாது. இது இந்த நாட்டுக்குக் கிடைத்த ஒப்பற்ற வரப்பிரசாதமாகும்.

இவற்றால் இந்நாட்டின் பொருளாதாரம் சீராக இருக்கிறது. அது சீர்குலையாமலிருப்பதற்குக் காரணம் எங்கும் ஒருவித நாணயம் துலங்குகிறது. சட்டத்துக்கும் ஒழுங்குக்கும் கட்டுப்பட்டு ஒழுகும் மக்கள்; உறுதியும் திறமையும் உள்ள அரசாங்கம்; இரண்டின் சுமுகமான ஒத்துழைப்பு ஆகிய இவையே நாட்டின் பொருளாதார நிலை உறுதியாயும் மேலும் மேலும் வளமடைந்து கொண்டுமிருப்பதற்கு ஒப்பற்ற காரணமாகும்.

நாங்கள் சுமார் 2000 மைல்கள் காரில் பிரயாணம் செய்தோம். வடகோடியிலிருந்து தென் கோடி வரை சென்றோம். சாலைகளின் நேர்த்தி ஒருபுறமிருக்கட்டும். எங்காவது ஒரு கழுதை, மாடு, நாய் குறுக்கிட வேண்டுமே? அது மட்டுமா? குறுக்கும் நெடுக்கும் ஓடிக் குழப்பம் செய்வார் ஒருவரையும் கண்டோமில்லை. அப்படியே மோட்டாரோட்டிகளும் எங்கும் எக்காரணத்தாலும் நெறி தவறாமல் நடந்து கொள்கிறார்கள். தவறு இழைத்தால் ஐம்பது நூறு என்று அபராதம் கட்ட வேண்டும்.

எங்கும் போக்குவரத்து விளக்குகள் போக்குவரத்துக்களை இயக்குகின்றன. சாலையைக் கடப்பவர்களும் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ளுகிறார்கள். கோலாலம்பூர் போன்ற பெருநகரில் கார்கள் ஒன்றன்பின் ஒன்றாய்ச் சென்று கொண்டிருக்கும். வீதியைக் கடக்க விரும்புபவர் அருகில் இருக்கும் போக்குவரத்து விளக்குத் தம்பத்தில் உள்ள ஒரு பொத்தானை அமுத்தினால் சிவப்பு விளக்கு எரியும். எல்லா வண்டிகளும் அப்படியப்படியே நின்று விடுகின்றன. உடனே மக்கள் வீதியைக் கடந்து மறு அஞ்சடிக்குப் போய் விடலாம். இப்படிப் போடப்பட்ட சிவப்பு விளக்கு ஒரு நிமிஷம் (60 செகண்டு) தான் எரியும். விசையமைப்பு அருமை என்றாலும், மக்களின் கட்டுப்பாட்டுணர்வே பெரிதும் பாராட்டத் தக்கதாகும்.

இன்னொரு விஷயத்தையும் இங்கே சொல்ல வேண்டும். அந்த நாட்டில் வாணிபத்தில் காணப்படும் நேர்மைதான் அது. விலை கூடக் குறைய இருக்கலாம். ஆனால் பண்டம் அப்பழுக்குச் சொல்ல முடியாமலிருக்கிறது. ஒட்டுறவும், கூடிப் பிரியாக் குணமுள்ள கூட்டுறவு அரிசியை ரேஷனில் வாங்கித் தின்று விட்டுப் போன (ஆம்; வேறென்ன, சுவைத்து உண்டு கொண்டா இருக்கிறோம்?) எங்கட்கு அங்கு கண்ட காட்சி ஓர் அற்புதமாகவே இருந்தது.

கோலாலம்பூரில் ஒருவர் தமது மளிகைக் கடைக்கு ஒரு நாள் எங்களைப் பகல் விருந்துக்கு அழைத்திருந்தார். கீழே மளிகைக் கடை; மேல் வீட்டில் அவர் தங்கி வாழ்கிறார். அங்குதான் எங்கட்கு விருந்து. கீழே உள்ள கடைக்குள் நுழைந்துதான் பின்புற மாடிப்படி வழியாக மேல் வீட்டுக்குச் செல்ல வேண்டும். எல்லா உணவுப் பண்டங்களும்



அகண்ட பரப்புடன் சாலையை பத்திரமாக இறுகப் பற்றுகிறது

பயர்ஸ்டோன் டீலக்ஸ் சாம்பியன் கார் டயரிலுள்ள பிரபல ''ராப்-அரவுண்ட்'' டிரெட் அமைப்பின் அகலம் 18% அதிகம்... அபாரமான நிலையுறுதி பெறுவதற்காக சாலைமீது அதிக ரப்பரைப் பதியச் செய்கிறது; எனவே, எவ்வகை சீதோஷ்ண நிலையிலும் எத்தகைய சாலையிலும் சரி, திடீர் வளைவுகளோ முனைத் திருப்பங்களோ எதனையும் சமாளிக்க உதவுகிறது. இதோ முடிவாக உல்லாசமாக ஓட்டும் சுகத்தைப் பெற்றுவிட்டீர்கள்.

ஸுப்-ர்-டஃப் ரப்பர்— அதிகச் செலவின்றி ஆயிரக் கணக்கான மைல்கள் அதிகமாக ஓடவும், அதிக ரீடிரெட் பெறவும் உதவுகிறது.

நான்-ஸ்கிட் ஆங்கிள் ஸே:ப்டி டிரெட்- வழுக்கும் ஆபத்தையே தவிர்க்கிறது.

ராப்-அரவுண்ட் டிரெட் அமைப்பு - சாலைமீது, அதுவும் முனைத்திருப்பங்களிலே அபாரமான நிலை யுறுதி தருகிறது.

Firestone

பயர்ஸ்டோன் டீலக்ஸ் சாம்பியன் டயர்

ராப்-அரவுண்ட் டிரெட் பொருந்தியது




பிடிப்புத் திறனுக்கு
பிரைபலமான வலிமையை
அளிக்கிறது

[illegible]-2 34 TAM


நேர்த்தியாக அடுக்கி வைக்கப் பட்டிருந்தன. அரிசி, மல்லி, மிள காய், பருப்பு, பயறு வகைகள் எல்லாம் கண்ணில் பட்டன. அரிசியா அன்றி அப்பொழுதுதான் ஆய்ந்து வந்த முல்லையரும்பா? மல்லியா அல்லது வைடூரிய மணிகள்தாமா? பருப்பா அல்லது குச்சல் சிவப்புகளா? சமீப காலத் தில் நாம் கண்டறியாத காட்சி யன்றோ அது! தூசு துப்பட்டை யுண்டா? பேசப்படாது; ஆய்ந்து புடைத்து அருமையாக அழகாக வைக்கப் பட்டிருந்தன அவை. கலப்படமில்லாத தனிப் பண் டத்தை என் கண்கள் கண்டதும், என் அகக் கண், அப்பர் பெரு மானின் அருள் வாக்கான "கண் டறியாதன கண்டேன்" என்ற அடியைப் பாடி அநுபவிக்கத் தொடங்கி விட்டது.

கடைக்காரரைக் கேட்டேன், "நீங்களும் தமிழகத்திலிருந்து தானே வந்திருக்கிறீர்கள், இங்கு மட்டும் எப்படி இப்படி அருமை யாக உணவுப் பண்டங்கள் இருக் கின்றன" என்று. "இங்கு எவ் விதக் கட்டுப்பாடும் இல்லை; நியாய மான போட்டா போட்டி இருக் கிறது. அரசின் 'விலை நிர்ணயம்' என்ற அடாவடித் தனமெல்லாம் கிடையாது. நல்ல சரக்கைக் கொள்முதல் செய்கிறோம். நியாய மான லாபத்துக்கு விலை நிர்ண யித்து விற்கிறோம். எனவே, கலப் படத்துக்கெல்லாம் இங்கே வேலை இல்லை. வாங்குபவர்களும் ஒரு கடைக்கு நாலு கடைகளாகப் போய்ச் சரக்கையும் விலையையும் பொருத்திப் பார்த்து நல்லதை வாங்குகிறார்கள். ஆகவே, பண்டம் நல்லதாக இருக்கிறது" என்று விடை பகர்ந்தார். அதைக் கேட்டு மகிழ்ந்த நிலையில் அவருடைய சுவையான விருந்தையும் அநுபவித் தோம் என்பதைச் சொல்லவா வேண்டும்!

மற்றோர் அதிசயம், அந்த நாட் டில் உள்ள தொலைபேசி அமைப்பு! நாங்கள் கோலாலம்பூரில் வந் திறங்ியதும் எதிர்பார்த்தபடி எங்கள் அன்பர் விமானத் திட லுக்கு வரவில்லை. பிற சில அன் பர்கள் எங்களை அழைத்துச்சென்று 'ஹோட்டல் மெரிடின்'யில் இறக் கிய செய்தியைத்தான் முன்ன மேயே சொல்லி விட்டேனே! அந்த ஹோட்டலுக்குப் போன தும், முதல் வேலையாக, என் மாப் பிள்ளையுடனும் மகளுடனும் தொடர்புகொள்ள விரும்பினேன். நண்பர் அன்பு நடனம் பிள்ளைக்கு



பார்லிமெண்ட் ஹவுஸ்



கேமரான் ஹைலண்ட் செல்லும் வழியிலுள்ள நீர்வீழ்ச்சி

நண்பர் ஸ்ரீ பழநியப்பனுக்குத் தொலைபேசியைச் சுற்றி னேன். பினாங்கு, கோலாலம்பூரிலிருந்து, சுமார் 250 மைல் தூரத்தில் இருக்கிறது. சில நிமிஷங்களில் ஸ்ரீ பழநியப் பனே பேசத் தொடங்கினார். தேசம் முழுவதற்கும் ஒரே நிலையம் என்று அங்கு இயங்குகிறது. கம்பியில்லாத டெலி போன்; "மிக உயர்ந்த தொடர்புள்ள ரேடியோ நெடுந் தூரத் தொலை பேசி" (Very High Frequency Radio Trunk Telephone) எல்லா முக்கிய நகரங்களையும் இணைத்துக் கொண்டிருக்கிறது. இந்த அமைப்புக்குக் கார ணம் அவர்களின் பொருளாதார வளம் மட்டுமல்ல,

நிர்ப்பந்த நிலையுங்கூடத்தான். அதாவது, முன்பு கம்யூனிஸ்டு ஊடுருவிகள் அரசாங்கத்தைத் திணறடிப்பதற்காக ஆங்காங்கே தொலைபேசிக் கம்பிகளை அறுப்பதையே ஒரு கடமையாகக் கொண்டிருந்தனராம். அப்பொழுதெல்லாம் அரசாங்கத்துக்குப் பல்வேறு துறை அலுவலகத்துடனும் தொடர்பு கொள்ளல் மிகச் சிரமமாகிவிட்டதாம். எனவே, 1960 நவம்பரில் இந்தத் தொலைபேசி முறைக்கு அரசாங்கம் வித்திட்டதாம். இன்று இம்முறை எத்துணை சிறப்பாக நடைபெறுகிறது என்பதை நேரில் கண்டால்தான் தெரியும்.

அரசாங்கம்

பதின்மூன்று மாநிலங்கட்கும் தனித் தனியே சட்டசபை இருக்கிறது. அன்றியும் ஓர் ஆட்சித் தலைவரையும் கொண்டு ஒவ்வொரு மாநிலமும் விளங்குகிறது. முன்னுவின் சுதேச சமஸ்தானமாக இருந்த மாநிலத்துக்கு மன்னர் (Ruler) என்ற பெயருடனும், குடியேற்ற நாடாக இருந்த மாநிலத்துக்கு ஆளுநர் (Governor) என்ற பெயருடனும் ஆட்சித் தலைவர்கள் செயற்படுகிறார்கள்.

எல்லா மாநிலங்கட்கும் தலைமையாகவும் பேரரசராகவும் வருபவரை "மாட்சிமை தங்கிய யாங் தி — பெர்துவான் ஆகாங் (His Majesty the Yang di Pertuan Agong) என்றழைக்கிறார்கள். இவர் ஐந்தாண்டுக்கொரு முறை மாநில மன்னர்களால் தங்கட்குள் ஒருவரை வரிசைக்கிரமப்படி தேர்ந்தெடுக்கிறார்கள். தேசியச் சட்டசபை இரு சபைகளாக இயங்குகிறது. ஒன்று பாராளு மன்றம் (Parliament) இது முழுக்க முழுக்கத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களைக் கொண்டது. மற்றொன்று பெருமக்கள் மன்றம். (Senate) இதில் ஒரு பகுதி தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்; மற்றொரு பகுதி நியமிக்கப்பட்டவர்கள். ஆகாங் என்னும் பேரரசரே, எவர் சபையின் பெரும்பாலோரின் நம்பிக்கைக்குரியவரோ அவரை நாட்டுக்குப் பிரதமராக நியமிக்கிறார்.

முடிசூட்டு விழா

நாங்கள் எதிர்பாராத வகையில் முடிசூட்டு விழாவான 11-4-66ல் அங்கு போய்ச் சேர்ந்தோம். கோலாலம்பூர் கோலாகலமாகக் காட்சியளித்தது. நகரம் முழுவதும் விழாக் கோலம் பூண்டிருந்தது. தோரணமும், கொடிகளும், வளைவுகளும், தீபாலங்காரமும் கண்கொள்ளாக் காட்சியளித்தன. வாண வேடிக்கைகள், களியாட்டம், விருந்துகள், பல வகை விளையாட்டுப் போட்டிகள் எல்லாம் அங்கு, இங்கு, எனாதபடி எங்கும் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

இப்பொழுது பட்டத்துக்கு வந்திருப்பவர் டிரெங்கானு சமஸ்தானத்தின் சுல்தானாவார். துவான்கு இஸ்மாயில் நாசிருத்தின் ஷா இப்னி அல்மாரும் சுல்தான் செய்னுல் அபிதின்(D.K. D. M. N., S. P. M.T., D. K. (Kelantan) D:K. Selangor) என்பது பட்டங்களுடன் கூடிய இவர் பெயராகும்.


முடிசூட்டு விழா வைபவத்தைக் காண மக்கள் நாலா திசைகளிலிருந்தும் வந்து குவிந்திருந்தனர். இவ்வளவு பெருங்கூட்டமிருந்தும், மக்கள் எவ்விதக் குழப்பமுமின்றித் "தள்ளுமுள்ளு"களின்றி, தெருவில் போக்குவரத்துக்கு எவ்வித இடையூறுமின்றி, ஒழுங்காகவும், அமைதியாகவும், நடந்துகொண்ட அருமை இருக்கிறதே அது என் கண்ணுக்கு முடிசூட்டு விழாவுக்கே முடிசூட்டியதாகத் தென்பட்டது.

அவ்விழாக் காலத்தில் என் காதில் சில சொற்கள் விழுந்தன. அச்சொல்லை நீங்களும் கேட்கலாந்தானே! 'ராஜா', 'ராஜ பர்மெய்சுரி', 'செரி பாதுகா', 'சிங்காசனு', இச்சொற்களை என்னுடன் கூடவே இருந்த நண்பர் நாகசாமி அவர்கள் எப்பொழுதும் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டே விருப்பார். 'ராஜா' என்றால் மன்னர் என்பதேயாகும். ராஜபர்மெய்சுரி என்றால் 'ராஜபரமேச்வரி' என்ற சொல்தான் என்பது நமக்குப் புரிய மாட்டாதா என்ன? 'செரி பாதுகா' என்றால் 'ஸ்ரீ பாதுகா' என்பதே. இவ்விடத்தில் ஒன்றை நாம் புரிந்து கொள்வது நலமாக இருக்கும். மலாய் மொழி இலக்கணப்படி 'ஸ்' என்ற மெய் எழுத்து சொல்லின் முதலெழுத்தாக வரலாகாது. ஆகவே, ஸ்ரீ என்பதை 'செரி' என்றே எழுதியும் உச்சரித்தும் வருகிறார்கள். தமிழில் ஸ்ரீ என்பதை 'திரு' என்று மொழிபெயர்ப்போம் அன்றி ஒலிபெயர்ப்புச் செய்தால், நமது மொழி இலக்கண மரபுப்படி 'சீ' என்றோ அன்றி, 'சிரி' என்றோதான் வழங்குகிறோம். அந்தத் தமிழ் மரபுதான் மலாய் மொழியிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்று கருதப்படுகிறது. 'சிங்காசனு' என்பது 'சிங்காசனம்' என்ற சொல்லின் மருஉச் சொல்தான் என்றும் கருதுகிறார்கள். (தொடரும்)

திருத்தம்

பினாங்கு சிங்கப்பூர் பிரயாணிகள் கவனிக்க

29-5-66-ந் தேதி இதழில் பிரசுரமாகிய S. S. ரஜுலாவின் பிரயாண விளம்பரத்தில் சென்னையிலிருந்து இக் கப்பல் பினாங்கு சிங்கப்பூருக்குப் புறப்படும் தேதி ஜூன் 4 என்று இருப்பதை ஜூன் 11 என்று திருத்தி வாசிக்கவும்







சேவைக்கு ஒரு சகோதரி

மோனிகா ஃபெல்டன்

— அநுத்தமா

பர்மாவில் இருந்தவரை தன்னை ஒரு சி. ஐ. டி. சதா பின்தொடர்ந்து வந்து கொண்டிருந்ததனால் விடுமுறை முழுதுமே பாழாகி விட்டது என்று சுப்புலக்ஷ்மி ஒப்புக் கொள்ளத் தயாராக இல்லை. ஆனால் சென்னைக்குத் திரும்பி வந்தபோது அவள் மிகவும் களைப்படைந்திருந்தாள். தன் அன்றாட வாழ்க்கையில் அவள் சகஜமாகத் தாங்கிச் சென்ற சிறு கவலைகள்கூட இப்போது மிகப் பெரியனவாகத் தோன்றின. இப்போது அவளுக்கு நாற்பத்து ஆறு வயது. மேனாடுகளில் இதை நடுத்தர வயது எனக் கருதுவார்கள். ஆனால் இங்கு அப்படியில்லையே. தான் மூப்படைந்து விட்டதாக அவள் ஒப்புக் கொள்ள விரும்பா விட்டாலும், உடலுக்கு ஓய்வு தேவையாக இருந்தது. சொர்ணம் சமீபத்தில் ராணி மேரிக் கல்லூரியில் வேலையை விட்டுவிட்டு, சென்னை அரசாங்கக் கல்வித்துறையில் இன்ஸ்பெக்டராக வேலை ஏற்றுக் கொண்டிருந்தாள். இப்போது அவளைப் பெல்லாரிக்கு மாற்றியிருந்தார்கள். தன் சகோதரி ஆறு மாதம் ரஜா பெற்றுக் கொண்டு கிறிஸ்துமஸ் வரையில் தன்னுடன் வந்து இருக்க வேண்டுமென்று சொர்ணம் விரும்பினாள்.

சகோதரி இதற்கு இணங்கினாள். அடுத்த ஐந்து மாதங்களில் ஒவ்வொரு நிமிஷத்தையும் அவள் ரசித்தாள். டிஸம்பர் முதல் வாரத்தில் சென்னைக்குத் திரும்புவதை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கையில், லேடி சதாசிவ ஐயர் இறந்துவிட்ட செய்தி கிடைத்தது. இது தனிப்பட்ட முறையில் சகோதரியை வெகுவாகப் பாதித்த பெருந் துயரச் சம்பவம் என்பது மட்டுமல்ல; இருபது ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்ட சாரதா மாதர் சங்கத்துக்கு ஆரம்பம் முதல் இதுவரை லேடி சதாசிவ ஐயர்தான் தலைவியாகப் பணியாற்றி வந்தாள். பெயரளவில் மட்டுமின்றி ஊக்கமும் உற்சாகமும் உடைய தலைவியாக ஆக்கரீதியில் இயங்கி வந்தாள். புதுப் புது அபிப்பிராயங்களை வெளியிடும் திறமையுடன் அந்தப் புதிய கொள்கைகளை நடைமுறைக்குக் கொணர்வதில் துணிவும் காட்டினாள். அந்த அம்மாளின் துணை இல்லாமல் எப்படித்தான் மேற்கொண்டு தன்னால் செயலாற்ற முடியுமோ என்று சகோதரி கலங்கினாள்.

இதைத் தொடர்ந்து வேறொரு பேரிடியும் காத்திருந்தது. அரசினர் கல்வித் துறையிலிருந்து வந்த அறிக்கை ஒன்று சகோதரி சுப்புலக்ஷ்மி, லேடி வில்லிங்டன் பயிற்சிக் கல்லூரியிலிருந்து மாற்றப்பட்டிருப்பதாகவும் 1932ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஹோபார்ட் பள்ளியின் மேற்பார்வையாளராகப் பதவி ஏற்க வேண்டும் என்றும் அறிவித்தது.

சென்னை நகரில் உள்ள முஸ்லிம் குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்காக ஏற்பட்ட பள்ளிக்கூடம் அது. சகோதரிக்கு இது பதவி உயர்வுதான். ஆன போதிலும் அதிகச் சம்பளம் கிட்டவிருந்தாலும், முன்னைவிட அதிகப் பொறுப்புக்கள் ஏற்கவிருந்தாலும், இந்த மாறுதலை அவளால் விரும்பி வரவேற்க முடியவில்லை.

திருவல்லிக்கேணியின் மத்தியில் மிகச் சிறிய அளவில் தொடங்கி வளர்ந்த ஆசிரியைப் பயிற்சிக் கல்லூரி, பள்ளிக்கூடம், ஹாஸ்டலும் ஆகியவற்றுடன் ஒன்றி விட்டிருந்தாள் அவள். அவை ஒவ்வொன்றும் தன்னில் ஓர் அங்கமாக அவளுக்குத் தோன்றியது. இப்போது அவைகளை விட்டுச் செல்லும்போது தன்னுடைய வாழ்வின் ஒரு பகுதியையே பிரித்தெடுப்பது போல் இருப்பதை அவளால் உணராமல் இருக்க முடியவில்லை. பிரிதலைவேறும் வருத்தத்துக்கு இடமளிப்பது தவறு என்பதை அவள் உணர்ந்திருந்தாள். தினமும் நிஷ்காம்யகர்ம வேதமான பகவத்கீதையைப் பாராயணம் செய்தபோது வார்த்தைகளை அவள் இயந்திரம் போல் உச்சரிக்கவில்லை. அவற்றின் பொருளை நன்கு மனத்தில் வாங்கிக் கொண்டு, ஆலோசித்து, ஏற்றுக் கொண்டிருந்தாள். எந்தக் காரியத்தைச் செய்ய வேண்டியிருந்தாலும் சரி, அதைப் போதுமான அளவுக்குத் திறம்படச் செய்யும் வழக்கம் அவளிடம் இருந்ததில்லை; இதைவிடத் தன்னால் அந்தப் பணியைச் செவ்வனே செய்ய இயலாது என்ற அளவுக்கு அவள் பாடுபடுவாள். கீதையின் இந்தத் தத்துவங்களை அவள் நன்கு உணர்ந்திருந்த போதிலும் தன்னுடைய வாழ்க்கையின் பெரும் பங்கை, வெற்றிகரமாகவும் சந்தோஷமாகவும் எந்த நிறுவனங்களில் கழித்தாளோ அவற்றிலேயே பணி புரிய மீண்டும் வரலாம் என்று ஆவலுடன் எதிர்பார்க்காமல் இருக்க முடியவில்லை அவளால். இப்படி எண்ணுவதில் ஒன்றும் தவறில்லை என்று அவள் கருதினாள்.

அவளை விட்டுப் பிரியும் சமயம் வந்தபோது அவளுடைய மாணவிகள் கதறி அழுது விட்டார்கள். மாதிரி ஆரம்பப் பள்ளியிலுள்ள சிறுமிகளும் அவ்வாறே அழுதார்கள். சிறு வயதிலிருந்தே சுப்புலக்ஷ்மிக்குக் கல்வி கற்பது என்பது மிகவும் ரசமான காரியமாக இருந்து வந்திருந்தது. குழந்தைகளுக்குப் பள்ளி வாழ்க்கை சலிப்பைத் தந்ததென்றால் அதற்குக் காரணம் உபாத்தியாயினிகளே என்ற அவளுடைய நம்பிக்கையை அவளது அனுபவம் உறுதியாக்கியது. சகோதரி சமீபத்தில் பின்வருமாறு எழுதியிருந்தாள்: ''ஆயிரக்கணக்கான ஆரம்பப் பள்ளிகளில் காலம் அநாவசியமாக வீணாகிறது. குழந்தைகளின் உற்சாகத்தை அடக்கி ஒடுக்கி விடுகிறார்கள். குறைந்த வருவாயுள்ள உபாத்தியாயர்கள் சலிப்படைந்து ஒரு வருடத்துக்குள்ள பாடங்களை இரண்டு மூன்று மாதங்களில் முடித்துவிட்டு, மீதியுள்ள காலத்தில் குழந்தைகளை வாய்மூடி மௌனிகளாக ஒழுங்காக வகுப்பில் உட்கார்ந்திருக்கச் செய்கிறார்கள். குழந்தைகள் இயற்கையாகவே சதா ஏதேனும் வேலை செய்து கொண்டிருக்கவும் மனத்துக்கு இனிமையான புதிய விஷயங்களைக் கற்றுக் கொள்ளவும் துடிக்கிறார்கள் என்பதைப் பெற்றோர்களும் ஆசிரியர்களும் மறந்து விடுகிறார்கள். எப்போது பார்த்தாலும் 'இதைச் செய்ய வேண்டாம்! அதைத் தொட வேண்டாம்' என்று கண்டித்துக் குழந்தைகளின் ஆர்வத்துக்கு விலங்கு போட்டுக் கொண்டே இருக்கிறார்கள். இதற்குப் பதிலாக அவர்கள் தங்கள் அருமையான குழந்தைகளிடம் உண்மையான சிரத்தை கொண்டு அவர்கள் கேட்கும் ரசமான, சாதுரியமான கேள்விகளுக்குப் பதில் அளித்தார்களாயின், தாங்கள் நினைத்தபடி குழந்தைகள் சலிப்பூட்டுபவர்களல்ல, மிகவும் சுவாரசியமானவர்கள் என்பதைப் புரிந்து கொள்வார்கள். அவர்கள் எவ்வளவு துரிதமாகப் படித்து முன்னேற முடியும், எவ்வளவு காரியங்களைச் செய்ய முடியும் என்பதை அறிந்து கொள்வார்கள்.''

ஹோபார்ட் பள்ளியில் அரசாங்க சட்டதிட்டங்கள் காரணமாகக் கல்வி போதிக்கும் முறையில் புது முயற்சிகள் ஏதும் மேற்கொள்ள முடியவில்லை. ஆனால் வித்தியாலயத்தில் பல சோதனைகளைச் செய்ய முடிந்தது. எத்தனையோ புதுமைகளைப் புகுத்த முடிந்தது. நல்லகாலமாக இந்த இரண்டு ஸ்தாபனங்களும் ஒன்றுக்கொன்று சுமார் ஒரு மைல் தூரத்தில் இருந்தன. அதனால் சுப்புலக்ஷ்மிக்கு இரண்டையும் சிரமமில்லாமல் கவனித்துக் கொள்ள முடிந்தது.

அலுவலக நேரங்களில் ஹோபார்ட் பள்ளியைக் கவனித்து விட்டு, காலையில் இரண்டு, மூன்று மணி நேரமும் மீண்டும் மாலையிலும் வித்தியாலயத்தைக் கவனித்தாள் அவள்.

வித்தியாலயம் வளர்ந்துகொண்டே வந்தது. அதற்கும் சில கஷ்டங்கள் நேர்ந்தன. 1931ம் வருடப் பிற்பகுதியில் பிரிட்டனைக் கடுமையான பொருளாதார நெருக்கடி சூழ்ந்தது. இந்தியாவையும் அது வெகுவாகப் பாதித்தது. கல்விக்காக அரசாங்கம் ஒதுக்கிய தொகை என்றைக்குமே குறைவுதான். இப்போது மேலும் இயன்ற விதங்களிலெல்லாம் குறைக்கப்பட்டது. சகோதரிக்கு நினைவிருந்த நாள் முதல் ஆசிரியைப் பயிற்சி பெறுகிறவர்களுக்கு மாதம் பத்து ரூபாய் உபகாரச் சம்பளம் இருந்து வந்தது. அதுவே கம்மிதான். ஆனால் சிக்கனமாக இருந்தால் ஒரு பெண் அதைக் கொண்டு சமாளிக்கலாம். இப்பொழுது உபகாரச் சம்பளம் நான்கு ரூபாயாகக் குறைக்கப்பட்டு விட்டது. இச்சிறு தொகை யாருக்குமே போதவில்லை. அதே சமயம், வித்தியாலயத்துக்கு வழக்கமாகவும் தாராளமாகவும் நன்கொடைகள் அளித்து வந்த தயாளசித்தம் உடையவர்கள் இப்போது பொருளாதார நெருக்கடி காரணமாக நன்கொடைகளைத் தொடர்ந்து தர முடியாமல் தவித்தனர்.

நிர்வாகத்தில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டியிருந்தது. இரண்டு வெவ்வேறு சமையலறைகள் ஏற்பாடாயின. ஒன்று சம்பளம் தரும் மாணவிகளுக்கு; மற்றொன்று உபகாரச் சம்பளத்தில் படிக்கிறவர்களுக்கு. முதல் சமையலறையில் ஆள் வைத்துச் சமையல் செய்யப்படும். காப்பி மற்றும் இன்றியமையாதவையல்லாத சில தின்பண்டங்களும் கிடைக்கும். இன்னொரு சமையலறையில் மாணவிகளே எல்லா வேலைகளையும் செய்து கொண்டனர். அவர்கள் உணவு எளிமையானதாக இருக்கும்.

இந்த முறையால் செலவு குறைந்தது. ஆனால் இதுவரை பெண்களிடையே எல்லாரும் சமம் என்று இருந்து வந்த ஒரு சகஜ மனப்பான்மையும் சந்தோஷமும் குறைந்து விடும்போலத் தோன்றியது. சில வாரங்களுக்குப் பிறகு இந்தச் சோதனை கைவிடப்பட்டது. ஓரளவு வசதி படைத்த குடும்பங்களிலிருந்து வந்த பெண்கள், உபகாரச் சம்பளம் பெறும் தங்கள் தோழிகளுக்குக் கிடைக்காத பொருள்களைத் தாங்கள் அநுபவிப்பதைவிட, அத்தகைய சில சௌகரியங்களைத் தாங்கள் தியாகம் செய்து விடவே விரும்பினார்கள். வித்தியாலயத்தின் அழகான புதிய சூழ்நிலையில் சிரமங்களை எல்லாரும் சமமாகப் பகிர்ந்து கொண்ட போது அவற்றைத் தாங்குவது எளிதாகவே இருந்தது.

குழந்தை விவாக எதிர்ப்பு இயக்கம் இன்னமும் மும்முரமாக நடந்து வந்தது. சாரதா சட்டம் அரை மனத்துடன்தான் பயன்படுத்தப்பட்டது என்பது தெளிவாயிற்று. 1932ம் ஆண்டு ஆகஸ்டு மாத இறுதி வரை ஆங்கில ஆட்சிக்குட்பட்ட இந்தியா முழுவதிலும் 472 குற்றச்சாட்டுகளே தாக்கலாயின. அந்தத் தேதியில் 98 வழக்குகள் இன்னும் தீர்க்கப்படாமல் காத்து நின்றன. 207 வழக்குகளில் குற்றச்சாட்டுக்கு இலக்கானவர்கள் விடுதலை பெற்று விட்டனர். வெற்றிகரமாகத் தொடரப்பட்ட 167 வழக்குகளிலும் பதினேழு வழக்குகளில் மட்டுமே தண்டனை விதிக்கப்பட்டது. இவர்களும் குறைந்த அளவில் அபராதமோ அல்லது சில வாரங்கள் சிறைவாசமோ தான் பெற்றனர். அபராதத் தண்டனையோடு மட்டும் தப்பியவர்களில் இருவர் ஐம்பத்து ஐந்து வயதும் நாற்பத்தைந்து வயதும் நிரம்பிய இரு முஸ்லிம்கள். இவர்கள் முறையே நான்கு, இரண்டு வயதுள்ள—தங்களிடம் வளர்ந்த — குழந்தைகளை, அவர்கள் சொத்தைக் கைப்பற்றும் நோக்கத்துடன் மணந்து கொண்டிருந்தனர். ஆயிரம் ரூபாய் வரை அபராதம் விதிக்கச் சட்ட மன்றங்களுக்கு அதிகாரம் இருந்தும், இந்த இருவரும் தலா நூற்றைம்பது ரூபாய்தான் அபராதமாகக் கட்டினார்கள். திருமணம் என்கிற பேரில் ஏராளமான சொத்தைக் கைப்பற்றி விட்டபோது இந்த அற்பத் தொகையை அபராதமாகச் செலுத்துவதில் அவர்களுக்கு என்ன கஷ்டம்?

(தொடரும்)



வான்குறள் வள்ளுவர்!

தமிழழகன்

உலகுக் கொருமுறை ஓங்கி புரைத்தநல்
  உத்தமர் தான்எவ ராம்? - என்றும்
இலகும் அறம்பொருள் இன்ப மெலாம்விரித்
  தெண்ணிய வள்ளுவ ராம்!

கால மணிக்குறள் காவியப் பேறுறக்
  கண்டதும் தான்எவ ராம்? - அதன்
மூலம் அருள்நெறி முற்றும் ஒலிக்கவும்
  மூண்டவம் வள்ளுவ ராம்!


புண்ணிய வாழ்வினுட் போதம் வகுத்தும்
  புகன்றவர் தான்எவ ராம்? - மனத்
திண்ணிய ஞானத் திறமுரைப் பாரெங்கள்
  தெய்வநல் வள்ளுவ ராம்!

குடிமையும் ஆட்சியும் கோன்முறைப் பாங்கிற்
  குறித்தவர் தான்எவ ராம்? - கொண்ட
கடமையும் கொள்கையும் காலமும் வாழ்ந்திடக்
  காட்டிய வள்ளுவ ராம்!

பண்ணரும் காதற் பலதுறை யெல்லாம்
  பகுத்தவர் தான்எவ ராம்? - மயில்
அன்னவ ரோடும் அடக்கானே பக்கில்
  லறம்சொலும் வள்ளுவ ராம்?

சங்கத் தமிழ்நெறிச் சாரம் இவையெனித்
  சான்றுமே தான்எவ ராம்? - பகை
போக்கிப் பொருமினும் பூரணம் சாந்தியைப்
  போதிக்கும் வள்ளுவ ராம்!






பொழுது போகாதவர்கள் என்ன செய்கிறார்கள்? பொருளை மிகுந்தவர்கள் உல்லாசப் பயணம் புறப்படுகிறார்கள். நாலு காசு மிகுந்தவர்கள் சினிமாவுக்குச் செல்கிறார்கள்; காசு குறைந்தவர் ஒரு புஸ்தகத்தையோ, பத்திரிகையையோ வாங்கிப் படிக்கிறார்கள். ஆயினும் குறைந்த செலவில் சிறந்த பொழுது போக்கு வேண்டுமென்றால் சிக்கனப் போர்வழிக்குப் பட்டாணிக் கடலையும் பகந்தரைப் 'பார்க்'குமோ, நிலக்கடலையும், நீலக் கடலின் மணற் பரப்புமோ நினைவுக்கு வருகின்றன. ஆயினும் உயிரும் ஓட்டமும் நடிப்பும் துடிப்பும் மிக்க காட்சிகளைப் பத்து பைசா செலவில் மெத்த தாராளமாக வழங்குகிறார்கள், உத்தம ரயில்வே நிர்வாகிகள்.

ஓர் உலோக நாணயத்தை உள்ளுக்குள் விட்டெறிந்தால் எடை யந்திரம் நமது நிகழ் கால நிறையையும் வருங்கால

நாடகமே



அதிர்ஷ்டத்தையும் விளக்கும் டிக்கட் வழங்குவதுகூட அதிசயமில்லை. ஆனால் பத்து பைசா செலவில் நாம்வாங்கும்ரயில்வே பிளாட்பாரம் டிக்கட், நமக்கு உணர்வு மிகுந்த ஒரு மேடையின் கதவுகளையே நமக்குத் திறந்து காண்பிக்கிறது. அதனால்தான் சொல்லுகிறேன், பொழுதைப் போக்குவதற்குச் சிறந்த சாதனம் ரயில்வே பிளாட்பாரம் என்று.

மருந்தை உபயோகிக்கும் முன், பின் என்றுவிளம்பரங்கள் கூறும் மாறுதல்கள் உண்மையோ பொய்யோ, ஆனால் ரயில் வண்டி வருவதற்கு முன்னும் பின்னும் பிளாட்பாரக் காட்சிகளில்தான் எத்தனை வேற்றுமை! வண்டி வருவதற்கு முன் முடங்கிக் கிடந்த பிளாட்பாரம், பெருமூச்சு விட்டபடி வரும் வண்டித் தொடர் வந்த பிறகு, தேரோடும் நாட்களில் கலகலக்கும் தேர் வீதி போல, உயிர்க்களையுடன் இயங்கத் தொடங்கி விடுகிறது. அங்குள்ள ஓட்டமும் ஒலியும், பிரிவும், கண்ணீரும், பாசமும் உபசாரமும், மாலையும், மரியாதையும் சண்டையும், சச்சரவும், — உலகத்தின் பிரதிபலிப்பையே அங்கு காண்கிறோம். ஹோல்டாலும் பெட்டியுமாகப் பிரயாணி என்ற படபடப்பு மிகுந்த பாத்திரமாக இன்றிப் பொழுதைப் போக்கும் பார்வையாளராக அந்த சிமிண்ட் தளத்தில் நடந்து பாருங்கள். ரசிக்கத் தக்க எத்தனை எத்தனை காட்சிகள்!

பிளாட்பாரம்!




போர்வீரர்களது அணியைப் பார்வையிடும் மந்திரி போல், கழுத்தைச் சாய்த்துத் திருவடி தூக்கி, பார்வையைத் தேக்கி — நாகரிக நடை போடும்போது நம்முள் எவ்வளவு பெருமிதம் ஏற்படுகிறது! வழியனுப்பும் யோசனையின்றிப் பொழுது போக்காகத் திரிந்தால் கூட நமக்குத் தெரிந்தவர்கள் யாராவது போகிறார்களா என்று அறிவதில் முதல் ஆர்வம்.

மூன்றாவது வகுப்பின் நெரிசலில் ஓர் உயர்ந்த உத்தியோகஸ்தரின் தலையைக் கண்டதும், ஆச்சரியம் நமது விழிகளில் மணியடித்து, கைகாட்டி போல் புருவங்கள் நெற்றியை இடிக்கின்றன. ஆபீஸ் அலுவலாகச் செல்வதானால் சமீதன வண்டிக்குரிய தகுதியுடைய அதே அதிகாரி, சொந்தப் பயணம் என்றதும் ஜனதாப் பிரயாணியாக மாறும் விந்தை.

அதோ, கார்டு கையில் சுருண்டு கிடக்கும் கொடி போல, நம்மைக் கண்டு மறைகிற ஆத்மா யார் தெரியுமா? கம்பெனிக் கணக்கு ஏட்டில் முதல் வகுப்புப்

பிரயாணியாக மலர்ந்து, நடைமுறையில் இரண்டாம் வகுப்புப் பிரயாணியாக அவதாரம் எடுத்துள்ள விற்பனைப் பிரதிநிதி. ஆனால் சமீபத்தில் உத்தியோக ஏற்றம் காரணமாக உயர்ந்த வகுப்பில் பிரயாணம் புரியும் ரயில்வே அதிகாரியானால் சும்மா இருக்கமாட்டார். உங்களைக் கைதட்டி அழைத்து, 'என்ன ஸார், யார் போகிறது?' என்ற கேள்வியுடன் தமது முதல் வகுப்பு மகிமையைப் பதமாக எடுத்துரைக்காமல் இருக்க மாட்டார்.

பரப்புகின்றனர். பெட்டிகள் அருகே மாலைகள் உதிர்ந்து ஜே கோஷம் முழங்கினால் அரசியல் தலைவர் என்பது உறுதி. 'ஹா-ரே' கோஷம் மும்முறை ஒலித்தாலோ போகிறவர்கள் விளையாட்டுக் கோஷ்டியினர் என்று முடிவு கட்டிவிடலாம். அதேபோன்று வண்டியில் கூட்டமே இல்லாத நாட்களானால் அன்று பரணியும் கார்த்திகையும் சூலமும் சேர்ந்து கொண்டன என்று நம்புவதற்கு இட-



முண்டு. கடைசி நிமிஷத்தில் வந்து ஏறுகிற பிரயாணிகள் என்று மட்டுமல்ல, 'உறங்கும் பெட்டி'யில் ரிசர்வ் செய்துள்ள கும்பகர்ணச் சந்ததிகளாகவும் இருக்கலாமல்லவா?

ஊரளவே யாகுமாம் புகை வண்டி நிலையத்தின் தகைமை; அதே போல் வழியனுப்புவோர் எண்ணிக்கையைப் பொறுத்தே செல்வோரின் பெருமை. ஏராளமாக நண்பர்களும் சுற்றமும்புடைசூழ வந்து மாலையிட்டு, கைக்குட்டை வீசி, குடை அசைத்து, பிரியா விடை கொடுக்கும் காட்சியைக் காணும்போது அத்தகைய பிரபலஸ்தர்கள் யார் என்பதை அறிந்து கொள்ள யாருக்குமே ஆவல் ஏற்படுகிறது. அதிலும் போலீஸார் அமுல் நடத்தி வெள்ளுடை ரயில்வே சிப்பந்திகள் உள்ளுக்கும் வெளிக்குமாகச் சுறுசுறுப்பாக இயங்கி, தாமதமின்றி வண்டியும் புறப்பட்டால் முதல் வகுப்பு மெத்தையில் வீற்றிருப்பது மந்திரி என்று கண்களை மூடிக் கொண்டு சொல்லிவிடலாம்.


சொல்லப் போனால் ரயிலடியை ஓர் அரசியல் கண்ணாடி என்றுகூடக் கூறலாம். தேர்தல் மேடையில் நின்று கேள்விகளை வீசும் வேட்பாளர் ஆட்சி பீடத்தில் அமர்ந்ததும் நிர்வாக ஊழலுக்கு ஆதரவாகப் பேசுவது சகஜமான நிகழ்ச்சி. இதற்கு இணையான காட்சியை இருப்புப் பாதை மீது தவழும் ரயில் பெட்டிகளில் காணலாம். பெட்டியும் கையுமாகப் பிளாட்பாரத்தில் நிற்கும் வரை வண்டிக்குள் நுழைய இடம் தர

சபாஷ்



புஸ்தகமோ பத்திரிகையோ வாங்காவிட்டால் என்ன? ரயிலடி புஸ்தகக் கடைக்கு முன்பு எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் வர்ணப் படங்களை ரசித்துக் கொண்டே யிருக்கலாம். அது போல் வண்டியில் பிரயாணம் செய்யாவிட்டால் கூடப் பெட்டி பெட்டியாக, நாகரிகம் குறையாத நாசுக்குடன், பார்வையிடச் சென்று, கண்ணுக்கினிய உருவங்களைக் கண்டு மகிழ்வதில் தனி ஆனந்தம் இருக்கத்தான் செய்கிறது.

'லிப்ஸ்டிக்' உதடுகள் முகத்தில் மிளிர, 'ஜிப்' வாய் பைகள் கைகளில் தவழ, 'களைப்பற்ற ரயில் பயணம் களைமிக்க சுவர்க்க அனுபவம்' என்ற ரயில்வே வேண்டுகோளுக்கு இலக்கணமாய்த் திகழும் வனிதைகள் கோஷ்டி, கல்லூரி விடுமுறை சீசனையும், கல்விக் கட்டணச் சலுகையையும் நினைவு படுத்துகின்றது. சாக்கு மூட்டையும், சளசளக்கும் கும்பலும் தை பிறந்து வழி தெரிந்த மங்களச் செய்தியைப்



மறுக்கும் பிரயாணியுடன் சோஷலிச சமுதாயத்தைப்பற்றி விவாதிக்கும் நபர், உள்ளே புகுந்து ஆக்கிரமித்ததும், அடுத்து வரும் சகோதரப் பிரயாணிக்கு இட நெருக்கடித் தத்துவம் பேசும் கொள்கை மாற்றத்தை அரசியலுக்கு ஒப்பான 'ரயிலியல்' என்று கூறலாமா? ஆனாலும் அவரைச் சொல்லிக் குற்றமில்லை. உத்தியோக உயர்வுக்கு விளம்பரம் கூறுவது போல உடை வெளுக்கும் சவுக்காரம் காரணம்; அது போல அவர் ஏறியிருக்கும் ரயில் பெட்டியின் குளுநிசயத்தால் அவரது பண்பு மாறி விடுகிறது. இந்தச் சண்டை யெல்லாம் இல்லாமல் நிச்சிந்தையாக நித்திரை புரியும் 'சயனப் பெட்டி'ப் பிரயாணியைப் பார்க்கும்போது பொறுமையாகத்தான் இருக்கிறது.

இங்கு 'குளிர்ந்த குடிநீர்' என்ற விளம்பரப் பலகையைத் தாங்கிக் கொண்டு வெட்கத்துடன் வெந்நீரைக் கொட்டிக் கொண்டிருக்கும் குழாயடியில் பாத்திரத்தை நுழைக்க முடியாமல் பரிதாபமாகத் திண்டாடும் மனிதர்கள்; ரசிப்பவர் அற்ற சபையில் ஒலித்த சங்கீதம் போல, விநியோகமற்ற பத்திரிகை விளம்பரம் போல, அமர்ந்து அநுபவிக்க அவகாசமும் ஆட்களுமற்ற ரயிலடியில் சுழலும் மின் விசிறிகள்; (அரை மணி தங்கும் பிளாட்பாரத்தில் இத்தனை விசிறிகள்! நாட்கணக்காகப் பயணம் செய்யும் பெட்டியில் சுழலாத விசிறிகள்!) குழந்தைகள் இருக்கும் ஜன்னல் புறமாக அடிக்கடி குரல் கொடுக்கும் வியாபாரிகளின் வர்த்தக ஒலி; தேர்தல் பிரசங்கத்துக்குரிய வாய்ச் சாலகத்துடன் வார்த்தையாடும் போர்ட்டர்களின் பேரம்; விடை பெறுமுன் வீட்டு விஷயங்களைப் பேசித் தொலைக்கும் பேர்வழிகளின் வெண்கலப்பேச்சு; கேட்பாரற்று மைக் வழி வந்து காற்றிலே கரையும் ரயில்வே எச்சரிக்கைகள் - இப்படி எத்தனை எத்தனையோ!

ஆனால் இறுதியாகக் கார்டின் விசில் சப்தம் நாலு பக்கமும் பரவியதும், தனிப் பரபரப்பு ஏற்பட்டு விடுகிறது. ரோந்துப் போலீஸின் விசில் ஒலி திருடர்களுக்கு எச்சரிக்கை; டிராபிக் போலீஸின் குழல் சத்தம் வாகன சாரதிகளுக்குத் தனிக் கருத்துடன் ஒலிக்கும். கார்டின் ஊதுகுழல் ஓசைக்கு, பாடகரின் மத்யமாவதி எடுப்பு போல் வண்டியில் அமர்ந்திருந்தோர் பளிச்சென்று விடைபெற்றுக் கீழே இறங்குவதும், நண்பர்களின் கைகுலுக்கலும், புதுத் தம்பதிகளின் பிரிவின் பிறப்பிலே கண்கள் பனிப்பதுவும், விருந்தினர் புறப்படுவதைக் கொண்டாடும் சம்சாரிகள் பெருமூச்சும் மளமளவென்று நிகழ்பவை. பிளாட்பார வியாபாரத்துக்கோ கார்டின் விசில் எச்சரிக்கை ஒலி. கனையாக இருபது பைசாவுக்குக் காப்பி என்னும் திரவத்தை வழங்கிய ஸ்டால்கள் தங்கள் கண்ணாடித் தம்ளர்களையும் பீங்கான் கோப்பைகளையும் சேகரிக்கத் தொடங்குகின்றன. மீதிச் சில்லறைக்கு வண்டிப் பிரயாணிகள் நெருக்கத் தொடங்குகின்றனர். 'உடம்பு ஜாக்கிரதை; கடிதம் போடுங்கள்' என்ற பரஸ்பரக் கவலைகள் பரிமாறப் படுகின்றன.

இன்ஜின் பேரொலி வழியனுப்புவோரைப் பிளாட்பாரத்து விளிம்பிலிருந்து ஓரடி நகர்ந்து நில் என்று பயமுறுத்துகின்றன. வண்டி நகரத் தொடங்கியதும் கைக் குட்டை ஏந்தியவை, வளையல் அணிந்தவை, வாக்கிங் ஸ்டிக் பிடித்தவை என்று பல்வேறு கரங்கள் 'சிக்னல்' கம்பங்கள் போல் சமிக்ஞை புரிகின்றன. தங்கள் நண்பர்கள் பெட்டி நகர்ந்ததுவும் யாரும் திரும்பி விடுவதில்லை. தங்கள் முன் ஒவ்வொரு பெட்டியாக நகர்ந்து போவதைக் கண் இமைக்காமல் பார்த்து நின்று கடைசி வண்டியின் சிவப்பு வெளிச்சம் பட்டதும் இவ்வுலக நினைவு வந்து பஸ்ஸுக்கோ, டாக்ஸிக்கோ பறக்கின்றனர்.

பிரியமானவர்கள் பிரிந்ததற்காக ஏக்கத்துடன் செல்லும் நபர்கள், கூடாரமடித்தோர் ஒரு வழியாக மறைந்ததற்காக உற்சாகப்படும் விருந்தோம்பிகள் — இப்படி எத்தனையோ விதமான உணர்வுடன் திரும்பும் ஜனங்கள் வசதிக்காக, வெளிச் செல்லும் கதவுகளை மடக்கி விசாலப்படுத்தி, விரைப்புடன் நிற்கும் டிக்கட் சேகரிப்பு அதிகாரிகள் இந்தப் பிளாட்பார நாடகத்தின் கடைசிக் காட்சிப் பாத்திரம். அதற்குப் பிறகு அடுத்த வண்டி வரும் வரையில் அந்தப் பிளாட்பாரம் களை இழந்து விடுகிறது.



ஆயிரம் புகழ்ந்தாலும், அலங்காரச் சொற்களால் போற்றினாலும் உங்கள் அழகுக்கு முழு மதிப்புத் தருவது போலாகிவிடாது. கருத்துடன் தேர்ந்தெடுத்த கவினான ஆடைகள் வேண்டும்: அவைதாம் உங்கள் இயற்கை எழிலுக்குப் பூரணப் பொலிவு. உங்கள் மேலான ரஸனைக்கு அத்தாட்சி எந்தெந்த வைபவத்திலும், எப்பேர்ப்பட்ட மணவிழாவிலும் எடுப்பான பொருத்தமுடன் 'இதோ' என்று உங்கள் வசமாகச் சிறப்பிக்க இருக்கிறது ஒரு ரோஹித் சேலை.

எப்பொழுதும் வண்ணத்தி டிச்சிம் சின்னத்தைப் பார்த்து வாங்குங்கள்.

வெற்றித் திருநகர்

அகிலன்

அத்தியாயம் இருபத்திநான்கு

அமைச்சரின் அந்தரங்கம்

உதயமார்த்தாண்டனை வரவேற்றுத் தமது கூடத்துக்குச் சாளுவ நரசிம்மர் அழைத்துச் சென்றவுடன், லட்சுமி அவர்களைத் தனியே விட்டு விட்டு மேல் மாடத்துக்குச் செல்ல முயன்றாள். சாளுவ நரசிம்மர் அவளைத் தடுத்து நிறுத்தி அருகிலிருந்த ஆசனத்தைச் சுட்டிக் காட்டினார். வேறு வழியின்றி அவளும் அவர்களோடு ஒன்றாக அமரும் படி ஆயிற்று.

உதய மார்த்தாண்டனின் விழிகள் அவனையும் மீறிக் கொண்டு அடிக்கடி லட்சுமியின் முகத்தில் பதிந்தது. லட்சுமியின் பேரழகு அவனைக் கண்ட மாத்திரத்திலேயே அவனை என்னவோ செய்தது. தன்னையும் அறியாமல் அவளையும் உணராமல் அவன் அவளுடைய அழகுக்கு அடிமையாகத் தொடங்கி விட்டான்.

வியப்பு மிகுந்த அவனுடைய விழிகளின் போக்கு லட்சுமியை நிலை கொள்ளாமல் தவிக்கச் செய்தது. அங்கிருந்து விடுதலை பெற்று அவள் பறக்கத் துடித்தாள். ஆனாலும் தந்தை சாளுவ நரசிம்மரின் விருப்பத்தை மீறி அவளால் அங்கிருந்து புறப்பட முடிய வில்லை.

நொடிப் பொழுதில் மார்த்தாண்டவர்மனின் குறிப்பையும் லட்சுமியின் தவிப்பையும் உணர்ந்து கொண்டார் சாளுவ நரசிம்மர். இருவருக்கும் ஒரே சமயத்தில் மகிழ்ச்சி யூட்டும் முறையில் பேசத் தொடங்கினார்.

"லட்சுமி என்னுடைய ஒரே குமாரத்தி. குமாரனில்லாத குறையை இவளே தீர்த்து வருகிறாள். ஒரே சமயத்தில் குமாரத்தி என்ற முறையில் இந்த வயது முதிர்ந்த தந்தையை யும் கவனித்துக் கொண்டு, அரண்மனைக் கடமைகளில் மந்திரியான எனக்கு மந்திரி யாகவும் இருந்து வருகிறாள். கற்ற கல்வியை இவள் வீணாக்கவில்லை."

"அழகுச் சுடரோடு அறிவுச் சுடரும் முகத்தில் ஒளி விடுகிறதே என்று கவனித் தேன்; நான் நினைத்தது சரியாக இருக்கிறது" என்று பூரிப்போடு கூறினான் மார்த்தாண்ட வர்மன்.

"லட்சுமி அருகில் இல்லாவிட்டால் எனக்குக் கை ஒடிந்தது போலத்தான்" என்று தொடங்கி, முன்பு அவள் அவருக்குச் செய்து வந்த பணிகளையெல்லாம் விவரித்துக் கொண்டு போனார் அமைச்சர்.

லட்சுமிக்கு அவர் தன்னைப் பற்றி மிகை படக் கூறுகிறார் என்று தோன்றியது. இப்போ தெல்லாம் அவர் அவளுடைய துணையையே நாடுவதில்லை. அவளுக்குத் தெரியாமல், தாமே எல்லாவற்றையும் செய்து கொண்டு வந்தார். லட்சுமிக்குக்கூட அவர் பேச்சில் குறுக்கிட்டு, 'எல்லாம் அந்தக் காலம்!' என்று கூற வேண்டுமென்று தோன்றியது. என்றாலும் தன்னை அடக்கிக் கொண்டு, "அப்பா சொல்கிற அளவுக்கு எனக்கொன் றும் தெரியாது" என்றாள் அடக்கத்தோடு.

அவளுடைய குரலில் ஒரு தனி அழகு ஒலிப்பதாகத் தோன்றியது மார்த்தாண்ட வர்மனுக்கு. சித்திரை வைகாசி மாதங் களின் அதிகாலைப் பொழுதுகளில் அவ னுடைய அரண்மனைப் பூங்காவில் குயில்கள் கூவுவதுண்டு. அந்த நினைவு வந்தது சேர நாட்டுச் சிற்றரசனுக்கு.

"இளவரசியாரின் துணையை நீங்கள் அதிகமாக நம்பிக் கொண்டிருந்தால் பிறகு உங்களுக்குத்தான் சிரமம்" என்று சிரித்த வாறே கூறினான்: "என்ன இருந்தாலும் இனி இவர்கள் உங்களோடு வெகுநாட்கள் இருக்க முடியாது. வேறோர் அரண்மனையை அலங் கரிக்கச் சென்று விடுவார்கள்."

"உண்மைதான்! இப்போதே லட்சுமியின் கரம் பற்றி என்னிடமிருந்து இவளைப் பிரிப்ப தற்கு விஜயநகரத்தில் போட்டிகள் இருந்து வருகின்றன" என்று பெருமையோடு கூறினார் அமைச்சர்.

"அந்தப் பாக்கியசாலி யார் என்று முடிவு செய்துவிட்டீர்களா?" என்று ஆர்வத் தோடு கேட்டான் மார்த்தாண்டவர்மன்.

"அப்பா!" என்று துடிப்போடு குறுக்கிட் டாள் லட்சுமி.

"யோசனை செய்து கொண்டிருக்கிறேன். காலமும் நேரமும் கூடி வரும் போதுதான் முடிவு செய்ய வேண்டும்" என்று அவ ளுடைய விழிகளை உற்றுப் பார்த்தவாறே கூறினார் சாளுவநரசிம்மர்.

லட்சுமிக்கு அவள் தந்தை என்ன கருத் தில் பேசுகிறார் என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. விகவதாதனுக்கென்று முடி வாகி விட்டதென்று இவர் வெளிப்படை யாகக் கூறிவிட்டால் என்ன? எதையுமே அவர் மனம் விட்டுப் பேசாதவராதலால்



லட்சுமி இதையும் தவறாக எடுத்துக் கொள்ள வில்லை. அதற்கு மேலும் அங்கு அமர்ந்திருக்கப் பிடிக்காமல், ''நீங்கள் உரையாடிக் கொண்டிருங்கள்; இதோ நான் வந்து விடுகிறேன்!'' என்று கூறி விட்டுச் சரேலென்று எழுந்தாள் லட்சுமி.

''பொறு, லட்சுமி! சேரநாட்டின் விருந்தினர் நம்முடைய மாளிகைக்கு வந்திருப்பது நமக்கெல்லாம் பெருமை தருவதற்காகத்தான். இந்த மண்ணில் அவ்வளவு இயற்கை வளம் நிறைந்த நாட்டை நான் கண்டதே இல்லை. எங்கு பார்த்தாலும் மலைகளும் காடுகளும் அருவிகளும் சோலைகளும் நிறைந்த நாடு. தேன் கதலி, வேர்ப் பலா, வள்ளிக் கிழங்கு கொழிக்கும் மண் சேரநாட்டு மண். யானைக் கூட்டத்துக்குப் பஞ்சமே இல்லை. கட்டாயம் நாமெல்லாம் ஒரு முறை அங்கு போய் அதன் அழகை நேரில் பார்க்க வேண்டும். பார்த்தால்தான் அதன் அருமை தெரியும்.''

''விஜயநகரத்தைவிட அது சிறப்புடையதென்று கூற முடியாது'' என்றான் மார்த்தாண்டவர்மன்: ''இந்த மண்ணுலகத்திலே சொர்க்கபுரி என்று ஒன்று இருக்குமானால் அது விஜயநகரம்தான்.''

''தலைநகரத்தைப் பொறுத்தவரையில் நீங்கள் கூறுவதை ஒப்புக் கொள்கிறேன். ஆனால் நாட்டை முழுமையாக எடுத்துக் கொண்டால், உங்கள் மலைநாட்டுக்கு ஈடு இணையாக என்னுடைய சோழ நாட்டைக் கூடக் கூற முடியாது'' என்றார் சாளுவ நரசிம்மர்.

''கட்டாயம் நீங்கள் இளவரசியாரோடு சேரநாட்டுக்கு ஒருமுறை வரவேண்டும்; நானே நாடு முழுவதும் உடன் இருந்து சுற்றிக் காட்டுவேன்'' என்று அழைப்பு விடுத்தான் மார்த்தாண்டவர்மன்.

அந்த அழகிய நாட்டுக்கு விசுவநாதனுடன் ஒன்றாகப் போய் வரவேண்டும் என்ற ஆவல் பிறந்தது லட்சுமிக்கு. விசுவநாதனின் நினைவு வரவே, மெல்ல அவர்கள் பேசிக் கொண்டிருந்த வேளை பார்த்து அங்கிருந்து நழுவினாள் லட்சுமி. சாளுவநரசிம்மருக்கும் அவனிடம் சிறிது தனித்துப் பேச வேண்டியிருந்ததால் அவளை அவள் போக்கில் விட்டு விட்டார்.

சாளுவ நரசிம்மர் மார்த்தாண்டனுக்கு அருகில் வந்து அமர்ந்து அவனிடம் அரசியல் விஷயங்களைப் பரிமாறிக் கொண்டார்.

''தாங்கள் முன்பு மதுரைக்குப் படைகள் அனுப்பாததும் ஒரு வகையில் நல்லதாகப் போயிற்று. நாகமநாயக்கரும் முன்பு போல் இல்லை. மாறி விட்டார். அவரை இப்போதெல்லாம் என்றால் நம்ப முடியவில்லை. ஆனால் மற்றொரு வகையில் நமக்கு எதிர்பாராதவிதமாக நற்காலம் பிறந்திருக்கிறது.''

அந்த நற்காலம் எப்படிப் பிறந்திருக்கிறது என்பதையும் அவனிடம் விளக்கினார் சாளுவ நரசிம்மர். சக்கரவர்த்தி கிருஷ்ணதேவராயருக்குப் பிறகு ஆட்சிக்கு வரவிருந்த அச்சுதராயர் அவருடைய நெருங்கிய நண்பராக இருந்தாலும், சாம்ராஜ்யத்தைக் கட்டிக் காப்பதற்குரிய திறமையோ, தகுதியோ இல்லாதவர். சக்கரவர்த்தியின் கடைசிக் காலத்திலேயே அங்கங்கே தெற்கில் கிளர்ச்சிகளைத் தொடங்கி விட்டால், அச்சுதராயர் ஆட்சிக்கு வந்தவுடன் தெற்கில் தனி ஆட்சியை நிலைநாட்டி விடலாம்.

''நான் விஜயநகரத்தில் அச்சுதராயருடன் இருந்து கொண்டே என்னால் முடிந்ததையெல்லாம் செய்து வருகிறேன். என்னுடைய பொறுப்பிலுள்ள சோழ நாட்டின் படைபலத்தைப் பெருக்கிக் கொள்வதற்குள்ள வழிகளை நான் கவனித்துக் கொள்ளுகிறேன். தெற்குக் கோடியிலுள்ள தாங்கள் படை திரட்டிப் பயிற்சி கொடுத்து வைத்திருங்கள். நமக்கு இடையிலிருக்கும் பாண்டிய நாட்டில் தான் இப்போதே கிளர்ச்சிகள் நடக்கப் போகின்றன. சந்திரசேகர பாண்டியரால் ஒருகாலும் நாடாள முடியாது. தெற்கில் தாங்கள் சித்தப்படுத்தி விட்டால், நானும் விஜயநகரத்திலிருந்து சோழ நாட்டுக்கு வந்து விடுகிறேன். நாம் புதியதொரு சாம்ராஜ்யத்தை ஏற்படுத்தியே தீர வேண்டும். சேர, சோழ, பாண்டிய நாடுகள் மூன்றும் ஒன்று சேர்ந்த சாம்ராஜ்யமாக அது விளங்கும். விஜயநகரத்திலிருந்து பிரிந்து நாம் தனி ஆட்சி செலுத்துவோம்; செலுத்த வேண்டும்!''

''பிரிந்து போக முடியுமா?'', என்று சந்தேகத்தோடு கேட்டான் உதய மார்த்தாண்டன்.


''பிரிவினைக்கு ஏற்பாடு செய்வது என் பொறுப்பு'' என்றார் சாளுவ நரசிம்மர். ''வடக்கே பாமினி சுல்தான்களிடமிருந்து விஜயநகரத்தின் வடபகுதியைக் காத்துக் கொண்டால் போதுமென்ற நிலையில் அச்சுதராயரை வைத்து விடுகிறேன். தெற்கில் அவர் திரும்பாதபடி வழிசெய்துவிடலாம்.''

சாளுவநரசிம்மரின் திட்டங்கள் உதய மார்த்தாண்டவர்மனுக்கு வியப்பளித்தன. மிகப் பெரிய இராஜதந்திரி அவர் என்ற பயபக்தியும் அவரிடம் அவனுக்கு ஏற்பட்டது.

''நான் கேட்பதைத் தாங்கள் தவறாக நினைக்க வேண்டாம். தாங்கள் தமிழராக இருந்தும் மிகச் செல்வாக்கு நிறைந்த பதவியில் இருக்கிறீர்கள். எதற்காகத் தாங்கள் விஜயநகரத்திலிருந்து விலக நினைக்கிறீர்கள்?''

''நான் ஓரளவு தீர்க்கதரிசனத்துடன் எதையும் சிந்திக்கிறேன். சக்கரவர்த்தி கிருஷ்ணதேவராயரைப் போல் ஆற்றல் கொண்டவர்களும் பரந்த மனமுள்ளவர்களும் இனி விஜயநகரத்தை ஆளப் போவதில்லை. அவருக்குப் பிறகு தமிழர்களுக்கோ தெற்கத்தியார்களுக்கோ இங்கு செல்வாக்கு இருக்காது. குறுகிய நோக்கம் கொண்டவர்களிடம் ஆட்சி வரும்போது நம்மையெல்லாம் அடிமைகளாக நடத்துவார்கள். இப்போதே நாம் விழித்துக் கொள்ளாவிட்டால் பிறகு நம்மால் மீள முடியாது.''

மார்த்தாண்டவர்மனுக்கும் அவர் கூற்று மெய்யென்றே தோன்றியது. மேலும் விஜயநகரத்தில் குவிந்து கிடந்த செல்வங்களும், அதன் மாடமாளிகைகளும் கூடகோபுரங்.


சுளுக்குகள்
வீக்கங்கள்
பிடிப்பு மற்றும்
தசை வலிகள்
IODEX
METHYL SALICYL
தேய்த்து - வலியைப்போக்கி இதமளியுங்கள்
அயொடெக்ஸ்®
IODEX
தேகாரோக்கியத்திற்கு மருந்து தயாரிப்பில் முன்னோடிகள்
ஸ்மித் க்லைன் & ப்ரெஞ்ச் (இந்தியா) லிட்., பம்பாய் - 1
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் இங்கிலாந்தில் இணைப்பு)

களும் அவனுடைய பொறுமையைக் கிளறி விட்டன.

''ஆமாம், வேறு வழியில்லை. வருடந் தோறும் பெரும் பொருள் விஜயநகரத்துக்கு அனுப்ப வேண்டியதிருக்கிறது'' என்றான்.

''அச்சுதராயர் சிம்மாசனத்துக்கு வந்த வுடன் முதலில் அதை நிறுத்தி விடுங்கள்!''

அமைச்சரின் ஆலோசனைகள் ஒருபுறமும் அவர் குமாரத்தி லட்சுமியின் பேரழகு மறு புறமும் அவனை வெகுவாகக் குழப்பத்தில் ஆழ்த்தின. லட்சுமியை அவன் நினைத்த அதே சமயத்தில் அவள் விசுவநாதனை நினைத் துக் கொண்டு மேல்மாடத்தில் நின்று கொண் டிருந்தாள். அரண்மனையிலிருந்து உணவுக்கு அவன் மாளிகைக்குச் செல்வதென்றால் அந்த வழியாகத்தான் அவன் செல்ல வேண்டும்; அவள் அவனுக்காக வழி மேல் விழி வைத்துக் காத்திருந்தாள்.

அத்தியாயம் இருபத்தைந்து

புதிய உறவு

என்றைக்குமில்லாதபடி ஏனோ லட்சுமிக்கு அன்றைக்கு எப்படியாவது விசுவநாதனைக் காண வேண்டுமென்ற பிடிவாதம் ஏற்பட்டு விட்டது. மேல்மாடத்துக்கு வந்தவள் தன் னைத் தானே நிலைக்கண்ணாடியில் அழகு பார்த் துக் கொண்டு, 'அவருடைய கண்களால் கண்டு களிக்க வேண்டிய அழகு இது!' என்று தனக்குள் கூறிக் கொண்டாள். உதய மார்த்தாண்டனை உத்தேசித்து அப்படியெல் லாம் தன்னை அலங்கரித்துக் கொண்டது அவளுக்கு என்னவோ போலிருந்தது. அவன் இளையவன் என்பதோ, அப்படித் தன்னை விழிகளால் விழுங்கக் கூடியவன் என்பதோ, அவளுக்கு முன்பே தெரிந்திருந் தால் அந்த அளவுக்கு அவள் தன்னை அலங் கரித்துக் கொண்டிருக்க மாட்டாள்.

அவனை எதிரில் வைத்துக் கொண்டு அவள் தந்தை அவனிடம் பேசிய விஷயங்கள் அவ ளுக்குத் துன்பத்தைக் கொடுத்தன. நாகம நாயக்கர் விடுதலை அடைந்த பிறகு சாளுவ நரசிம்மர் முற்றிலும் மாறிவிட்டார் என்றே அவள் நினைத்துக் கொண்டிருந்தாள். தங்க ளுடைய இரு குடும்பத்தாருக்குமிருந்த பழைய உறவு அப்படியே நிலைத்து விட்டது என்றே அவள் நம்பினாள். அதற்கு மாறாக அவள் தந்தை பேசிய பேச்சுக்கள் அவ ளுக்கு வெறுப்பைத் தந்தன.

மேல்மாடத்தில் நின்று கொண்டு கண் ணுக்கெட்டிய தூரம் வரையில் உற்றுப் பார்த்தாள் லட்சுமி. தொலைவில் குதிரை களில் வந்து கொண்டிருந்த வேற்று மனிதர் களை யெல்லாம் விசுவநாதன் என்று நினைத் துக் கொண்டு ஏமாந்தாள். காலையிலும் நடுப் பகலிலும் அவன் அந்த வழியாக அரண் மனைக்குச் சென்று திரும்புவான். கூடுமான வரையிலும் அப்போதெல்லாம் அவர்கள்

நீயும் திருட்டும்

(சிங்காரத்தின் ஊகம்)

1. திருடன் இரும்புப் பெட்டி யின் அருகே போகவில்லை என்ற முடிவுக்கு யாருமே வந்துவிடலாம். எப்படி என்றால், பெட்டியின் மேலே பூனை குடிப்பதற்காகப் பால் வார்த்து வைக்கப்படும் தட்டு அங்கே இருந்தது. இரும்புப் பெட் டியை நோக்கமாக வருபவராக இருந்தால் முதலில் அந்தத் தட்டை அப்புறப்படுத்திய பிறகே பெட்டியை உடைக்க முற்படுவான். அந்தத் தட்டு நகர்த்தப்படாததி லிருந்து திருடன் தேடி வந்தது இரும்புப் பெட்டியை அல்ல என் பது தெரியவில்லையா?

2. மழை தூறிக் கொண் டிருந்த இரவு வேளை அது. நெருப் பைக் கண்டு கடை அருகே சிங் காரத்தின் கார் வந்தபோது அங்கு நின்றிருந்த ஒரு கார் கிளம்பிச் சென்றது. அது நகர்ந்ததும் அது நின்றிருந்த இடம் மழையினால்- நனையாது காய்ந்திருந்தது. அதி லிருந்து அந்தக் கார், அங்கு மழை ஆரம்பிக்கு முன்னரே நின்று கொண்டிருந்திருக்க வேண்டும். என்பதைச் சிங்காரம் ஊகிக்கிறான். அந்தக் கார் நின்றிருந்த இடத்தி லிருந்து ஏலம் போடும் கடையில் ஏற்பட்ட தீவிபத்தை நன்கு காண லாம். அப்படி இருந்தும் அந்தக் காருக்கு உரியவர் தீயைப் பற்றிப் பரபரப்படைந்து கூச்சலிடாமல் கிளம்பியது சிங்காரத்துக்குச் சந் தேகத்தை உண்டாக்குகிறது.

3. மின்சார இஸ்திரிப்பெட்டி யின் உரசலினால் மரப் பீரோ கனன்று தீப்பிடித்திருக்குமானால், அது இஸ்திரிப் பெட்டி அருகே உள்ள இடத்திலல்லவா நெருப்புப் பற்றி இருக்க வேண்டும்? ஆனால் நெருப்போ பீரோவின் வேறு பக்கத்தையே நாசமாக்கி இருக் கிறது. ஆகவே தீவிபத் துக்கு மின்சார இஸ்திரிப் பெட்டி யைப் போலியான காரணமாக்கி இருக்கிறான் கடைக்குத் தீயிட்ட வன் என்ற முடிவுக்கு வருகிறான் சி. ஐ. டி. சிங்காரம்.

ஒருவரையொருவர் திரும்பிப் பார்க்கத் தவறியதில்லை.

நடுப்பகல் கடந்து மேலும் இரண்டு மூன்று நாழிகைகள் கடந்து விட்டன. லட்சுமி மேல்மாடத்திலேயே கால் கடுக்க நின்று கொண்டிருந்தாள். கடைசியில் அவள் இதயத் துடிப்பு அதிகமாயிற்று. விழிகள் கூர்மை பெற்றன. அவள் எதிர்பார்த்தது வீண் போக வில்லை. விசுவநாதன் சோர்வோடு தன் மாளிகைக்குத் திரும்பிக்கொண்டிருந்தான்.

மேல் மாடத்திலிருந்து கீழே பறந்தோடி வந்தாள் லட்சுமி. பரபரப்போடு வெளி வாயில் முகப்புக்கு வந்து நின்றாள். விசுவநாதனுக்கு அவளைத் தொலைவில் கண்டவுடனேயே மகிழ்ச்சி பொங்கியது. ஆடுகளங்களைச் சுற்றிப் பார்த்து விட்டுக் களைப்போடும் சோர்வோடும் திரும்பியவன், அவளுடைய ஆடை அணிகளில் தெரிந்த மாற்றங்களைக் கண்டு விட்டுத் தன் களைப்பு அனைத்தையும் மறந்தான். அவனுடைய குதிரை அவனுக்கு அருகில் வந்தவுடன் தானாக நின்றது.

''என்ன விசேஷம்? திருவிழா இரண்டு தினங்களுக்கு முன்பாகவே இங்கு வந்து விட்டது போல் தோன்றுகிறதே?'' என்று குதிரையிலிருந்து இறங்காமலே கேட்டான்.

''திருவிழா வந்தாலும் வந்தது, உங்களுக்கெல்லாம் மற்றவர்களுடைய நினைவே இருப்பதில்லை! இந்த வழியாகப் போகும் போதாவது எட்டிப் பார்த்து விட்டுப் போகக் கூடாதா?''

''பார்க்காமலா போகிறேன்? கழுத்துச் சுளுக்கும் வரையிலும் நாளும் மேல்மாடத்தைப் பார்க்கத் தவறுவதில்லையே!''

''போதும், முதலில் குதிரையை விட்டுக் கீழே இறங்குங்கள். மாளிகைக்கு ஒரு விருந்தினர் வந்திருக்கிறார்; அவரைப் பார்த்து விட்டு, இங்கேயே விருந்துண்டு விட்டுச் செல்லுங்கள்.''

குதிரையிலிருந்தவாறே மாளிகையின் உள் முகப்பைப் பார்த்தான் விசுவநாதன். அங்கு நின்றுகொண்டிருந்த ரதத்தின் கொடியிலிருந்து அவனுக்கு உண்மை விளங்கி விட்டது. அந்தத் தேரையும், அவளையும் மீண்டுமொரு முறை பார்த்துவிட்டு, ''லட்சுமி! நான் பிறகு வருகிறேன்'' என்று சொல்லி அங்கிருந்து கிளம்பப் பார்த்தான்.

ஆத்திரத்தோடு குதிரையின் கடிவாளத்தை எட்டிப் பிடித்துக் கொண்டாள் லட்சுமி. ''நீங்கள் இப்போது இறங்கி வராவிட்டால் இனி உங்களோடு நான் பேசவே மாட்டேன்!'' என்று அழாக்குறையோடு கூறினாள்.

''விருந்தென்றால் மாமா எனக்கு முன்பே சொல்லி அனுப்பியிருப்பார்கள் லட்சுமி. இந்தச் சமயத்திலெல்லாம் நான் அழைப்பில்லாமல் வருவது நல்லதல்ல.''

அவனுடைய கண்களில் கலந்துவிட்ட சந்தேகத்தை அவள் உணர்ந்து கொண்டாள். ''நீங்கள் வருவீர்கள் என்பதால்தான் நீங்கள் என்னை இந்தக் கோலத்தில் கண்டு மகிழ வேண்டும் என்பதற்காகத்தான் நான் முற்பகலிலிருந்து இங்கு காத்திருக்கிறேன். வாயிற் காவலர்களும், மற்றவர்களும் ஏதும் நினைப்பதற்கு முன்னால் என்பொருட்டுத் தயைசெய்து இறங்கி வாருங்கள்'' என்று அவள் மன்றாடினாள்.

விசுவநாதனுக்கு வேறு வழியில்லை. குதிரையிலிருந்து குதித்தான். உள்ளே நுழைந்து காவலனிடம் குதிரையை விட்டு விட்டு அவளைப் பின்தொடர்ந்தான்.

லட்சுமி சிட்டுப் போல் உள்ளே பறந்து சென்று ''அப்பா, மாமாவின் குமாரர் வந்திருக்கிறாரப்பா!'' என்று விசுவநாதனின் வரவைத் தன் தந்தைக்கு அறிவித்தாள்.

ஒரு கணம் லட்சுமியைக் கட்டெரித்து விடுவது போல் விழித்துப் பார்த்துவிட்டு மறு கணமே முகத்தில் புன்முறுவல் காட்டி, ''ஓ! விசுவநாதன் வந்திருக்கிறானா? அழைத்து வா'' என்றார் அமைச்சர்.

'மாமாவின் குமாரன் என்கிறாளே!' என்று உதய மார்த்தாண்டனும் சற்றே திடுக்கிட்டான். அதற்குள் விசுவநாதனே அங்கு வந்து, ''வாருங்கள்!'' என்று சேர நாட்டரசனை வரவேற்றவாறு கரம் கூப்பினான். விசுவநாதனின் விழிகள் மிகவும் கூர்மையோடு உதய மார்த்தாண்டனின் முகத்தில் பதிந்தன. திறமைசாலியான சாளுவ நரசிம்மரே அப்போது எதிர்பாராத தாக்குதலுக்குள்ளானவர் போலக் கலகலத்துப் போனார்.

விசுவநாதனை அமரச் செய்துவிட்டு, ''விழா வேலையில் நீயும் நாகமரும் மூழ்கியிருப்பீர்கள் என்பதால்தான் உங்கள் இருவரையும் மாளிகைக்கு அழைக்கவில்லை. நல்லவேளையாக நீயே வந்து விட்டாய்'' என்று மழுப்பினார் சாளுவ நரசிம்மர்.

உதய மார்த்தாண்ட வர்மனுக்கு விசுவநாதனை ஏறிட்டுப் பார்ப்பதற்கே தயக்கமாக இருந்தது. முன்பு தூதுவர்கள் மூலம் விசுவநாதன் அனுப்பிய எச்சரிக்கைக்குப் பணிந்து விட்டவன் அவன். ஆனால் விசுவநாதனோ அதையெல்லாம் மறந்து விட்டவன் போல் அவனுடைய நலன்களை விசாரித்தான்.

''கூடுமானவரையில் விருந்தினர்களுக்கான வசதிகளையெல்லாம் செய்திருக்கிறோம். பெரிய அளவில் விருந்தினர்களை எதிர்பார்ப்பதால், சிறு குறைகள் ஏதும் ஏற்படக்கூடும். என்னிடம் கூறினாலும் சரி, மாமாவிடம் கூறினாலும் சரி; குறைகளைக் கவனித்துக் கொள்ளுகிறோம்'' என்றான் விசுவநாதன்.

ஏதோ பெயருக்கு விசுவநாதனிடம் பதிலளித்தான் உதய மார்த்தாண்டன். சாளுவ நரசிம்மரை அவன் மாமா என்று அழைத்தது வேறு அவனுக்குச் சுருக்கென்று தைத்தது. மூவருமே தவிப்பு நிறைந்த ஒருவகை மௌனத்தில் சிறிது நேரம் ஆழ்ந்திருந்தார்கள்.

சேர நாட்டரசனைத் தனக்குள் எடை போட்டுப் பார்த்துக் கொண்டான் விசுவநாதன். முகத்தில் சித்தனையாற்றலுடன் உடல் வனப்பும் இளமை எழுச்சியும் கொண்டவன்தான் அவன். கண்களில் சற்றே சஞ்சல சுபாவம் தென்படுவது போல் தோன்றியது. விரைவில் உணர்ச்சி வசப்படக் கூடிய தன்மையும் உள்ளவன் என்பதை அவன் காணத் தவறவில்லை.

(தொடரும்)


முக்கியமான மாட்சில் ஆட வேண்டும் — ராஜுவுக்கோ முதுகுவலி
இன்று மாலை ஹாக்கி மாட்ச், ஆனால், என்னால் ஆட முடியாது! முதுகு வலி கொல்லுகிறது!
ஸாரிடான் சாப்பிடு! வலி நீங்கும்!
ராஜு ஸாரிடான் சாப்பிடுகிறன்
பிறகு...
முதுகுவலி போயே விட்டதே! ஸாரிடானுக்கு இவ்வளவு சக்தியா!
ஒரே ஒரு
ஸாரிடான்
'ரோஷ்'
வலியைப் போக்குகிறது ஆசுவாசப் படுத்துகிறது புத்துணர்ச்சி யூட்டுகிறது
உலகப் புகழ் பெற்ற வலி நிவாரணியான ஸாரிடான் விரைவில், அபாயமின்றி, நிச்சயமாக நிவாரணம் அளிக்கிறது. தலைவலி, பல்வலி, உடல்வலி, சாதாரண உடற் கோளாறுகள், இவற்றிலிருந்து நிவாரணம் பெற ஸாரிடான் சாப்பிடுங்கள். ஒரு வில்லை முழு டோஸ்; குழந்தைகளுக்கு ½ லிருந்து ¾ வில்லை வரை கொடுக்கலாம்.
ஸாரிடான் ஒரே வில்லை போதும்
'ரோஷ்' தயாரிப்பு
ஸோல் டிஸ்ட்ரிப்யூட்டர்கள் : வால்ட்ரஸ் லிமிடெட்



மத்தியான டிபனுக்கென்று காண்டீனில் போட்ட மைசூர்ப்பாகு அது. அப்போது விற்காமல் தங்கிவிட்டதையெல்லாம் பொட்டலம் கட்டி 'டிரே'யில் நிரப்பிக்கொண்டு ஒரு பைசா 'கன்செஷனோ'டு விற்றுத் தள்ளக் கிளம்பிவிட்டான் காண்டீன் பையன்.

ஒரு பைசா என்றாலும் ஒரு பைசா லாபம் இல்லையா? விட்டுவிடுவாரா என்ன ஸ்ரீரங்காச்சாரி? நாலு பொட்டலம் வாங்கிக் கோட்டுப் பாக்கெட்டில் போட்டுக் கொண்டார். "படு போக்கிரிப் பசங்கள் வீட்டிலே. போனதும் போகாததுமா 'என்ன தாத்தா வாங்கிண்டு வந்தே'ன்னு பிச்சு எடுத்துப்பிடுவான்கள்!" என்று பேரப் பையன்களைப் பற்றிப் பெருமையோடு குறைப்பட்டுக் கொண்டே தாம் மைசூர்ப்பாகு வாங்குவதை நாகுக்காகப் பக்கத்தில் இருந்த ராமச்சந்திரனிடம் தெரிவித்துக் கொண்டார்.

ராமச்சந்திரனின் மனசிலே பளிச்சென்று ஒரு காட்சி படம் விரிக்கிறது...

ஆபீசுக்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறார் அவர். வழக்கமான ஆபீஸ் உடை. இடுப்பில் வீட்டுச் சலவையிலும்

அவளுக்காக அல்ல

கதை

எவ்வளவு கஷ்ட ஜீவனம்... எவ்வளவு கஷ்ட ஜீவனம்...சே, வாழ்க்கையா இது? சின்னச் சின்ன ஆசைகளையெல்லாம் கூட நிறைவேற்றிக் கொள்ள முடியாமல், வெளியே சொல்ல முடியாமல், நெஞ்சிலேயே போசுக்கிக் கொண்டு...

ஆடிட் ரிஜிஸ்தருக்குள் மூழ்கிப் போயிருந்த ராமச்சந்திரனின் மனசிலே இப்படிப்பட்ட ஆத்ம விசார சிந்தனைகள் குமிழியிட்டன என்றால் அதற்கு வேறு ஒன்றும் காரணம் இல்லை. காலக்கோளாறுதான்....பண நெருக்கடிதான்...தேதி இருபத்தெட்டு. கையிலே நயா பைசாக்களுக்குத் தகராறாக இருக்கும் நேரம். அந்தச் சமயத்தில் கொஞ்சம் கூடப் புத்தி இல்லாமல், காண்டீன் பையன் ஸ்வீட் விற்றுக் கொண்டு வரலாமா? செக்ஷன் செக்ஷனாக மேஜை நாற்காலிகளுக்கிடையே இருக்கும் இடைவெளிகளுக்குள் புகுந்து நடந்து தனது வர்த்தக ஒலிபரப்பை எழுப்பியதுமல்லாமல், அவருக்கு மேலும் எரிச்சல் உண்டாக்கும்படி அவருக்கு எதிரிலேயே வந்து நின்றுகொண்டு, "ஸார், ஸ்வீட் வேணுமா? பதினைஞ்சு பைசாதான்!" என்று பேரம் பேசலாமா?

"வேண்டாம், வேண்டாம்!" என்னும் பாவனையில் தலையை அசைத்தார் ராமச்சந்திரன்.

பழுப்பேறிய நாலு முழம் வேஷ்டி. மேலே அதற்கு ஜோடியாக ஓர் இஸ்திரி போடாத அரைக்கைச் சட்டை. தோளிலே கைத்தறித் துண்டு அங்கவஸ்திரம் என்ற கௌரவத்துக்கு ஆளாகியிருக்கிறது. கையிலே காக்கிப் பை ஒன்று. அதற்குள் டிபன்பாக்ஸும்—வீட்டுத் தொந்தரவை மறப்பதற்காகக் கொண்டு வரப்பட்ட ஆபீஸ் கட்டு இரண்டும், ஆபீஸ் தொந்தரவை மறப்பதற்காகக் கொண்டு போகும் வாரப் பத்திரிகை ஒன்றும்.

"நான் வரேன், செல்லம்!" என்கிறார் அவர்.

"போயிட்டு வாங்கோ!... சரஸா,...உம், ஆகட்டும்!..."

அவருக்கு முன்னாலேயே சாப்பிட உட்கார்ந்தும், இன்னும் எழுந்திருக்காமல், தட்டைச் சுற்றிப் பருக்கையை வாரி இறைத்துக் கொண்டு அடம் பிடிக்கும் சரஸா — அவருடைய அஞ்சு வயசுப் பெண் — அவரை நிமிர்ந்து பார்த்து, "அப்பா, சாயந்திரம் வரப்போ தேக்கு ஜாங்கிரி வாங்கிண்டு வரயா?..." என்று கேட்கிறாள்.

"ஆகட்டும். நீ மேலெல்லாம் ஆக்கிக்காமல் சமர்த்தாச் சாப்பிட்டு எழுந்திரு" என்கிறார் அவர்.

"போப்பா, நீ ஏமாத்திடுவே! நெஜம்மா வாங்கிண்டு வரயா?" என்று கேட்டுக் கொண்டே எழுந்து வந்து அவருடைய கால்களைக் கட்டிக் கொள்ளுகிறாள் சரஸா, சாப்பிட்ட கையோடு.

"சிச்சீ! எச்சக் கையோட..." என்று அவளைக் கரகரவென்று இழுத்து உட்கார்த்தி வைத்துவிட்டு சரக் கையால் வேஷ்டியைத் துடைத்து விடுகிறாள் செல்லம்.

"நெஜம்மா வாங்கிண்டு வரயா, அப்பா?" என்கிறாள் சரஸா மறுபடியும்.



ராமச்சந்திரன் ரிஜிஸ்தரில் முழங்கையை ஊன்றிக் கொண்டு விரல்களைச் சொடுக்கி விட்டுக் கொண்டார்.

பாவம், சரளா! எத்தனையோ தடவை ஏமாந்து ஏமாந்து அப்பா மீது நம்பிக்கையே அற்றுப் போய் விட்டது அவளுக்கு. இருந்தாலும் ஓர் ஆவல். இன்றைக்கு ஒரு வேளை வாங்கிக் கொண்டு வருவார் என்ற நைப்பாசை. நம்பிக்கை செத்த பிறகும் இலேசாகத் தலைதூக்கிப் பார்க்கும் ஆசையின் சூதாட்டச் சபலம்.

அத்தனை விவரமாக ''ஜாங்கிரி வாங்கிண்டு வா'' என்று சொல்லியனுப்புகிறவளே ஒழிய, சாயந்திரம் போகும்போது அரையணா பட்டாணி வாங்கிக்கொண்டு போனால் போதும். வாயெல்லாம் பல்லாகப் போய் விடும். அவ்வளவு சந்தோஷம் அந்த அரிசிப் பல்லுக் காரிக்கு. ''இந்தா மணி நோக்கு! அப்பா, நோக்கு! அம்மா நோக்கும் கொஞ்சம்!'' என்று ஒவ்வொருவருக்கும் தன் சின்னக் கையால் கொஞ்சம் கொஞ்சம் எடுத்துத் தருவாள். கடைசியில் பார்த்தால் அவள் பங்குக்கு நாலு பட்டாணி கூடத் தேறாது. முகம் கன்றிப் போய் விடும். கண்களில் பரிதவிப்போடு தாயைப் பார்ப்பாள்.



"இந்தா, நேக்கு வேண்டாம். நீயே எடுத்துக்கோ!" என்று கையை நீட்டுவாள் செல்லம். ஓடிப் போய் வாங்கிக் கொள்வாள் குழந்தை. "இந்தா, இதை எடுத்துக்கோ!" என்பார் ராமச்சந்திரன். அதையும் பெற்றுக் கொள்வாள். "நேக்கு நெறைய ஆயிடுத்துப்பா. மஷிக்குத்தான் கொஞ்சம்!" என்பாள். அடுத்த நிமிஷமே கூடப் பிறந்த அந்த ஈகைக் குணம் மறுபடியும் தலைகாட்ட ஆரம்பித்து விடும்...

அந்தச் சின்னக் குழந்தையின் மனசுக்குச் சந்தோஷம் கொடுக்க முடியவில்லையே! திருப்தி செய்ய வக்கில்லையே! என்ன ஜன்மம் என்ன பிழைப்பு... சீ!...

அவருக்கு வேலை ஓடவில்லை. எதிரே ஆடிட் ரிஜிஸ்தர் பிரித்தது பிரித்தபடியே கிடந்தது.

நடுத்தர வருமான வர்க்கம் என்று அடிக்கடி சொல்லப்படுகிறதே, அந்த இனத்தின் ஒரு பிரதிநிதியாக ராமச்சந்திரனை எடுத்துக் கொள்ளலாம்.

அந்த ஆபீஸிலே அவருக்குக் கொடுக்க முன்வந்த மொத்தச் சம்பளம் முந்நூற்றைம்பது ரூபாய். அது அவருக்குத் தம்மையும் தம் குடும்பத்தையும் தன்னைக் கட்டிக் கொண்டு போகப் போதுமான சம்பளம் தான். ஆனால் பிடிப்புகள், எல்லாம் போக அவருக்குக் கையில் கிடைத்த சம்பளமோ இருநூற்று முப்பது ரூபாய் மட்டுமே. மொத்த வருமானத்துக்கும் நிகர வருமானத்துக்கும் மிடையே நூற்றிருபது ரூபாய் அகலத்துக்கு ஒரு பெரிய பள்ளம் வாயைப் பிளந்து கொண்டிருந்தது. அந்தப் பள்ளத்தை அவரே தான் வெட்டினார். தம் கையைக் 'கன்னிகா தானம்' செய்து கொடுப்பதற்காகவும், காசில்லாத சமயத்திலே சகஜமாகத் தோன்றும் எதிர்பாராத அவசியச் செலவுகளுக்காகவும் அவர் அந்தப் பள்ளத்தை வெட்ட வேண்டியதாயிற்று.

அதை மூட அவர் அரும்பாடு பட்டார். இருபத்தைந்து ரூபாய் வாடகையில், பழைய மாம்பலத்தில் எலி வளையிலும் மோசமான ஒரு குப்பைத் தொட்டியில் கிருகஸ்தாசிரமம் நடத்தலானார். ஹோட்டலில்சாப்பிடுவதில்லை என்று விரதம் எடுத்துக் கொண்டார். சாயந்திரம் ஆபீஸிலிருந்து வீட்டுக்குத் திரும்பும் போது நடையை மேற்கொண்டார். அப்படியும் நிலைமையைச் சமாளிக்க முடியவில்லை. கடன் என்னும் சேற்றில் கால் அழுந்திக் கொண்டே போயிற்று.

வறுமை மக்கட் செல்வத்துக்குப் பிரதானமான எரு அல்லவா? கஷ்டங்களுக்கு இடையில் குடும்பம் பெருகிக் கொண்டு வந்தது. ஒன்று, இரண்டு, மூன்று குழந்தைகள் ஆகிவிட்டன. ராமச்சந்திரனுக்கு மூச்சுமுட்டியது. இளைத்தவன் குழந்தை என்று அவை அம்ப சொல்பமான செலவோடு வளரவில்லை. குழந்தை வளர்ப்பின் ஒவ்வொரு நிலையிலும் செலவு வெறி நாயைப் போல் அவர் கையைக் கடித்தது. ராமச்சந்திரன் தீர யோசனை செய்தார். "குழந்தைகளுக்கு ஒரு பால் வாங்கிக் கொடுக்கவும், ஒரு சட்டை வாங்கிப் போடவுமே இந்தப் பாடாய் இருக்கிறதே! இன்னும் என்ன என்ன கஷ்டமிருக்கிறதோ? இந்த மட்டும் எப்படியாவது சமாளித்தால் போதும். இனிமேலும் குடும்பத்தைப் பெருக விடக் கூடாது" என்று தீர்மானம் செய்து, மனைவியையும் கலந்தாலோசித்து விட்டு, சர்க்கார் செலவில் வாஸெக்டமி ஆபரேஷன் செய்து கொண்டார்.

ஆபரேஷன் செய்துகொண்ட அதே வருஷம் அவருடைய நடுப் பையன் டிப்தீரியா என்று சாக்கு வைத்துக் கொண்டு செத்துப் போனான். ராமச்சந்திரன் நிலைகுலைந்து போனார். கடவுளின் நோக்கத்தைத் தாம் குலைத்ததால் தம் நோக்கத்தைக் கடவுள் பரிகசித்து விபரீதம் செய்கிறாரோ என்று துணுக்குற்றது அவர் மனசு. "தெய்வமே! நான் செய்தது பாவம்தான். ஆனால் ஏன் செய்தேன் என்பது உனக்குத் தெரியாதா? என் ஒரு குழந்தையைப் பழி வாங்கிக்கொண்டது போதும். மேலும் தண்டிக்காதே. என் குடும்பத்தைக் காப்பாற்று!" என்று நெஞ்சுருக வேண்டிக் கொண்டார்.

கடவுள் மேற்கொண்டு தண்டிக்கவில்லையே தவிர அவர்குடும்பத்தைக் காப்பாற்றியதாகத் தெரியவில்லை. பசியும் பஞ்சமும் இல்லாவிட்டாலும் பற்றாக்குறை தலைவிரித்தாடியது. அவர் மனைவி செல்லம் இந்த விஷயத்தில் அவருக்கு ஒரு வரப்பிரசாதம். அவரை விடத் தாழ்ந்த நிலையிலிருந்த ஒரு பெரிய குடும்பத்திலிருந்து வந்தவள். ஏழ்மைக்கு உரிய சிக்கனமான புத்தி இருந்தாலும், கவனமும், கண்டிப்பான மனோபாவமும் அவளிடம் மேலோங்கியிருந்தன. செட்டாகக் குடித்தனம் நடத்தினாள். அவள் அவரைக் கல்யாணம் செய்து கொண்டபோது அவர் வாங்கின நூற்றென்பது ரூபாய் சம்பளத்திலிருந்து இன்றைக்கு வாங்கும் முந்நூற்றைம்பது ரூபாய் வரை, அவர் வருமானத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் பணத் தட்டுப்பாடு பெரிசாகத் தெரியாமல் மூடி மறைத்துக் கொண்டு வந்தாள். ஆயினும் அவளுடைய செட்டான குடித்தனத்தின் லட்சணம், மணியின் மார்பில் கட்டிய எலும்புக் கூட்டிலும், நாலு தூறலுக்கே மூக்கை உறிஞ்சிக் கொண்டு சரஸா முகத்தைச் சிணுங்குவதிலும் வெகு ஸ்பஷ்டமாகத் தெரிந்தது.

திடீரென்று ஒரு வேகம். ராமச்சந்திரன் நிமிர்ந்து பார்த்தார். ஒரு தரத்துக்கு இரண்டு தரமாய் ஸ்ரீரங்காச்சாரி எண்ணிக் கொடுத்த சில்லறையை வாங்கி திஜார்ப் பையில் போட்டுக் கொண்ட காண்டீன் பையன் நகர்ந்து ஹாலின் மறு கோடிக்குப் போய்விட்டான். அவனைக் கூப்பிட்டார். எதிர்த்தாற்போலிருந்த வாசுவைப் பார்த்து, "வாசு, ஒரு ரூபா கொடு" என்றார். கடன் வாங்குவதிலும் ஒரு கௌரவம் இருக்கிறதல்லவா? முப்பது பைசா கேட்டால் அவமானம். ஒரு ரூபாய் என்றால் பரவாயில்லை...

இரண்டு ஸ்வீட் பொட்டலம் வாங்கிப் பையிலே போட்டுக் கொண்டதும் மனசுக்கு ஒரு நிம்மதி ஏற்பட்டது. ஆடிட் ரிஜிஸ்தரிலே கவனம் செலுத்த முயன்றார். ஆனால் அது பட்ட கவனத்தை ஓட்ட வைப்பது சுலபமாயில்லை. "நெஜமா வாங்கிண்டு வரயா, அப்பா?" என்று கேட்ட சரஸாவின் முகம்



அஜீரணத்தை அகற்ற

பிலிப்ஸ்

மில்க் ஆப் மெக்னீஷியா டாபிலெட்

உடனடி நிவாரணமளிக்கிறது

4 மாத்திரைகள்
20 பைசா



ஒவ்வொரு சுவையான பிலிப்ஸ் மாத்திரையும் உடனடியாக அதனுடைய எடைக்கு 189 மடங்கு அதிகப்படியாக வயிற்றில் உண்டாகும் எரிச்சல், புளிப்பான ஏப்பம் முதலியவற்றை இயக்கும் சக்தியுள்ளதால், மற்ற எல்லா மாத்திரைகளையும் விட வெகு விரைவில் குணப்படுத்துகிறது.

குழந்தைகள் இதன் இனிமையான சுவையை மிட்டாய் போன்று விரும்பிச் சாப்பிடுகிறார்கள். இதில் பரபரப்போ, தொல்லைகளோ கிடையாது. குடும்பத் தேவைகளுக்கு சிக்கனமான முறையில் 75 மற்றும் 150 மாத்திரைகள் கொண்ட பாட்டில்களில் கிடைக்கும்.
இப்பொழுதே உபயோகித்துப் பாருங்கள், எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.

பிலிப்ஸ்

மில்க் ஆப் மெக்னீஷியா டாபிலெட்

மான்யுபாக்சரர்: ரிஜிஸ்டர்ட் யூஸர்
டேய்ஸ் மெடிகல் ஸ்டோர்ஸ் (மான்யுபாக்சரிங்) பிரைவேட் லிமிடெட்,
62, பண்டல் ரோட், கல்கத்தா-19

தான் அவருக்கு ஞாபகம் வந்தது. சாயந்திரம் வீட்டுக்குப் போனதும் அவளிடம்...

சாயந்திரம் வீட்டுக்குப் போகிறார் ராமச்சந்திரன். சொப்பு அடுப்பிலே சொப்பு வெண்கலப் பானையை வைத்துச் சாதம் வடித்துக் கொண்டிருக்கும் சரஸா அவரைப் பார்த்துவிட்டு, ''அப்பா வந்தாச்சு...'' என்று கத்திக் கொண்டே ஓடி வருகிறாள். செருப்பைக் கழற்றி ஓரமாக விட்டவர், தம் கையிலிருக்கும் பையைத் தலைக்கு மேல் தூக்கிப் பிடித்துக் கொண்டு, ''பையிலே என்ன இருக்கு, சொல்லு?'' என்று கேட்கிறார். சரஸாவுக்குக் காலையில் ஜாங்கிரி கேட்டது ஞாபகமில்லை. அதனால் அவள் அவருக்கு முன்னால் எம்பி எம்பிக் குதித்துக்கொண்டே, ''சாக்லேட்...வாழைப்பழம்...பாதாம்அல்வா ....கேக்....'' என்று தனக்குத் தெரிந்த தின்பண்டங்களை யெல்லாம் ஒவ்வொன்றாகச் சொல்லிக் கொண்டே வருகிறாள்.

''நீ சொன்னது எதுவுமில்லே. மைசூர்ப் பாகு!... இந்தா!'' என்று பையை அவளிடம் தருகிறார்.

அவருடைய அட்டகாசத்தை வேடிக்கை பார்த்தபடி செல்லம் வருகிறாள். ''இருந்திருந்து மைசூர்ப்பாகுதான் கெடச்சதாக்கும் ஒங்களுக்கு?'' என்கிறாள் கேலியாக.

''ஒனக்கு என்ன தெரியும்?... ஆபீஸ் கான்டீன்லே செஞ்சதாக்கும். வாயிலே போட்டா பாகாக் கரையும்... நீயும் பண்ணுவியே, கத்தியாலே ஒடைக்கிற மாதிரி!'' என்கிறார்.

அதற்குள் மணியும் சரஸாவும் ஆளுக்கொரு பொட்டலத்தைப் பிரித்து விடுகிறார்கள். சரஸா அவசரப்பட்டு வாயில் வைத்துக் கடித்து விடுகிறாள். பிறகு மணி அம்மாவுக்குக் கொஞ்சம் விண்டு தருவதைப் பார்த்துவிட்டு, வாயிலிருப்பதை விடக் கையிலிருக்கும் துண்டு பெரிசா'யிருப்பதால், இடது கையால் வாயிலிருக்கும் துண்டை எடுத்து, ''அப்பா, இந்தா, நோக்கு'' என்று அவரிடம் நீட்டுகிறாள். அவளுடைய எச்சில் பட்ட அந்த மைசூர்பாகுத் துண்டத்தை அவர் தம் வாயில் போட்டுச் சுவைக்கிறார்.

ராமச்சந்திரனின் கற்பனை மேலும் நீள்கிறது....

ராத்திரி சாப்பாடு ஆனதும் சரஸாவுக்கும் மணிக்கும் பாயைப் போட்டுவிட்டுத் தானும் படுத்துக் கொள்கிறார். குழந்தைகள் இருவரும் படுத்துத் தூங்கி விடுகிறார்கள். அவர் மட்டும் கண்ணை மூடிக்கொண்டு தூக்கத்துக்காகத் தவமிருக்கிறார்.

செல்லம் சாப்பிட்டுவிட்டு அடுப்பங்கரை வேலைகளை முடித்துக் கொண்டு வருகிறாள். விளக்கை அணைத்து விட்டு அவருக்கும் குழந்தைகளுக்கும் நடுவில் படுத்துக் கொள்கிறாள். ஒரே புழுக்கம் அறையிலே. விசிறியை எடுத்து விசிறிக் கொள்கிறாள். பிறகு அவருக்கும் விசிறுகிறாள். ''தூங்கிட்டேளா?'' என்று கேட்கிறாள்.

''ஊம்... ஊஹூம்!'' என்று ஊங்காரம் செய்கிறார் அவர்.

''என்ன... நான் மைசூர்ப்பாகு பண்ணினால் கத்தியாலே ஒடைக்கிற மாதிரி இருக்கா?...'' என்று கேட்கிறாள்.

ராமச்சந்திரன் கண்ணைத் திறந்து பார்க்கிறார். இருட்டில் அவளுடைய ஒட்டிய முகமும் அழகாக இருக்கிறது. ''அசடு, நான் சொன்னேன்... அதை இன்னுமா ஞாபகம் வச்சண்டிருக்கே?'' என்கிறார்.

அஞ்சரை மணிக்கு ஆபீசை விட்டுப் புறப்பட்ட ராமச்சந்திரன் வீட்டை நோக்கி நடந்தபோதுகூட மைசூர்ப்பாகுப் பொட்டலங்கள் தந்த இத்தகைய பெருமித நினைவுகள் அவர் மனசை விட்டு நீங்கினபாடில்லை.

மானசீகமாய்ச் சரஸாவைத் தூக்கி மடி மீது வைத்துக் கொண்டு, ''சரஸாக் குட்டி, நீ அப்பாத் தங்கமா, அம்மாத் தங்கமா?'' என்று கொஞ்சுகிறார் அவர்.

''அப்பாத் தங்கம்!'' என்கிறாள் சரஸா வெடுக்கென்று.

''ஏன் சொல்லு?'' என்று கேட்கிறார் பெருமையோடு.

''அப்பாதான் மைசூர்ப்பாகு வாங்கித் தருவா. சாக்லேட் வாங்கித்தருவா. பாவாடை வாங்கித் தருவா... அம்மா ஒண்ணும் வாங்கித் தரமாட்டா... திட்டிண்டே இருப்பா!'' என்கிறாள் சரஸா.

''அப்படியா சேதி? ஒன்னைத் திட்டறாளா? அவ?.... இருக்கட்டும், பார்த்துக்கறேன்!'' என்று விளையாட்டாகக் கறுவுகிறார் அவர்.

''ஏண்டி கோள் சொல்றே? நான் எப்ப ஒன்னைத் திட்டினேன்?'' என்கிறாள் செல்லம்.

சரஸா இரண்டு கைகளாலும் அவர் கழுத்தைச் சுற்றி வளைத்துக் கொண்டு, ''அப்பா, அப்பா! மத்தியானம் நான் சர்க்கரை திருடினேன்னு என்னைத் திட்டினாப்பா...'' என்கிறாள்.

''நீ திருடலாம், நான் சொல்லக்கூடாதா? திருடி!...'' என்கிறாள் செல்லம்.

''பாருப்பா!'' சரஸா முறையிடுகிறாள்.

அவர் அவளைச் சேர்த்துக் கட்டிக்கொண்டு, ''கொழந்தே கொஞ்சம் சக்கரையை எடுத்துத் தின்னா அதுக்குத் திருடின்னு சொல்றதா என்ன?.... நீ சும்மா இரு, சரஸா! அவ மூக்கை நறுக்கிக் காக்காய்க்குப் போட்டுடலாம்'' என்கிறார்.

மூக்கை நறுக்கிக் காக்காய்க்குப் போட்டு விடுவேன் என்று செல்லத்தை நோக்கிப் பாவனை செய்கிறாள் சரஸா...

திருட்டு யோசனையோடு நடந்த ராமச்சந்திரனை விர்ரென்று அசுர வேகத்தில் தாண்டிக் கொண்டு ஒரு கார் பறந்தது. தூரத்திலே டிங்டிங் என்ற மணியோசையோடு மூடிக் கொண்டிருந்த பழைய மாம்பலம் லெவல் கிராசிங்கைக் கடப்பதற்கான வேகம் அது. குண்டும் குழியுமாய் இருந்தாலும் பரவாயில்லை என்று அவர் நடைபாதையின் மேல் ஏறிக் கொண்டபோது காரின் வேகத்தை லட்சியப்படுத்தாமல் ரோட்டின் குறுக்கே ஒரு பையன் ஓடி வந்தான்.....

''டேய்.... டேய்!'' என்று அவர் கத்துவதற்கும் சட்டென்று பிரேக்கை மிதித்து டிரைவர் காரை நிறுத்துவதற்கும் சரியாக இருந்தது. மயிரிழையில் தப்பிய பையன் ஓடிய வேகத்தில் கீழே விழுந்தான். ஆபத்தில்லை என்று தெரிந்து கொண்ட டிரைவர்

அழுத்திய பிரேக்கை விடுவித்துக் கொண்டு பறந்து விட்டான்.

''ஏண்டா, ஜிராக்கு....இத்தனை நேரம் கார் மேலே ஏறி யிருக்கும். தெரியுமா?....'' என்று திட்டே போய் அந்தப் பையனைத் திட்டினார் ராமச்சந்திரன்.

சன்னையம்மாப் பேட்டைக் குடிசையில் வாழும் ஏழைப் பையன் அவன். கன்னங்கரேலென்ற தேகம். இடுப்பில் ஒரு கிழிசல் நிஜார். கீழே விழுந்ததில் முட்டி சிராய்த்துப் போய் ரத்தம் கசிந்தது. கீழ் உதட்டைப் பிதுக்கிக்கொண்டு கண்ணைக் கசக்கியவாறு அவன் அழுதபோது, டிப்தீரியாவில் செத்துப் போன தமது மகன் கணேசனின் ஞாபகம் வந்தது அவருக்கு. ''அழாதே... எழுந்திரு... ரோடு பார்த்துப் போ!....'' என்றார் இரக்கத்தோடு.

அதற்குள் எதிர்ச்சாரிக் குடிசையொன்றில் திண்ணை மேல் அம்மிக்கு எதிரில் உட்கார்ந்து மசாலா அரைத்துக் கொண்டிருந்த பெண் ஒருத்தி, ''ஏ, மங்கம்மா.... இதப் பாரு. ஒன் புள்ளே வண்டியிலே மாட்டிக்கிட்டான்!'' என்று கூவ, இன்னொரு பெண் புயல் போல வெளியே வந்தாள். விடுவிடு என்று அந்தப் பையனை நெருங்கி அவன் கும்பிய கையை முறுக்கித் தூக்கிப் பொத்து பொத்தென்று அவன் முதுகில் நாலு அடி வைத்தாள்.

''எழுந்திருடா, பேமானி! ஒன் சங்காத்தி யத்தே இன்னிக்கி ஒழிக்கறேன்.... ஒங்கப்பன் வரட்டும். ஒன் உயிரே எடுக்கச் சொல்றேன்!'' என்று கத்திக் கொண்டே இன்னும் நாலு அடி வைத்தாள்.

''இல்லேம்மாவ்.... அடிக்காதேம்மாவ்.'' என்று பையன் மேலும் அழுதான்.

''போணமே!.... ஓடினியே.... வண்டிக்கு முன்னாலே விழுந்து சாகிறதுதானே? உயிரே வச்சுண்டு ஒப்பாரியா வக்கிறே?....''

ராமச்சந்திரனால் பொறுக்க முடியவில்லை.

''ஏம்மா?.... இந்தப் பையனைப் பெத்தவ தானே நீ? வாய்க்கு வந்தபடி பேசறியே?''

அவள் அவரை எரித்துவிடுவதுபோல் பார்த்தாள். ''பெத்தவதான் சாமி! அதனாலேதான் பேசறேன். வேறே யாராச் சுமா இருந்தா அழுவாதேம்மான்னு சொல்லிப்பூட்டுப் போயிடலாம். நான் போக முடியாதே...... பசி எடுக்குது, சோறு போடுன்னு கூச்சல் போட்டான். ஒங்கப்பன் வரட்டும்னு அடிச்சு வெரட்டினேன். இங்கே வந்து விழுந்து கெடக்கான்.... ராவுக்கு இவனுக்குச் சோறு போட்டாகணுமே. விடிஞ்சா சோறு போட்டாகணுமே. பொழுதுக்கும் இவன் ரோதனைக்கி நான் எங்கே போவேன்? எங்கேந்து கொணாந்து இவன் வயித்தே ரொப்புவேன்? அதனாலேதான் சாவட்டும்னு சொல்றேன்.... சாவட்டும்! பெத்தவளா இருக்கக் கொண்டுதான் சொல்றேன். அது தப்புன்னு யாராச்சும் சொல்லட்டுமே. சொல்றதுக்கு யாருக்குப் பவிசு இருக்கு...?'' என்று பொரிந்தாள் அவள்.

அவள் பேச்சுக்குப் பதில் சொல்ல முடியாமல் மேலே நடந்தார் ராமச்சந்திரன்....

ஒரு ஜீவனைப் பெற்றெடுப்பது தாய்க்குப் பெருமைதான். ஆனால் உயிரைத் தந்துவிட்டு அந்த உயிரின் நியாயமான — வாழ்வுக்கு அடிப்படையான-கோரிக்கைகளை நிறைவேற்ற முடியாத போது, அந்தப் பெருமையையே நிராகரிக்கும் வெறி ஏற்பட்டுவிடுகிறது.

அந்த வெறியில்தான் அவள் ஓலமிடுகிறாள். அதற்கு என்ன பதில் சொல்வது? அந்த ஓலம் அவர் நெஞ்சில் மட்டும் இல்லையா, என்ன? அவரால் வாய்விட்டுச் சொல்ல முடியவில்லை. அவ்வளவுதான் வித்தியாசம்.

''ஹூம்!'' என்று சிரித்தார் அவர்.

இரண்டு மைசூர்பாகுப் பொட்டலம் வாங்கிவிட்டதில் அவருக்கு அத்தனை கர்வம்? அவர் மனசில் எத்தனை ஆர்ப்பாட்டம்? உண்மையில் சரஸா அவரிடம் மைசூர்பாகு மட்டுமா கேட்டாள்? தனக்கு ஒரு திருப்தியான வாழ்வையும் அல்லவா கேட்கிறாள்? வாழ்வில் மைசூர்பாகுக்கு இடம் உண்டு. மைசூர்பாகு வாழ்வாகி விடுமா?....

தன்னை அண்டியிருப்பவர்களுக்கு ஒரு முழுமையான வாழ்வைத் தர முடியாமல் தவித்துக் கொண்டு, அந்தத் தவிப்புக்கு நடுவில் எப்போதாவது ஒரு சின்ன ஆசையைப் பூர்த்தி செய்து வைப்பது தம்முடைய ஓர் ஆறுதலுக்காகத்தான். அதில் என்ன பெருமை? என்ன வெற்றி?

''சரஸாக் குட்டீ! இந்த மைசூர்பாகு ஒனக்காக வாங்கலேடி. எனக்காகத்தான் வாங்கினேன். இதெ வாங்கித் தராட்டா நீ சும்மாத்தான் இருக்கப் போறே. ஆனா இதெக்கூட வாங்கித் தராம என்னாலே சும்மா இருக்க முடியல்லே!'' என்று அவர் தமக்குத் தாமே சொல்லிக் கொண்டார்.



மனைவி: எங்கேயாவது கடன் வாங்கியாவது எனக்கு ஒரு கார் வாங்கித் தந்துடுங்கோ!

கணவன்: ஏண்டீ எதுக்கு?

மனைவி: 'டிரைவிங் பாங்'குலே அக்கௌண்ட் 'ஓபன்' பண்ணணும்னு ஆசையா இருக்கு!



- நல்லுறவு
- காலமெல்லாம் கல்விக்கே!
- குறை சொல்வானேன்?

எனது கணவர் ஒரு சாதாரண மேல் பிரிவு குமாஸ்தா. சம்பளமோ மாதம் 178 ரூபாய். ஆனால் என் கைக்கு வருவதோ 140 தான். மீதியைத் தபால் இலாக்காவுக்குச் செலவழித்து விடுகிறார். இவருக்கு அயல்நாடுகளில் நண்பர்கள் நிறைய உண்டு. அமெரிக்கா, ஹங்கேரி, ஹாலந்து பத்திரிகைகளில் இவரது முகவரியுடன் இரண்டொரு கடிதங்கள் பிரசுரமானதைத் தொடர்ந்து நாள்தோறும் நிறையக் கடிதங்கள் வந்து கொண்டிருக்கின்றன. நமது நாட்டைப் பற்றி அறிந்து கொள்ளத் துடிக்கும் பல நண்பர்கள் எழுதுகிறார்கள்.

இருநூற்று ஐம்பதுக்கும் அதிகமான அமெரிக்க நண்பர்களுக்கு இந்திய நண்பர்களை அறிமுகப்படுத்தியுள்ள இவருக்கு 300 இளைஞர்கள் ரிப்ளை கார்டு அனுப்பி முகவரி கேட்டிருக்கிறார்கள்! அமெரிக்காவில் உள்ள சேலம் நகருக்கும், இங்குள்ள சேலம் நகருக்குமிடையே வளர்ந்துள்ள 'இரு நகர இணைப்பி'ல், மிகுந்த அக்கறை கொண்டுள்ளவர் இவர்.

சென்ற பொங்கல் தினத்தன்று ஓர் அமெரிக்கத் தம்பதியை வீட்டுக்கு அழைத்து வந்து உபசரித்து, நான் போற்றி வந்த அழகிய சரஸ்வதி சிலை ஒன்றை அன்பளிப்பாகக் கொடுத்து விட்டார். தமிழ், சம்ஸ்கிருதம், இந்தி தெரிந்த ஜெர்மன் நண்பர் ஒருவருக்கு நடராஜர் சிலை (விலை: ரூ.35) ஒன்று அனுப்பி வைத்தார். (நல்ல வேளை! கோவையில் உள்ள அந்தக் கடைக்காரர் வருடம் ஒன்றாகியும் இன்னமும் பணம் கேட்கவில்லை!) சமீபத்தில் அமெரிக்கப் பேராசிரியர் ஒருவரும் ஹாலந்திலுள்ள பிரபல பார்லிமெண்ட் உறுப்பினர் ஒருவரும் இவருக்கு அறிமுகமாகியிருக்கிறார்கள். இவர்கள் நமது நாட்டைப் பற்றி அக்கறை காட்டியதால் 'ஹிந்து வீக்லி ரிவ்யூ'வுக்கு இவர்கள் சார்பாக ஆறு மாத அடையான நன்கொடை செலுத்த முற்பட்டு விட்டார். ஆறு மாத விமானப்பதிப்பு சந்தாவான நாற்பத்திரண்டு ரூபாயையும் மாதம் ஐந்து ரூபாய் வீதம் ஒன்பது மாதத் தவணையில் பணம் செலுத்துவதாகத் தெரிவித்து இந்த நண்பர்களுக்குப் பத்திரிகை அனுப்ப 'ஹிந்து' நிர்வாகிகளைக் கேட்டிருக்கிறார். கூடுதலாக வருமானம் இல்லையே என்ற கவலை இவருக்கு நிறைய இருக்கிறது. அயல்நாடுகளுடன் பாரதம் நல்லுறவுகளை வளர்த்துக் கொள்வதில் அக்கறை கொண்டவர்கள் இவருக்குப் பணமாக எதுவும் கொடுக்காமல் போனாலும், தபால் கார்டு, கவர், ஸ்டாம்பு முதலியவை கிடைக்கச் செய்தும் அயல் நாட்டவருக்கு இவர் அனுப்பக் கூடிய சில பத்திரிகைகளுக்குச் சந்தா கட்டியும் உதவினால் நன்றாயிருக்கும்.

64. செங்கொடிபுரம்
தர்மபுரி–1
14–4–66 — வசந்தா – பாலசுந்தரம்

சென்ற மே 1ந் தேதி இதழில் 'காலமெல்லாம் கல்விக்கே' என்று ஸ்ரீ நாகசுப்பிரமணிய ஐயர் அவர்களின் விஷயமாய் எழுதியிருந்தேன். அதில் ஸ்ரீ எம். என். ஐயர் அவர்களின் மூத்த மகனைக் குறை கூறியிருப்பதாகக் கருதி அவர் மனத்தாங்கலுற்றாராம். வாக்கிய அமைப்பு இதற்குக் காரணமாயிருக்கலாம். என்ன துரதிர்ஷ்டம்! அவரையோ வேறு எவரையுமேயோ குற்றஞ் சாட்டவோ, குறை சொல்லவோ, பழி சுமத்தவோ வேறுமென்ற எண்ணமே எனக்குக் கிடையாது. நான் சிறிதும் கருதாத இத்துர்ச் சம்பவத்துக்கு வருந்துகிறேன்.

சென்னை — ஸ்ரீ ஹரி
18-5-66

வட்டமேஜை பகுதியில் ஸ்ரீமதி ருக்மிணி அவர்களின் கடிதத்தைக் கண்ணுற்று ஆச்சரியம் அடைந்தேன். எல்லாப் பொருள்களின் விலைகளும் நிமிஷத்துக்கு நிமிஷம்விஷம் போல் ஏறிக் கொண்டிருக்கும் போது, வீட்டுக்காரர்கள் வாடகை அதிகம் கேட்பது மாத்திரம் அவர் கண்ணை ஏன் உறுத்துகிறதோ தெரியவில்லை. வீட்டுக்காரர்களும் குடியிருப்பவர்களும் ஒரே வீட்டில் இருந்து பழகிவிட்டால் பிறகு வாடகையை உயர்த்தவே முடிவதில்லை. பழையவர்கள் காலி செய்து புதியவர்கள் வரும் போதுதான் கொஞ்சம் உயர்த்த முடிகிறது. ஆனால் பழையவர்கள் ஏன் காலி செய்கிறார்கள்? அவர்கள்தான் புருஷனும் பெண்சாதியுமாக இரண்டு அறையை எடுத்துக் கொள்பவர்கள், ஐந்து குழந்தைகள் பெற்ற பிறகும் காலி செய்யாமல் எப்படியோ 'அட்ஜஸ்ட்' செய்து கொண்டு இருக்கிறோம் என்று இருந்து விடுகிறார்களே! எங்களைப் போன்ற 'நடுத்தரங்கள்' வருமானம் போதாமல் குடியிருக்க இடம் கொடுத்து உதவி செய்தால், குறை சொல்வானேன்? குற்றம் கண்டு பிடிப்பது என்று ஆரம்பித்தால் இரு சாராரிடமும் நிறைய இருக்கும்.

மதுரை
19–5–66 — எம். என். வேங்கடராமன்

Edited printed & published by T. Sadasivam on behalf of Messrs. Bharathan Publications Private Ltd., at the Kalki Press, Kilpauk, Madras-10


தோல்வி அவளை எதிர்நோக்கி நின்றது!
அவள் என்னவோ நன்ருகப் படித்துக் கொண்டுதான் வந்தாள். ஆனுல் பரீட்சைக்கு சில வாரங்களே இருந்தபோது அவளுக் குப் படிப்பில் அக்கரையே இல்லாமல் போய்விட்டது...
அவளை டாக்டரிடம் அழைத்துச் சென்ருேம். படிப்பில் அதிக நேரம் செலவழித்ததால் ஏற்பட்ட ஒய்ச்சல் மட்டும் அல்ல. அது என்றும், செலவழியும் சக்தியை ஈடு செய்யப் போதுமான போஷாக்குக் கிடைக்காமையும் காரணம் என்று டாக்டர் சொன்ஞர்.
Horlicks
டாக்டர் சிபாரிசு செய்தபடியே அவளுக்கு ஹார்லிக்ஸ் கொடுத்து வந்தோம். விரைவிலேயே மீண்டும் ஊன்றிப்படிக்க ஆரம்பித்ததோடு பரீட்சையிலும் முதன்மை பாகத் தேறிஞள். எல்லாம் ஹார்லிக்ஸ் செய்த நன்மைதான்!
வளரும் குழந்தைகளின் சக்தி மிக விரைவில் செலவழிந்து விடுகிறது. இந்த சக்தி முழுவதும் ஈடு செய்யப்படாவிடில் அவர்கள் களைப்புற்று எதிலும் ஊன்றிக் கவனம் செலுத்த முடியாமல் ஆகி விடுகிருர்கள். ஹார்லிக்ஸ் குழந்தைகளுக்குத் தேவையான அதிக போஷாக்கை அளித்து அதிக சக்தியை யூட்டுகிறது என்பதை டாக்டர்கள் அறிவார்கள். ஆடைச் சத்து மிகுந்த பால், கோதுமை மாவு, மால்ட் பார்லி, இவற்றின் போஷாக்கும் சத்துக்களைக் கொண்ட ஹார்லிக்ஸ் சோர்வை போக்க அதி ஆச்சரியமான முறையில் உதவுகிறது.
ஹார்லிக்ஸ்
அதிக சக்தி யளிக்கிறது!
Horlicks
JWT-HL-3497A



REGISTERED No. M. 4352
Registered as a Newspaper in Ceylon
தக்க புகையிலை
தக்க கலவை
தக்க திடம்
தக்க பொதிவு
பனாமா
ஒரு நல்ல சிகரெட்
Panama
20
பாரதத்தில் இத்தகைய தேசீய ஸ்தாபனங்களில் மிகப் பெரியது
GT (P) 654-C 1em Greens' Advg.